**Recent Tamil Books from India – April 2022**

**Mary Martin Booksellers Pte Ltd**
**Blk 231, Bain Street**
**#03-05, Bras Basah Complex**
**Singapore 180231**
**Tel : +65-6883-2284/6883-2204**
**info@marymartin.com**
**www.marymartin.com**

## Archaeology/Anthropology

வைகைவெளி தொல்லியல்: கற்காலம் முதல் கட்டுமானக் காலம் வரை = Vaikaiveḷi Tolliyal: Karkālam Mutal Kaṭṭumāṇak Kālam Varai / பாவெல்பாரதி = Pāvelpārati
மதுரை: கருத்து பட்டறை = Karuttu Paṭṭarai, Maturai, 2021
304p.; ills. 22 cm.
9789391077198
$ 17.50 / hb
580gm.

வைகைவெளியில் கிடைத்த தொல்லியல் சான்றுகள் வரலாற்று ஆர்வலர்களிடம் ஒரு புதிய உற்சாகத்தைத் தோற்றுவித்திருக்கின்றன. கீழடி அகழ்வாய்வுகள் தொடர்பில் சில புத்தகங்கள் வெளிவந்திருந்தாலும், வைகை ஆற்றுச் சமூகம் பழைய கற்காலம் முதல் சங்க காலம் வரை எப்படியெல்லாம் மாற்றமடைந்துவந்துள்ளது என்பதை வரிசைப்படுத்தி ‘வைகைவெளி தொல்லியல்’ என்ற புத்தகத்தை எழுதியிருக்கிறார் பாவெல்பாரதி. வைகை தொல்லியல் பண்பாட்டுக் கழகம் என்ற அமைப்பை நிறுவி நடத்திவரும் பாவெல்பாரதி, இந்நூலில் தொல்லியலுடன் மானிடவியல், நாட்டாரியல் ஆய்வுகளையும் இணைத்திருப்பது சிறப்பு. கருத்துப்பட்டறை வெளியிட்டுள்ள இந்நூலுக்கு முதுபெரும் தொல்லியல் அறிஞர் ர. பூங்குன்றன் அணிந்துரை எழுதியுள்ளார்.
**http://www.marymartin.com/web?pid=800425**

------------------------------------------------------------------------------------

சங்ககாலத் தமிழர் உணவு: பண்டைய அடிசில் முறைகள் = Cankakālat Tamilar Uṇavu: Paṇṭaiya Aṭicil Muraikaḷ / பக்தவத்சல பாரதி = Paktavatcala Pārati
நாகர்கோவில்: காலச்சுவடு பதிப்பகம் = Kālaccuvaṭu Patippakam, Nākarkōvil 2021
165p.; 22 cm.
9789391093211
$ 5.00 / pb
230gm.

முனைவர் பக்தவத்சல பாரதி தமிழ்ச் சூழலின் மானிடவியலை முன்னெடுத்தவர். மானிடவியலை முறையாகப் படித்தவர்கள் சங்கப்பாடல்களை ஆய்வுக்கு எடுத்த பிறகுதான் தமிழரின் இன அறவியலின் ஒருபகுதி, அவர்களின் உணவுப் பண்பாடு என்னும் விஷயம் வெளிப்படுகிறது. தமிழரின் முக்கிய விழுமியம், பகிர்ந்துண்ணும் பண்பு. பாட்டுத் தொகை நூற்களில் 81 இடங்களில் விருந்து என்ற சொல் வருகிறது. உலகளாவிய 'உணவு விலக்கு' தமிழர்களிடமும் உண்டு; சைவ/அசைவ உணவு வகைகளைச் சமைக்க தனித் தனிச் சட்டிகளைப் பயன்படுத்தினர். இப்படியாகப் பல விஷயங்களைக் கவனப்படுத்துகிறார் பக்தவத்சல பாரதி. சங்கப் பண்பாட்டின் வரலாற்றை அறிவதில் இந்நூலின் பங்களிப்பு மிக முக்கியமானதாகும்.
**http://www.marymartin.com/web?pid=793975**

-------------------------------------------------------------------------------------------

தமிழக மரபுச் சுவடுகள் = Tamilaka Marapuc Cuvaṭukaḷ / குடவாயில் பாலசுப்ரமணியன் = Kuṭavāyil Pālacupramaṇiyaṇ
தஞ்சாவூர்: அன்னம் = Aṇṇam, Tañcāvūr, 2021
342p.; ills. 22 cm.
$ 15.00 / pb
480gm.

இந்நூலின் ஆசிரியரான முதுமுனைவர் குடவாயில் பாலசுப்பிரமணியன் 1948 ஆம் ஆண்டு திருவாரூர் மாவட்டத்து குடவாசலில் பிறந்தவர். விலங்கியல் துறையில் அறிவியல் இளங்கலைப் பட்டம் பெற்று பின்னர் வரலாற்றுத் துறையில் எம்.ஏ., எம்ஃபில் பட்டங்களையும், கோயிற் கட்டடக் கலையில் முனைவர் பட்டமும் பெற்றவர். 2016ஆம் ஆண்டில் சாஸ்திரா பல்கலைக் கழகத்தின் முதுமுனைவர் பட்டமும் பெற்றவர்.
**http://www.marymartin.com/web?pid=800453**

--------------------------------------------------------------------------------

பொற்றைக்காடு = Porraikkāṭu / மு. வேலையன் = Mu. Vēlaiyaṇ
சென்னை: காவ்யா பதிப்பகம் = Kāvyā Patippakam, Ceṇṇai, 2021
xxiv, 337p.; 22 cm.
$ 18.00 / pb
500gm.

குமரி மாவட்டத்தில் உள்ள முள்ளஞ்சேரி மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் 60 ஆண்டுகளுக்கு முன்பு எப்படிவாழ்க்கை இருந்தது என்பதை அசைபோடும் நூல். அந்தப் பகுதிகளில் இருந்த உணவுமுறைகள், விளைபொருள்கள், மக்களின் பழக்க, வழக்கங்கள், தொழில்கள், கடைகள், சந்தைகள், கள், சாராயப் பழக்கங்கள் என அன்றைய வாழ்வைப் பற்றிய தகவல்கள் சுவையாக விவரிக்கப்பட்டுள்ளன.
**http://www.marymartin.com/web?pid=800353**

------------------------------------------------------------------------------------------

தாய்வழிச் சமூகம்: வாழ்வும் வழிபாடும் = Tāyvalic Camūkam: Vālvum Valipāṭum / கோ. சசிகலா = Kō. Cacikalā
சென்னை: தடாகம் வெளியீடு = Taṭākam Veḷiyīṭu, Chennai 2020
148p.; ills. 22 cm.
9789388627160
$ 8.00 / pb
230gm.

தாய்வழிச் சமூகமாக பன்னெடுங்காலமாக தன் இயல்பில் மாறாது வாழ்ந்து வளர்ந்து வரும் தமிழ்ச்சமூகத்தின் கட்டமைப்பானது, பெரும்பாலும் பிரபஞ்ச உற்பத்தியின் இயக்க அடிப்படைக் கோட்பாடுகளை நன்கு உள்வாங்கி கொண்டதால் தான் உறுதிபெற்றது என்பதனை இந்நிலத்தில் காலந்தோறும் நிகழ்ந்து வரும் வழிபாட்டு சடங்குகள் மட்டுமின்றி அதன் கலை மற்றும் பண்பாட்டு ரீதியாகவும் நன்குணர முடிகிறது. உலகம் முழுமையும் தாய்வழிச் சமூகமாக இருந்து பின் வீரயுகத்திலும், உபரி உற்பத்தியாலும் தந்தைவழிச் சமூகமாக மாறிய நிலையிலும் அதன் தொல் நிலையை விடாது கைக்கொண்ட ஒரு சில குறிப்பிட்ட சமூகங்களில் தமிழ்ச் சமூகம் முதன்மையானது. அந்த நிலைப்பாட்டை இந்நூல் கலை வரலாற்று அடிப்படையிலும், இலக்கியங்களின் வாயிலாகவும் விளக்குகின்றது. தாய்வழிச் சமூகம், காலப்போக்கில் தந்தைவழிச் சமூகமாக மாறியபோதிலும், தாய்வழிச் சமூகத்தில் தாய் பெற்றிருந்த முதன்மையை, அதன் நெறியை, நிலைத்த தன்மையை இன்றும் முழுமுதற் எச்சங்களாக பரவலாக பேரரசின் பெருங்கோயில்கள் முதல் பல்குடிகளின் வழிபாடுகள் வரை காணமுடிகிறது. இந்நிலையில் அந்த தொன்ம சடங்கு மற்றும் வழிபாட்டு நிலையிலும், கலைகளிலும், அகழ்வுகளில் கிடைக்கும் தொல் பொருட்களிலும் காணப்பெற்றமையை தொகுத்தும், விளக்கியும் தாய்வழி சமூகத்தின் உயர்நனி சமூகமாக தமிழ்ச்சமூகம் விளங்கியது என்பதை தாய்த்தெய்வ வழிபாடு, வளமைச்சடங்குகள் மற்றும் சமூகத்தில் பெண்மையின் நிலையைப் போற்றியிருந்த தன்மை ஆகியவற்றை இந்நூல் விளக்குகிறது. ஆதிச்சநல்லூர் தொல்லியல் தரவுகளையும், சங்க இலக்கிய கொற்றவைப் பாடல்களையும் ஒப்பியல் ரீதியில் பொருந்திக்காட்டுவது உள்ளிட்ட பல்வேறு தாய்வழிபாட்டுப் பொருண்மைகளை சிற்பங்கள், ஓவியங்கள், கல்வெட்டுகள் மூலமாகவும் இந்நூல் எடுத்தியம்புகிறது.
[http://www.marymartin.com/web?pid=749967](http://www.marymartin.com/web?pid=749967)
--------------------------------------------------------------------------------
**Biography/Memoirs**

இலக்கில்லாப் பயணங்கள் = Ilakkillāp Payaṇankaḷ / பவா செல்லதுரை = Pavā Cellaturai
திருவண்ணாமலை: வம்சி புக்ஸ் = Vamci Puks, Tiruvaṇṇāmalai, 2021
160p.; 22 cm.
97893937253904

$ 7.50 / pb
250gm.
http://www.marymartin.com/web?pid=799952
--------------------------------------------------------------------------------
நூல்கள் நூலகங்கள் நூலகர்கள் = Nūlkaḷ Nūlakankaḷ Nūlakarkaḷ /
சச்சிதானந்தன் சுகிர்தராஜா = Caccitāṇantaṇ Cukirtarājā
நாகர்கோவில்: காலச்சுவடு பதிப்பகம் = Kālaccuvaṭu Patippakam, Nākarkōvil
2021
175p.; 22cm.
9789391093198
$ 10.00 / pb
270gm.

அபூர்வமான தகவல்களும் மென் நகைச்சுவையும் இழைந்தோடும் சச்சிதானந்தன் சுகிர்தராஜாவின் பத்திகள் சரள நடைக்குப் பேர்போனவை. ‘காலச்சுவடு’, ‘காலம்’ உள்ளிட்ட இதழ்களில் வெளிவந்த அவரது பத்திகள் அடங்கிய தொகுப்பு இது. சுஜாதா, அசோகமித்திரன் முதலியோரின் படைப்புகள், ஆளுமைச் சித்திரங்களில் தொடங்கி, ஜப்பான் அரசு நடைமுறைப்படுத்திய ‘ஆறுதல் அணங்குகள்’ குறித்த நூல்கள், சதாம் ஹுசைன் போன்ற சர்வாதிகாரிகளின் நாவல்கள், ஆக்ஸ்போர்ட் ஆங்கில அகராதி முதலியவை உருவான விதம், அகராதி, சொற்களஞ்சிய உருவாக்கங்களில் மறைக்கப்பட்ட பெண் பங்களிப்பு, பிரசித்திபெற்ற மேற்கத்திய நூலகங்கள் பற்றிய அனுபவம், எழுத்துத் திருட்டு, ஆசிரியர் வாசித்த நாவல்கள், அ-புனைவுகள், புத்தகம் பற்றிய புத்தகங்கள், உலக அளவில் பரிசுகளை வென்ற, வெல்லாத நூல்கள் குறித்த அறிமுகங்கள் எனப் பல்வேறு நதிகளில் நீந்திக் கரையேறுகிறது இந்நூல். புத்தகத்தின் மீதான தன் தீராக் காதலை வார்த்தைக்கு வார்த்தை, வரிக்கு வரி வாசகரிடத்தில் வெகு சுவாரசியமாகக் கடத்துகிறார் சுகிர்தராஜா.
http://www.marymartin.com/web?pid=781272
-----------------------------------------------------------------------------------
பண்டிதர் 175 = Paṇṭitar 175 / ஸ்டாலின் ராஜாங்கம் = Sṭāliṇ Rājānkam
சென்னை: நீலம் வெளியீடு = Nīlam Veḷiyīṭu, Ceṇṇai, 2022
334p.; 25 cm.
$ 22.50 / pb
730gm.

க. அயோத்திதாசப் பண்டிதரின் 175வது பிறந்த நாளை முன்னிட்டு தலித் உரையாடல் அவை சிறப்பு வெளியீட்டினை வெளியிடுகிறது. அறிஞர் அன்பு பொன்னோவியம் அவர்கள் எழுதிய பண்டிரின் வாழ்க்கைக் குறிப்புகள் அடங்கிய கையடக்கச் சுவடி மொபைலில் படிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.
http://www.marymartin.com/web?pid=800439
---------------------------------------------------------------------------
நானும் நீதிபதி ஆனேன் = Nāṇum Nītipati āṇēṇ / கே. சந்துரு = Kē. Canturu

சென்னை: அருஞ்சொல் வெளியீடு = Aruñcol Veḷiyīṭu, Ceṉṉai 2021
480p.; 23 cm.
$ 25.00 / pb
560gm.

Biography
அன்புள்ள சந்துரு, சமூகத்தில், கடையருக்கும் கடையருக்காகப் பணியாற்றுவதற்கு ஏதுவாக நீங்கள் பணி ஓய்வுபெற முடிவெடுத்திருப்பது ஒரு மகத்தான தியாகம். கருப்பு அங்கி அணிந்திருக்கும். லட்சிய தாகம் கொண்ட சகாக்கள் வியந்து பார்க்கும் ஒருவராக இருங்கள். உங்களின் பொது வாழ்க்கை என்பது ஒட்டுமொத்த மனிதகுல நலனுக்குமான பிரார்த்தினையாகும். ஒரு நாள் நாம் இருவரும் சந்திப்போம். -- வி. ஆர். கிருஷ்ணய்யர்
சந்துருவினுடைய முக்கியத்துவமானது, அவருடைய வேகத்திலும் விவேகத்திலும் மட்டும் இல்லை: தன்னால் இயன்ற சீர்திருத்தத்துக்கு முற்படும் அவருடைய சமத்துவத் தேட்டத்திலும், தயக்கமே இல்லாமல் தன்னுடைய துறையையே சுயவிமர்சனத்துக்குள்ளாக்கும் தார்மீகத்திலும் இருக்கிறது. இந்திய நீதித் துறை வரலாற்றில் முன்னுதாரணம் இல்லாத ஒரு நூல் என்று இதைத் தாராளமாகச் சொல்லலாம்.
[http://www.marymartin.com/web?pid=791749](http://www.marymartin.com/web?pid=791749)
------------------------------------------------------------------------------------
கலைஞர் என்னும் மனிதர் = kalaiñar Eṉṉum Maṉitar / மணா = Maṇā
திருப்பத்தூர்: பரிதி பதிப்பகம் = Parithi Pathipagam, Tiruppattūr Māvaṭṭam, 2021
352p.; ills. 25 cm.
9788194579779
$ 25.00 / hb
1030gm.

Biography
கலைஞர் என்னும் மனிதர் என்ற தலைப்பின் கீழ் கலைஞர் அவர்கள் எவ்வளவுக்கெவ்வளவு முழுமையாக நிறைந்துள்ளாரோ - அதே அளவிற்கு மணா என்னும் பத்திரிகையாளர் என்று தலைப்பு வைக்கும் அளவிற்கு நிறைந்திருப்பவர் மணா என்கிற லட்சுமணன். தமிழ் இதழியலின் நீண்ட பயணத்தில் - ஒரு பத்திரிகையாளராக - படைப்பாளராக - 40 ஆண்டுகள் பயணிப்பதென்பதும் யாவர்க்கும் தோழனாக இருப்பதென்பதும் பாராட்டப்படவேண்டிய ஒன்று. சிறு பத்திரிகைகளில் கவிதை - சிறுகதை என்று எழுத்துலகத்துக்குள் நுழைந்தவர் - காட்சி ஊடகம் மற்றும் ஆவணப்படங்களின் இயக்குநராகவும் தன்னைப் பதிவு செய்திருப்பவர். பல ஆளுமைகள் குறித்த நூல்களை எழுதியுள்ள மணா முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களுக்காக - கலைஞர் என்னும் மனிதர் நூல் வழியாக மீண்டும் நம் கரங்களை பற்றிக் கொள்கிறார். நீதியரசர் கிருஷ்ணய்யர் விருது - பி. ராமமூர்த்தி விருது போன்ற முக்கிய விருதுகளைப் பெற்றவர்

என்றாலும்கூட ... எல்லா அரசியல் தலைவர்களும் நம்பிக்கை கொண்ட ஒரு இதழியலாளர் என்ற நற்பெயரை சிறந்த விருதாகக் கருதுபவர். இவரின் நீண்ட எழுத்துப் பயணத்தின் அடையாளமாக நாற்பதாவது நூலாக இந்த நூலை வெளியிடுவதில் பரிதி பதிப்பகம் பெருமிதம் கொள்கிறது.
**http://www.marymartin.com/web?pid=775360**
------------------------------------------------------------------------------------------
SPB பாடகன் சங்கதி = SPB Pāṭakaṉ Cankati / கானா பிரபா = Kāṉā Pirapā
செங்கல்பட்டு: அகநாழிகை = Akanālikai, Cenkalpaṭṭu 2022
448p.; ills. 22 cm.
9788195164806
$ 25.00 / pb
580gm.

Memoirs
தமிழ்நாட்டிலிருந்து தொலைதூரத்தில் இருந்தாலும் தமிழ்த் திரை இசைக்கு மிகவும் பக்கத்தில் இருப்பவர் என் இனிய நண்பரான கானா பிரபா. தமிழிலே வெளியான பெரும்பாலான திரைப்பாடல்களைப் பற்றிய முழுமையானத் தகவல்களைத் தன்னுடைய மனதிலே இவரால் பதிந்து வைத்திருக்க முடிகிறது என்றால் அதற்கு அடிநாதமாக இருப்பது தமிழ்த் திரைப்பாடல்கள் மீது இவருக்குள்ள அளவில்லாத காதல்தான். இசையின் காதலனான கானா பிரபாவிற்கு எஸ்.பி. பாலசுப்ரமணியத்தின் மீது இருக்கும் காதலின் பிரதிபலிப்புதான் இந்த 'SPB பாடகன் சங்கதி' என்ற நூல். எஸ்.பி. பாலசுப்ரமணியத்தோடு அன்றாடம் பழகியவர்கள் கூட இப்படி ஒரு நூலை எழுதியிருக்க முடியாது என்று கூறத்தக்க அளவில் பல புதுப்புது தகவல்கள் இந்த நூலிலே இருக்கின்றன. எஸ்.பி. பாலசுப்ரமணியம் என்ற அந்த மகா கலைஞனுக்கு காலத்தைக் கடந்து நினைவிலே நிற்கக் கூடிய அருமையான பதிவுகள் மூலம் அஞ்சலி செலுத்தியுள்ள கானா பிரபாவிற்கு வாழ்த்துகள். - சித்ரா லட்சுமணன், திரைப்படக் கலைஞர்.
**http://www.marymartin.com/web?pid=800401**
--------------------------------------------------------------------------------
நல்லாரைக் காண்பதுவும் = Nallāraik Kāṇpatuvum / டி. கே. எஸ். கலைவாணன் = Ti. Kē. Es. Kalaivāṇaṉ
சென்னை: வானதி பதிப்பகம் = Vāṇati Patippakam, Chennai, 2021
xviii, 398p.;
$ 17.50 / pb
500gm.

Memoirs
ஆழ்ந்த தமிழறிவும், சிறந்த இசைஞானமும் கொண்ட இவர் நாடறிந்த ஓர் தலை சிறந்த தமிழிசைக் கலைஞராவார். தம் இனிய குரலால் உலகெங்கும் உள்ள தமிழர்களையெல்லாம் கவர்ந்தவர். நாடக நடிப்பிலும் புலமையுள்ள இவர், இதுவரை எட்டு நூல்களை எழுதியிருக்கிறார். அவற்றிற்கு தமிழகத்தின் தலை சிறந்த

நாளிதழ்களான தினத்தந்தி, தினமணி, தினமலர், தி இந்து ஆகியவை நல்ல விமர்சனங்களை வழங்கியுள்ளன.
**http://www.marymartin.com/web?pid=800405**
-----------------------------------------------------------------------------------
தமிழகம் தந்த மகாகவி = Tamilakam Tanta Makākavi / சீனி. விசுவநாதன் = Cīṇi. Vicuvanātaṉ
சென்னை: பரிசல் புத்தக நிலையம் = Parical Puttaka Nilaiyam, Ceṉṇai, 2021
284p.; 22 cm.
9788194919506
$ 14.00 / pb
420gm.

தமிழா, பயப்படாதே, ஊர்தோறும் தமிழ்ப் பள்ளிக்கூடங்கள் போட்டு ஐரோப்பிய சாஸ்திரங்களை எல்லாம் தமிழில் கற்றுக் கொடுக்க ஏற்பாடு செய். ஜாதி வேற்றுமைகளை வளர்க்காதே.
'ஜாதியிரண்டொழிய வேறில்லை' என்ற பழந்தமிழ் வாக்கியத்தை வேதமாகக் கொள்.
**http://www.marymartin.com/web?pid=781260**
----------------------------------------------------------------------------------
அணையா அடுப்பு = Aṇaiyā Aṭuppu / யுவகிருஷ்ணா = Yuvakiruśṇā
சென்னை: சூரியன் பதிப்பகம் = Cūriyaṇ Patippakam, Chennai, 2022
160p.; 22 cm.
9788195167906
$ 7.50 / pb
280gm.

உயிர்க்கொடை ‘யார்க்கும் இடுமின், அவர் இவர் என்னன்மின்’ என்று திருமந்திரம் சொல்கிறது. அன்னதானத்துக்கான வரையறையாகவே இது குறிப்பிடப்படுகிறது. யார், எவர் என்றெல்லாம் பேதம் பார்க்காமல் செய்யப்பட வேண்டிய தானம் என்று அன்ன தானத்தை திருமந்திரம் நமக்கு வலியுறுத்துகிறது. ‘உண்டி கொடுத்தார் உயிர் கொடுத்தாரே’ என்று ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றான மணிமேகலையும் அன்னதானத்தின் பெருமையைப் போற்றுகிறது. அன்னக் கொடை என்பது உயிர்க் கொடை என்பதில் எவருக்கும் இருவேறு கருத்து இருக்க வேண்டிய தேவை இல்லை.
**http://www.marymartin.com/web?pid=800415**
---------------------------------------------------------------------------------------
கரிசலில் உதித்த செஞ்சூரியன் (சோ. அழகர்சாமியின் வாழ்க்கைத் தடம்) = Karicalil Utitta Ceñcūriyaṇ (Cō.Alakarcāmiyiṇ Vālkkait Taṭam) / எஸ். காசிவிஸ்வநாதன் = Es. Kācivisvanātaṉ
சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட் = Niyū Ceñcuri Puk Havus (P) Liṭ, Ceṉṇai, 2021
366p.; ills. 22 cm.
9788123441207
$ 16.75 / pb
460gm.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சட்டமன்ற உறுப்பினராக கோவில்பட்டி மக்களால் இந்து முறை தேர்ந்தெடுக்கப்பட்ட தோழர் சோ. அழகர்சாமியின் வாழ்க்கை வரலாறே இந்நூல். அழகர்சாமி சட்டமன்றத்திலும் போராடினார். களத்தில் இறங்கியும் போராடினார். விவசாயிகளைத் திரட்டியும் போராடினார். மக்களுடைய பிரச்சனைகளுக்கு தீவிரமான போராட்டங்களை நடத்திய அழகர்சாமியின் வரலாற்றை நூலசிரியர் எழுதியுள்ளார். இந்த வரலாறு தனிமனித வரலாறு அல்ல, அந்த மண்ணுக்காகப் போராடிய போராட்டங்களின் வரலாறாகவும், மக்களின் வரலாறாகவும், மண்ணின் வரலாறாகவும் அழகர்சாமியின் வாழ்க்கையை வரலாற்றுப் பின்னணியோடு சிறப்பாக எஸ். காசிவிஸ்வநாதன் பதிவு செய்துள்ளார்.
**http://www.marymartin.com/web?pid=800417**

------------------------------------------------------------------------------------------

என்.கே. ரகுநாதம் = Eṇ.Kē. Rakunātam / கற்சுறா = Karcurā
சென்னை: கருப்புப் பிரதிகள் = Karuppu Prathigal, Ceṇṇai, 2021
896p.; ills. 24 cm.
$ 65.00 / hb
1450gm.

என்.கே. ரகுநாதன் 1991 ஆம் ஆண்டில், யாழ் மண்ணில் பிறந்தவர். பிறகு பத்தாண்டுகள் கொழும்பு தங்கியிருந்த வேளையிலும் பின்னர் அங்கிருந்து கனடாவில் குடிபுகுந்தர். மித அண்மையக் காலமாய் 'தமிழ் கூறும் நல்லுலகின் சிங்கங்'களால் புலிகளால், இன்னபிறர்களால் 'தொப்புள் கொடி' உறவு என மிக உன்னதமாய் விதந்தோதப்படுகிற ஈழத் தமிழ் சமூகத்தின் சாதிய வன்மத்தை, அதன் இந்து – இந்திய கிராமச் சமூகத்தின் நகலெடுப்பாய் இருக்கும் பார்ப்பனியக் கட்டமைப்பை மிக அடிப்படையான எளிய மனிதர்களின் புரிதலிலும் உளவியலிலும் நின்று வெளிப்படுத்தினார். ஈழத்தில் ஒரு பேரியக்கச் செயற்பாடுகளில் தீர்க்கமாய் இயங்கியவர்களில் முக்கியமானவர் என்.கே. ஆர். அந்த முக்கியத்துவத்தின் படிமங்களை ஒவ்வொரு எழுத்தசைவிலும் ஓங்கியறைந்த பக்கங்களோடு இந்தத் தொகுப்பு இருப்பதாகவே உணருகிறேன். இது கருப்பு பிரதிகள் - மற்றும் (கனடா) பதிப்பகங்களின் இணைவெளியீடு.
**http://www.marymartin.com/web?pid=780958**

-----------------------------------------------------------------------------------------

நூலக மனிதர்கள்: கட்டுரைத் தொகுப்பு = Nūlaka Maṇitarkaḷ: Kaṭṭurait Tokuppu / எஸ். ராமகிருஷ்ணன் = Es. Rāmakiruśṇaṉ
சென்னை: தேசாந்திரி பதிப்பகம் = Tēcāntiri Patippakam, Ceṇṇai 2021
208p.; 22 cm.
9788195393718
தேசாந்திரி பதிப்பக வெளியீடு = Tēcāntiri Patippak Veḷiyīṭu 96
$ 11.00 / pb
300gm.

நூலகத்திற்கும் எனக்குமான உறவு மிக நீண்டது. பள்ளிவயதில் நூலகத்திற்குச் செல்ல ஆரம்பித்தேன். எனது கிராம நூலகம் துவங்கி உலகின் மிகப்பெரிய நூலகங்கள் வரை நூற்றுக்கணக்கான நூலகங்களுக்குச் சென்றிருக்கிறேன். நான் கண்ட நூலக மனிதர்கள். சிறந்த நூலகங்கள் பற்றிய கட்டுரைகளின் தொகுப்பு.
http://www.marymartin.com/web?pid=799957
-----------------------------------------------------------------------------------
மனதில் நிற்கும் மாணவர்கள் = Maṇatil Nirkum Māṇavarkaḷ / பெருமாள் முருகன் = Perumāḷ Murukaṇ
நாகர்கோவில்: காலச்சுவடு பதிப்பகம் = Kālaccuvaṭu Patippakam, Nākarkōvil 2021
215p.; 22 cm.
9789390802623
$ 12.00 / pb
310gm.

ஓர் ஆசிரியர் தம் மாணவர்களைக் குறித்து எழுதியுள்ள முன்னோடி நூல். தம்மிடம் பயின்ற மாணவர்களைப் பற்றிப் பெருமாள்முருகன் எழுதிய நாற்பது கட்டுரைகளின் தொகுப்பு. அரசு கல்லூரியில் பயிலும் மாணவர்கள் பெரும்பாலும் முதல் தலைமுறையாக உயர்கல்வி கற்க வருபவர்கள். ஒடுக்கப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள் திறன், குடும்பச் சூழல், வாய்ப்புகள் உள்ளிட்டவற்றை நுட்பமான பார்வையுடன் இக்கட்டுரைகள் விவரிக்கின்றன. நம் கல்வி முறை பற்றிய பல்வேறு கோணங்களைப் போகிற போக்கில் சுட்டுச் செல்லும் தெறிப்புகள் நூலெங்கும் விரவியுள்ளன. எளிய மொழிநடையும் சுவையான சம்பவங்களுமாக வாசிப்புத்தன்மை கொண்ட நூல் இது.
http://www.marymartin.com/web?pid=781288
---------------------------------------------------------------------------------------
கல்லில் வடித்த சொல் போலே: கட்டுரைகள், சிறப்புரைகள், நேர்காணல்கள் = Kallil Vaṭitta Col Pōlē: Kaṭṭuraikaḷ, Cirappuraikaḷ, Nērkāṇalkaḷ / கலாப்ரியா = Kalāpriyā
சென்னை: சந்தியா பதிப்பகம் = Cantiyā Patippakam, Ceṇṇai 2021
289p.; 22 cm.
$ 15.00 / pb
200gm.

``நான் கேட்பதில், படிப்பதில் எனக்கு நானறியாத ஒரு புது விஷயம் இருந்து கொண்டே இருக்கவேண்டும். வாசிப்பின் நோக்கம் அறிதல், தெளிதல் என்று என்னுள் எவ்வாறோ பதிந்து விட்டது. Reading for the pleasure of reading என்று பல சமயங்களில் பலவற்றை வாசித்தாலும், அந்த வாசிப்பு இன்பத்தோடு சேர்ந்து இது நாள் வரை நானறியாத ஒன்றை அல்லது நான் அறிந்தும் உணராத ஒன்றை வெளிச்சம் போட்டுக் காட்டும் படைப்புதான் என் மனதுக்கு மிகவும் நெருக்கமானதாக ஆகிவிடுகிறது. அப்படியானது தான்

கலாப்ரியாவின் கட்டுரைகள், சிறப்புரைகள், நேர்காணல்கள் எல்லாம் சேர்த்துத் தொகுத்த இந்த “கல்லில் வடித்த சொல் போலே” தொகுப்பு.
**http://www.marymartin.com/web?pid=799966**

---------------------------------------------------------------------------

தி. ஜானகிராமன் கட்டுரைகள் = Ti. Jāṇakirāmaṇ Kaṭṭuraikaḷ / தி. ஜானகிராமன் = Ti. Jāṇakirāmaṇ
நாகர்கோவில்: காலச்சுவடு பதிப்பகம் = Kālaccuvaṭu Patippakam, Nākarkōvil, 2021
254p.; 22 cm.
9789355230096
$ 14.50 / pb
350gm.

தமிழின் முன்னணி எழுத்தாளர்களில் ஒருவரான தி. ஜானகிராமன் (28.2.1921 -18.11. 1982) எழுதிய சிறுகதைகளைக் கொண்ட இந்தத் தொகுப்பு. அவரது சிறந்த சிறுகதைத் தொகுப்பிற்காக அவருக்கு 1979ஆம் ஆண்டு சாகித்திய நூற்றாண்டையொட்டி வெளியாகிறது. அவரது பல நாவல்களுக்காக வாசகர்களால் கொண்டாடப்படும் தி. ஜானகிராமன் மிகச் சிறுகதைகளையும் எழுதியவர். அவரது சக்தி வைத்தியம் என்ற அகாதெமி விருது அளிக்கப்பட்டது. பயணக் கட்டுரைகள், மொழிபெயர்ப்பு நூல்கள் ஆகியவற்றையும் எழுதியுள்ள தி. ஜா இசைப் பயிற்சியும் ஞானமும் கொண்டவர். இங்கு தொகுக்கப்பட்டுள்ள கதைகள் தி.ஜா. வின் படைப்பாற்றலையும் அவரது பன்முகத் தன்மையையும் வெளிப்படுத்துபவை. வாசகர்களுக்கு ஒரு சிறந்த வாசக அனுபவத்தையும் ஆய்வாளர்களுக்கு அவரது இலக்கியக் கொள்கை என்ன என்பதை விளங்கிக் கொள்ளவும் உதவக் கூடிய கதைகள். இவை அவரைப் பற்றி பரவலாக கட்டமைக்கப்பட்டுள்ள பார்வைகளை மாற்றவும் கூடும். இந்த நூலின் தொகுப்பாசிரியர் மாலன், இந்தியாவில் வழங்கப்படும் மிக உயரிய இலக்கிய விருதுகளில் ஒன்றான பாரதிய பாஷா பரிஷத் விருதை முழுமையான படைப்பாளுமைக்காகப் பெற்றவர். சிங்கப்பூர் வழங்கும் லீ காங் சியான் புலமைப் பரிசிலைப் பெற்ற முதல் இந்தியரும் ஒரே தமிழரும் இவரே. 2019ஆம் ஆண்டின் சிறந்த மொழிபெயர்ப்பாளர் என்று தமிழக அரசால் விருதளித்து கௌரவிக்கப்பட்டவர். சாகித்திய அகாதெமியின் பொதுக் குழு உறுப்பினர்.
**http://www.marymartin.com/web?pid=799967**

---------------------------------------------------------------------------

சில ஆசிரியர்கள் சில நூல்கள் = Cila āciriyarkaḷ Cila Nūlkaḷ / அசோகமித்திரன் = Acōkamittiraṇ
நாகர்கோவில்: காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில் = Kālaccuvaṭu Patippakam, nākarkōvil, 2021
144p.; 22 cm.
9789391093327
$ 8.75 / pb
230gm.

மதிப்புரைகள், விமர்சனங்கள் என்பவையாக அல்லாமல் நூலை அறிமுகப்படுத்துதல், வாசிப்பு அனுபவத்தைப் பகிர்ந்துகொள்ளுதல் என்னும் முறையில் பல்வேறு நூல்களை அசோகமித்திரன் இந்நூலில் அறிமுகப்படுத்துகிறார். தான் வாசித்த ஒரு நூலை முன்வைத்துத் தன்னுடைய இலக்கிய மேதமையைப் பறைசாற்றிக்கொள்ளும் போக்கு மதிப்புப் பெற்றுவரும் ஒரு காலகட்டத்தில் நூலை முன்னிறுத்திப் பேசும் அசோகமித்திரனின் கட்டுரைகள் பெரும் ஆறுதல் அளிக்கின்றன. உணர்ச்சிவசப்படாமல் நூல்களை அசோகமித்திரன் அறிமுகப்படுத்துகிறார். படைப்புகளைக் காலத்தின் பின்னணியில் பொருத்திக்காட்டுகிறார். சிறப்புகளை மிகையின்றிச் சொல்கிறார். போதாமைகளைக் கூடியவரை நுட்பமாகச் சொல்லும் அசோகமித்திரன், ஒரு சில இடங்களில் வெளிப்படையாகச் சொல்லும்போதும் காரமான சொற்களைப் பயன்படுத்துவதில்லை. எந்த ஒரு நூலைப் பற்றியும் ஒவ்வொருவரும் தன்னுடைய வாசிப்பின் மூலம் முடிவுக்கு வர வேண்டும் என்று நம்பும் அசோகமித்திரன் தன் வாசிப்பின் முடிவுகளை வாசகர்களிடத்தில் திணிக்காமல் நூல்களைப் பற்றிப் பேசுகிறார். எழுத்தாளர்களைப் பற்றிய கட்டுரைகள் கலாபூர்வமான, கச்சிதமான சொற்சித்திரங்களாக உருப்பெற்றிருக்கின்றன. பல சித்திரங்கள் சிறுகதைக்கு இணையாக உள்ளன. படைப்பாளிகளின் தனிப்பட்ட ஆளுமைகளைப் பற்றிச் சொல்லும்போது அவர்கள் படைப்பைப் பற்றிய தன் பார்வையையும் இயல்பாக அதில் இணைத்துவிடுகிறார். எளிய கோடுகளால் ஆன இந்தச் சித்திரங்கள் அழிக்க முடியாமல் மனத்தில் பதிந்துவிடக்கூடியவை.
**http://www.marymartin.com/web?pid=781253**
-----------------------------------------------------------------------------

அன்சைஸ் = Ançais / பா. ராகவன் = Pā. Rākavaṇ
சென்னை: எழுத்து பிரசுரம் = (Zero degree/Ezhuthu Pirasuram), Ceṇṇai, 2021
181p.; 22 cm.
9789390884810
$ 11.00 / pb
320gm.

கௌண்டமணியிடம் செந்தில் உதை வாங்கினால் சிரிக்கிறோம். போகிற வருகிறவர்களெல்லாம் வடிவேலுவை இழுத்து வைத்து இம்சிக்கும்போது சிரிக்கிறோம். மிஸ்டர் பீனின் பைத்தியக்காரத்தனங்களுக்கு மனத்தைப் பறிகொடுத்துச் சிரிக்கிறோம். இதில் இருந்து என்ன புரிகிறது? யாருக்காவது துன்பம் வரும் வேளையில் நாம் அவசியம் சிரிக்கிறோம்.
இந்தப் புத்தகத்தில் உள்ள பெரும்பாலான கட்டுரைகள் எனக்குத் துன்பம் வந்த வேளைகளைச் சுட்டிக் காட்டுபவை. வேறு வழியே இல்லாமல் நீங்கள் சிரிக்கத்தான் செய்வீர்கள்.

எழுதுகிற அனைத்திலும் பாடுபொருளாக நாமே இருந்துவிடுவது ஒரு சௌகரியம். என்னைவிட என்னை நன்கு அறிந்தவர்களோ, என்னைக் காட்டிலும் என்னை எள்ளி நகையாடக்கூடியவர்களோ யாரும் இருக்க முடியாது அல்லவா? உலகமானது ப்ரொக்ரஸிவ் லென்ஸ் அணிந்த எனது கண்களின் வழியேதான் தெளிவாகத் தெரிகிறது.
நல்லது. நீங்கள் இனி சிரிக்கத் தொடங்கலாம்.
[http://www.marymartin.com/web?pid=800308](http://www.marymartin.com/web?pid=800308)
--------------------------------------------------------------------------------------
தற்செயல்களை விரட்டுகிறவன் = Tharcheyalgalai Viratugiravan / சரவணன் சந்திரன் = Saravanan Chandran
சென்னை: எழுத்து பிரசுரம் = (Zero degree/Ezhuthu Pirasuram), Ceṇṇai, 2021
188p.; 22 cm.
9789390884773
$ 11.50 / pb
300gm.

மைதானத்தின் நடுவில் நிற்கும் ஒருவன் நாலாபுறமும் விசிறியடிக்கும் பந்துகளைப் போல, பல்வேறு துறை சார்ந்த அனுபவங்கள் இக்கட்டுரைத் தொகுப்பில் விரவிக் கிடக்கின்றன. இதனிுள்ளே தட்டுப்படுகிற மனிதர்கள் தங்களுடைய அனுபவங்களைக் கதையாய் வரைகிறார்கள். ஒரே நாரில் கோர்க்கப்பட்ட வெவ்வேறு மலர்கள். தொட்டிப் பூக்கள் துவங்கி மலையடிவாரக் காட்டுப் பூக்கள் வரை என விதம்விதமான மனிதர்களும் அவர்களின் வாழ்க்கைப்பாடுகளும் இரத்தமும் சதையுமாக தொனியில் பதிவாகியிருக்கின்றன. தள்ளி நிற்கிற பாவனையில் எல்லாமுமாக நிலப்பரப்பொன்றைச் சித்திரமாய் வரைந்திருக்கிறார். கேரை மீனொன்றின் வடிவமாய் அது அமைந்திருக்கிறது.
[http://www.marymartin.com/web?pid=766034](http://www.marymartin.com/web?pid=766034)
--------------------------------------------------------------------------------------------------
பனி உருகுவதில்லை = Paṇi Urukuvatillai / அருண்மொழி நங்கை = Aruṇmoli Nankai
சென்னை: எழுத்து பிரசுரம் = (Zero degree/Ezhuthu Pirasuram), Ceṇṇai, 2021
317p.; ills. 22 cm.
9789391748715
$ 19.00 / pb
400gm.

Biography
அருணா பிறந்ததிலிருந்து மணமுடிக்கும்வரை நடந்த அத்தனை சுவையான சம்பவங்களையும் சின்னச் சின்ன நிகழ்வுகளாகச் சொல்லிக்கொண்டே போகிறார். எத்தனை சின்ன நிகழ்வாக இருந்தாலும் அது பெரிய வாசலை வாசகருக்குத் திறந்துவிடுகிறது. புகைப்படக்காரர் பின்னுக்குப் பின்னுக்கு நகர்ந்து விரிவாகவும் துல்லியமாகவும் படம் எடுப்பதுபோல அருணாவின் எழுத்து அவர் சொல்லவந்த காட்சிகளைக் கண்முன்னே நிறுத்துகிறது.

- அ. முத்துலிங்கம்
இளமை நினைவுகளை எழுத முற்படும்போது, நினைவேக்கத்தின் தழுதழுப்பும் இழந்தவை பற்றிய பொருமலும் தவிர்க்கமுடியாமல் வெளிப்படும். அருண்மொழியின் கட்டுரைகளில் அது நடக்கவில்லை. துல்லியமான விபரங்களுடன், சரளமான, மிகையும் அலங்காரமும் அற்ற நேரடி நடையும் இந்தக் கட்டுரை வரிசையின் தனித்துவம். சமனமான, முதிர்ந்த நடை. - யுவன் சந்திரசேகர்
[http://www.marymartin.com/web?pid=800314](http://www.marymartin.com/web?pid=800314)
--------------------------------------------------------------------------------------
அர்த்தமின்மையின் அழகும் அர்த்தங்ககளின் மெய்மையும்: திறனாய்வாளர் க. பஞ்சாகத்துடன் ஒரு நேர்காணல் = Arttaminṇmaiyiṇ Alakum Arttankakaḷiṇ Mauymaiyum: Tiraṇāyvāḷar Ka. Pañcākattuṭaṇ Oru Nērkāṇal / பா. இரவிக்குமார் = Pā. Iravikkumār
சென்னை: பரிசல் புத்தக நிலையம் = Parical Puttaka Nilaiyam, Ceṇṇai, 2021
80p.; 24 cm.
9789391949297
$ 6.00/ pb
280gm.
[http://www.marymartin.com/web?pid=800348](http://www.marymartin.com/web?pid=800348)
----------------------------------------------------------------------------
வாக்கப்பட்ட பூமி = Vākkappaṭṭa Pūmi / சுசி கணேசன் = Cuci Kaṇēcaṇ
சென்னை: டிஸ்கவரி பப்ளிகேஷன்ஸ் = Tiskavari Papḷikēśaṇs, Ceṇṇai, 2021
240p.; ills. 22 cm.
9789391994426
$ 13.50 / pb
350gm.

இயக்குனர் சுசி கணேசன், மதுரை மாவட்டம், வன்னிவேலம்பட்டி எனும் சிறிய கிராமத்தில் பிறந்தவர். 12வது வகுப்புவரை கல்லுப்பட்டி காந்தி நிகேதன் பள்ளியிலும், B.Sc., படிப்பை மதுரை தியாகராசர் கல்லூரியிலும், B. Tech படிப்பை சென்னை எம்.ஐ. டி- கல்லூரியிலும் முடித்தவர். எம்.ஐ. டி படிப்பில் Best Outgoing Student விருது வாங்கியவர். கல்லூரிக் காலங்களில் தொடர்ந்து 5 ஆண்டுகள் பிரபல இதழ்களில் மாணவ பத்திரிகையாளராகவும், பின்பு தமிழன் எக்ஸ்பிரஸ் தினமணியில் கட்டுரையாளராகவும் எழுதிய அனுபவம் கொண்டவர். விரும்புகிறேன், பைவ் ஸ்டார், திருட்டுப்பயலே, கந்தசாமி, திருட்டுப்பயலே&2 படங்களால் அதிகம் பேசப்பட்டவர், தமிழக அரசின் சிறந்த இயக்குனர், சிறந்த திரைக்கதையாசிரியர் விருதுகளைப் பெற்றவர்.
[http://www.marymartin.com/web?pid=800354](http://www.marymartin.com/web?pid=800354)
-----------------------------------------------------------------------------------------
அப்பா... அன்புள்ள அப்பா = Appā... Aṇpuḷḷa Appā / சப்தரிஷி லா.ச. ரா = Captariśi Lā. Ca. Rā
சென்னை: எழுத்து பிரசுரம் = (Zero degree/Ezhuthu Pirasuram), Ceṇṇai, 2022
205p.; 22 cm.

9789391748135
$ 12.00 / pb
340gm.

Biography
என் நண்பர் சப்தரிஷிக்கு லா.ச.ரா. தகப்பன். எனக்கு தெய்வம். கண்கண்ட தெய்வம். நான் ஆராதனை செய்யும் எழுத்தாளர்களில் ஒருவர். ஒரு பின்நவீனத்துவ எழுத்தாளன் இப்படிச் சொல்லலாமா என்று கேட்கலாம். இந்தியாவின் நிலைமையே வேறு. ஆதிசங்கரரின் வாழ்வைப் பார்த்தால் நான் சொல்வது புரியும். சங்கரரும் கவிஞர்தானே? ஆன்மீகத்தில் அடையாளம் காணப்படுவதால் அவரது கவிஞர் அடையாளம் இல்லாமல் போய்விடுமா என்ன? ஆதிசங்கரரின் வழியில் வந்த கடைக் கொழுந்துதான் லா.ச.ரா. என நான் காண்கிறேன்.
[http://www.marymartin.com/web?pid=800357](http://www.marymartin.com/web?pid=800357)
------------------------------------------------------------------------------------------
சொல் தீண்டிப் பழகு = Col Tīṇṭip Palaku / சாரு நிவேதிதா = Cāru Nivētitā
சென்னை: எழுத்து பிரசுரம் = (Zero degree/Ezhuthu Pirasuram), Ceṇṇai 2022
182p.; ills. 22 cm.
9789388860819
$ 11.50 / pb
320gm.

1973-ஆம் ஆண்டு சீலேயின் தலைநகர் சாந்த்தியாகோவில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அதிபர் டாக்டர் சால்வதோர் அயெந்தே (Dr. Salvador Allende) அவரது ராணுவத் தளபதி பினோசெத் செய்த தந்திரமான ராணுவப் புரட்சியின் காரணமாகத் தற்கொலை செய்து கொண்டார். பிறகு பினோசெத் ஆட்சிக்கு வந்தவுடன் ஆயிரக்கணக்கான பேரை கம்யூனிஸ்டுகள் என்று சொல்லி சுட்டுக் கொல்ல உத்தரவிட்டார். அப்படிக் கொல்லப்பட்டவர்களில் முக்கியமான ஒருவர் விக்தர் ஹாரா (Victor Jara) என்ற பிரபலமான பாடகர். நம் நாட்டில்தான் இசை என்பது வெறும் கேளிக்கையாக இருக்கிறது. ஆனால் லத்தீன் அமெரிக்க நாடுகளில் இசைக் கலைஞர்கள் போராட்ட வீரர்களாக இருந்திருக்கிறார்கள்.
[http://www.marymartin.com/web?pid=800365](http://www.marymartin.com/web?pid=800365)
------------------------------------------------------------------------------------
புதுச்சேரிக்காரர்கள்: புதுச்சேரி எழுத்தாளர்களின் நூல்கள் பற்றிய என் கட்டுரைகளும் அவர்களில் சிலரின் படைப்புகளும் = Putuccērikkārarkaḷ: Putuccēri Eluttāḷarkaḷiṇ Nūlkaḷ Parriya Eṇ Kaṭṭuraikaḷum Avarkaḷil Cilariṇ Paṭaippukaḷum / சுப்ரபாரதிமணியன் = Cuprapāratimaṇiyaṇ
சென்னை: காவ்யா பதிப்பகம் = Kāvyā Patippakam, Ceṇṇai, 2022
x, 140p.; 22 cm.
$ 7.50 / pb
280gm.

19 நாவல்கள் உட்பட 80 நூல்களை வெளியிட்டிருக்கும் சுப்ரபாரதிமணியன். கனவு என்ற இலக்கிய இதழை 36 ஆண்டுகளாக நடத்தி வருபவர். சிறந்த சிறுகதையாளுக்கான இந்திய ஜனாதிபதி வழங்கிய "கதா விருது", தமிழக அரசின் சிறந்த நாவலாசிரியர் விருது உட்பட பலமுக்கிய விருதுகளை பெற்றுள்ளார். இவரின் 5 நாவல்கள் வீதம் மலையாளம், இந்தியிலும், 15 நூல்கள் ஆங்கிலத்திலும் வெளிவந்துள்ளன.
http://www.marymartin.com/web?pid=800374
--------------------------------------------------------------------------------
வாசிப்பிற்கு திசை இல்லை = Vācippirku Ticai Illai / பேரா. பெ. விஜயகுமார்= Pērā. Pe. Vijayakumār
மதுரை: கருத்து பட்டறை = Karuttu Paṭṭarai, Maturai, 2021
128p.; 22 cm.
$ 8.50 / pb
250gm.

Biography
"பேரா. விஜயகுமார் மூட்டா பேரியக்கத்தின் முன்னணித் தலைவர்களில் ஒருவராய், ஒரு போராளியாகவே தொழிற்சங்க அரங்கில் அறிமுகமானவர். பரவலான நூல் வாசிப்பு உடையவர்களால் மட்டுமே மதிப்புரைக்குத் தகுதியான நூல் எது என்பதைத் தேர்வு செய்துகொள்ள முடியும். திரு. விஜயகுமாரின் பல்லாண்டு கால வாசிப்பே-அதுவும் விரிவும், ஆழமும் கூடிய வாசிப்பே-அதை அவருக்குச் சாத்தியமாக்குகிறது.
http://www.marymartin.com/web?pid=800379
-------------------------------------------------------------------------------------------
எழிலின் எண்ண மின்னல்கள்: தலைவர்கள்-மொழி-சமூகம் ஒரு பார்வை = Elilin Eṇṇa Miṇṇalkaḷ: Talaivarkaḷ - Moli - Camūkam Oru Pārvai / ஆலடி எழில்வாணன் = ālaṭi Elilvāṇaṇ
சென்னை: எழிலினி பதிப்பகம் = Eliliṇi Patippakam, Ceṇṇai, 2021
232p.; 22 cm.
9789390677801
$ 12.50 / pb
420gm.

திரு. எழில்வாணன் அவர்களின் மொழிப்பற்று பல கட்டுரைகளில் வெளிப்படுகிறது. "இந்தி ஏகாதிபத்தியம்" நூலைத் தனது 33ஆவது வயதில் வெளியிட்ட திரு. ஆலடி அருணா அவர்களின் வழித்தோன்றல், இந்தக் கருத்துக்களை வெளிப்படுத்தியதில் வியப்பொன்றும் இல்லை.
http://www.marymartin.com/web?pid=800382
----------------------------------------------------------------------------------------------
அந்த நிருபரின் பேனா = Anta Nirupariṇ Pēṇā / ஆர். நடராஜன் = ār. Naṭarājaṇ
சென்னை: கவிதா பப்ளிகேஷன்ஸ் = Kavitā Papḷikēśaṇs, Ceṇṇai, 2021
192p.; 22 cm.
9789388450720

$ 8.75 / pb
330gm.

ஜனாதிபதி புறம்போக்கு நிலத்தில்தான் சுரங்க அகழ்வை தொடங்கிவைக்க வேண்டியிருந்தது. இதை நடராஜன் ஒளிவு மறைவு இல்லாமல் எழுதினார். சம்மந்தப்பட்ட எல்லோரையும் இந்த செய்திக் கட்டுரை சங்கடப்படுத்தியது. ஆனால் நடராஜன் சரியான தகவல்களை கொடுத்து எழுதியிருந்தால் யாராலும் அதன் விவரங்களை மறுக்க முடியவில்லை. தவறென்று நிரூபிக்க முடியவில்லை.
**http://www.marymartin.com/web?pid=800388**
--------------------------------------------------------------------------------------------
கலைஞர்: ஓர் சகாப்தத்தின் வரலாறு = Kalaiñar: ōr Cakāptattiṉ Varalāru / பாலபாரதி = PālaPārati
சென்னை: நக்கீரன் வெளியீடு = Nakkīraṉ Veḷiyīṭu, Ceṉṉai, 2021
104p.; ills. 22 cm.
9789385125553
$ 4.00 / pb
170gm.

Biography
இன்றைய நாகை மாவட்டம், திருக்குவளை கிராமத்தில் 1924 ஜூன் 3 அன்று முத்துவேலர் – அஞ்சுகம் தம்பதியின் மூன்றாவது குழந்தையாகப் பிறந்தவர் தட்சிணாமூர்த்தி என்கிற கருணாநிதி. சாதிரீதியாக பெரும் தாக்குதலை எதிர்கொண்ட ஒரு சமூகத்தில் பிறந்த கருணாநிதி, நாட்டிலேயே அதிகபட்சமாக 60 ஆண்டுகள் தொடர்ந்து சட்டமன்ற உறுப்பினராக இருந்தார் என்பதும் தமிழ்நாடு போன்ற ஒரு பெரிய மாநிலத்தின் அதிக நாள் முதல்வராக இருந்தார் என்பதும் சாதி ஆதிக்கம் செலுத்தும் இந்திய ஜனநாயகத்தில் பெரும் ஆச்சரியங்களில் ஒன்று. இளவயதில் திருவாரூரில் பள்ளிக்கூடத்தில் சேரச் சென்றபோது தலைமையாசிரியர் கஸ்தூரி ஐயங்கார், “இடமில்லை” என்று சொல்லிவிட, “பள்ளியில் சேர்த்துக்கொள்ளாவிட்டால் கமலாலயம் தெப்பக்குளத்தில் விழுந்து உயிரை மாய்த்துக்கொள்வேன்” என்று சொல்லி பள்ளிக்கூடத்துக்குள் நுழைந்தவர் கருணாநிதி. இந்தப் போராட்டக் குணம்தான் அவரை காலம் முழுமைக்கும் உயரங்களுக்கு இட்டுச் செல்லும் வாகனமாக இருந்தது.
**http://www.marymartin.com/web?pid=799976**
--------------------------------------------------------------------------------
வீரமாமுனிவர்: அ. முத்துச்சாமி பிள்ளை தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதிய வீரமாமுனிவர் வாழ்க்கை வரலாறு = Vīramāmuṇivar: A. Muttuccāmi Piḷḷai Tamililum ānkilattilum Elutiya Vīramāmuṇivar Vālkkai Varalāru / க. சுபாஷிணி, ஆனந்த் அமலதாஸ் = Ka. Cupāśiṇi, āṇant Amalatās
சென்னை: எழிலினி பதிப்பகம் = Eliliṇi Patippakam, Ceṇṇai, 2021
158p.; 22 cm.

9789392224003
$ 17.50 / pb
270gm.

Biography
வரலாற்றுப் பாதுகாப்பு, தமிழ்மொழி, ஐரோப்பியத் தமிழியல், தமிழகப் பண்பாட்டுத் தேடல்கள் எனப் பன்முகத் தேடல்களுடன் இயங்கி வருகிறார் முனைவர். க. சுபாஷினி அடிப்படையில் கணினி இயந்திரவியல் துறையின் பட்டதாரி இவர்.
**http://www.marymartin.com/web?pid=799982**
---------------------------------------------------------------------------
ஹர்ஷவர்த்தனர் = Harśavarttaṉar / மு. மாதேஸ்வரன் = Mu. Mātēsvaraṉ
சென்னை: வானதி பதிப்பகம் = Vāṇati Patippakam, Chennai, 2022
1016p.; 22 cm.
$ 45.00 / pb
1110gm.

வட பாரதத்தில் மௌரியர்கள், மற்றும் இந்தியாவின் பொற்காலம் என்றழைக்கப்பட்ட குப்தர்களின் ஆட்சிக்கு இணையாக, வர்த்தன மன்னர்களில் சிறப்பாகத் திகழ்ந்தவர் பரமபத்தராக மகாராஜாதி ராஜர் என்றழைக்கப்பட்ட ஹர்ஷவர்த்தனர் ஆவார்.
**http://www.marymartin.com/web?pid=799985**
--------------------------------------------------------------------------
ஒரு விசுவாசமான கலகக்காரனின் வெளிவராத கடிதங்கள் = Oru Vicuvācamāṉa Kalakakkāraṉiṉ Veḷivarāta Kaṭitankaḷ / பி. ஆர். மகாதேவன் = B.R. Makātēvaṉ
திருப்பூர்: அறம் பதிப்பகம் = Aram Patippakam, Tiruppūr, 2021
656P.; 22 cm.
$ 27.50 / hb
930gm.

ஒரு கற்பனையான இந்து சமூக சேவை நிறுவனத்தில் சேரும் இளைஞனின் வாழ்க்கை அனுபவங்கள், கலை அரசியல் பார்வைகள் ஆகியவற்றின் தொகுப்பு. அரசியல் உரையாடலானது கற்பனையான இந்து நிறுவனத்தின் மூத்த சேவகருக்கும் புதிதாகச் சேர்ந்த இளைஞருக்கும் இடையிலான கடிதப் போக்குவரத்து மூலமாக வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.
**http://www.marymartin.com/web?pid=799987**
-----------------------------------------------------------------------
பாமர இலக்கியம் = Pāmara Ilakkiyam / கஸ்தூரிராஜா = Kastūrirājā
சென்னை: விஜயலட்சுமி பதிப்பகம் = Vijayalaṭcumi Patippakam, Ceṉṉai 2021
888p.; 24 cm.
$ 25.00 / hb
1350gm.

நான்... தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் அருகே மேற்குத் தொடர்ச்சிமலை அடிவாரத்திலே மல்லிங்காபுரம் என்னும் புழுதிக்கிராமத்திலே பிறவிப்பயன் பெற்று உருவானவன். பள்ளி நாட்களிலும் கல்லூரி காலங்களிலும் தமிழ் எழுதும் கனவுகளால் களவாடப்பட்டு 1977-78ம் ஆண்டுகளில் தலைநகர் சென்னை வந்து புகுந்தன.
**http://www.marymartin.com/web?pid=791548**

-----------------------------------------------------------------------------

பயங்கரவாதி = Payankaravāti / தீபச்செல்வன் = Tīpaccelvaṉ
சென்னை: டிஸ்கவரி பப்ளிகேஷன்ஸ் = Tiskavari Papḷikēśaṉs, Ceṉṉai 2021
320p.; 22 cm.
9789391994310
$ 18.00 / pb
420gm.

அதே நகரத்தில் அமர்ந்தபடியே இறுதிப் பக்கங்கள்வரை தினமும் எழுதி முடித்தேன். வாழ்வையும் எழுத்தையும் போராட்டமாக்க வேண்டும் என்பதை காலம் கற்றுத் தந்திருக்கிறது. கவிதைகளுக்காகவும் எழுத்துக்களுக்காகவும் தேடப்படும் காலத்தில் எழுத்தை ஒரு சுவாசமாக மாத்திரமின்றி ஆயுதமாகவும் பற்றிக் கொள்ள வேண்டிய நிர்பந்தம் கைகளில் தரப்பட்டிருக்கிறது.
**http://www.marymartin.com/web?pid=800027**

-----------------------------------------------------------------------------

மண்டியிடுங்கள் தந்தையே = Maṇṭiyiṭuṅkaḷ Tantaiyē / எஸ். ராமகிருஷ்ணன் = Es. Rāmakiruśṇaṉ
சென்னை: தேசாந்திரி பதிப்பகம் = Tēcāntiri Patippakam, Ceṉṉai 2021
248p.; 22 cm.
9789387484894
$ 17.50 / hb
450gm.

இந்நாவல் டால்ஸ்டாயின் வாழ்க்கை வரலாற்றில் நடந்த சில நிகழ்வுகளை மையமாகக் கொண்டு எழுதப்பட்ட ஒன்று. எழுத்தாளர்களின் வாழ்க்கையை மையமாகக் கொண்டு சர்வதேச அளவில் நிறைய நாவல்கள் எழுதப்பட்டுள்ளன. ஆனால் தமிழில் இந்தவகையான நாவல்இதுவரை வெளியானதில்லை. அதுவும் ஒரு ரஷ்ய எழுத்தாளரின் வாழ்க்கையை விவரிக்கும் நாவல் இந்நாள் வரை தமிழில் எழுதப்பட்டதில்லை. இதுவே முதன்முறை. அந்த வகையில் இதைத் தமிழில் எழுதப்பட்ட ரஷ்ய நாவல் என்பேன். இந்த நாவலை எழுதுவதற்காக மூன்று ஆண்டுகள் டால்ஸ்டாயின் வாழ்க்கை வரலாறு, ரஷ்ய வரலாறு, டால்ஸ்டாயின் டயரிக்குறிப்புகள். சோபியாவின் டயரிக்குறிப்புகள். டால்ஸ்டாய் குடும்பத்தினரின் நினைவலைகள், டால்ஸ்டாய் பற்றி எழுதப்பட்ட கட்டுரைத் தொகுப்புகள், அவரது சமகால எழுத்தாளரின் படைப்புகள். பண்ணை அடிமைகள் பற்றிய அறிக்கைகள். எனத்தேடித்தேடி படித்தேன்.

http://www.marymartin.com/web?pid=791890
--------------------------------------------------------------------------------------------
இப்படியும் சிலர் = Ippaṭiyum Cilar / கருவூர் கன்னல் = Karuvūr Kaṉṉal
சென்னை: காவ்யா பதிப்பகம் = Kāvyā Patippakam, Ceṉṉai, 2021
xiii, 220p.; 22 cm.
9788195288427
$ 12.00 / pb
330gm.

என்னை உங்கள் குருவாக ஆக்கிக் கொள்ள முடியும் என்று நினைக்கிறீர்களா? நீங்களோ பட்டங்கள் பல பெற்ற படிப்பாளி; அப்படியில்லை நான்...! கடிதங்களுக்கு என்று ஒரு அழகிய வடிவம் உண்டு கட்டுரைகள் ஒருக்காலும் கடிதம் ஆவதில்லை.
http://www.marymartin.com/web?pid=800036
---------------------------------------------------------------------------------------
கடவுளின் நாற்காலி = Kaṭavuḷiṉ Nārkāli / அதியமான் கார்த்திக் = Atiyamāṉ Kārttik
சென்னை: டிஸ்கவரி பப்ளிகேஷன்ஸ் = Tiskavari Papḷikēśaṉs, Ceṉṉai, 2021
198p.; 22 cm.
9789391994037
$ 11.00 / pb
290gm.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் வனவியல் பட்டம் பெற்ற, அதியமான் கார்த்திக் தற்போது பணி நிமித்தமாக ஆப்பிரிக்க நாடுகளிலும் இந்தியாவிலும் என மாறி மாறி வசித்து வருகிறார். ஆப்பிரிக்காவின் 25க்கும் மேற்பட்ட நாடுகளில் தொடர்ச்சியாக பயணம் செய்துகொண்டிருப்பவர். தமிழில் மிகக்குறைவான ஃபேன்டஸி நாவல்களின் வரிசையில் ‘கடவுளின் நாற்காலி’ மிக முக்கியமன இடத்தைப் பெற்றுவிடும் என்று நம்புகிறேன். துவங்கிய வேகத்தில் 200 பக்க நாவலை வாசித்து முடித்த அனுபவம் பதிப்புக்குழுவுக்கே ஆச்சரியமானது. ஒரு வகையில் இக்கதையின் பிரமிக்கத்தக்க அளவுக்கு ஒரு ஹாலிவுட் அசத்தல் என்றும் சொல்லலாம்.
http://www.marymartin.com/web?pid=781098
-----------------------------------------------------------------------------
தருநிழல் = Tarunilal / ஆர். சிவகுமார் = ār. Civakumār
காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில் = Kālaccuvaṭu Patippakam, Nākarkōvil, 2021
167p.; 22 cm.
9789391093006
$ 9.50 / pb
250gm.

Biography

பிறமொழிப் படைப்புகளின் நம்பகமான தமிழாக்கங்கள் வாயிலாகச் சீரிய வாசகர்களிடையில் தனிக் கவனம் பெற்றிருக்கும் ஆர். சிவகுமாரின் முதல் படைப்பெழுத்து 'தருநிழல்'. பெரும்பாலான எழுத்தாளர்களின் முதலாவது நாவல், அவர்களது வாழ்வனுபவங்களின் குறிப்பாக, அவர்களுடைய தனி ஆளுமை உருவாகும் பருவத்தின் நினைவுகளை மீளப் பார்ப்பதுதான். இந்த நாவலும் ஒருவகையில் ஆசிரியர் தனது இளம்பருவத்தின் தனி அனுபவங்களையும் சமூகப் பாடங்களையும் மீட்டெடுத்து இன்றைய பார்வையில் பார்க்கும் முயற்சிதான். மீளாமல் சென்றுவிட்ட அந்த நாட்களை இன்று நினைவுகூர்ந்து சொல்லும்போது தன்னை மிகையாகவும் சாகசமாகவும் முன்வைக்கும் வாய்ப்பு மிகுதி. இன்றைய பக்குவப்பட்ட பார்வையிலும் தன் பழைய அனுபவங்களை அவை நிகழ்ந்த தருணத்தின் தட்பவெப்பத்துடன் இயல்பாகச் சொல்கிறார் ஆசிரியர். இந்தப் பகட்டின்மையே நாவலின் முதல் மேன்மை. சென்ற நூற்றாண்டின் 70 - 80கள் உலகெங்கும் புதிய திசை மாற்றங்களுக்கு அடிகோலின. தனிநபர் வாழ்விலும் சமூகச் சூழலிலும் பண்பாட்டுப் பின்புலத்திலும் மாற்றத்தைத் தூண்டின. தமிழ்ச் சூழலிலும் அதன் விளைவுகள் தென்பட்டன. அவற்றை மையப்பாத்திரமான சந்திரனின் வாழ்க்கைப் பின்புலத்தில் சித்திரிக்கிறது நாவல். கடந்துபோன காலத்தை மீண்டும் கட்டியெழுப்பிப் பார்க்கிறது. இது இதன் இரண்டாவது சிறப்பு. மொழிபெயர்ப்பாளராக வேறுபட்ட கூறுமுறைகள்கொண்ட ஆக்கங்களை வாசிக்கும் வாய்ப்புப் பெற்றவர் ஆர். சிவகுமார். ஆனால் எந்தச் சாயலும் படியாமல் தனது அனுபவங்களை நேரடியாகவும் எளிமையாகவும் வாசகருக்கு நெருக்கமான தொனியிலும் படைப்பாக்கியிருக்கிறார். இந்த உண்மையுணர்வே நாவலின் உச்சமான இயல்பு.
**http://www.marymartin.com/web?pid=781125**

---

தொல்பசிக் காலத்து குற்ற விசாரணை அறைக்குள் மூடி முத்திரையிடப்பட்ட 8 தடயக்குறிப்புகள் = Tolpacik Kālattu Kurra Vicāraṇai Araikkuḷ Mūṭi Muttiraiyiṭappaṭṭa 8 Taṭayakkurippukaḷ / பாவெல் சக்தி = Pāvel Cakti
பொள்ளாச்சி: எதிர் வெளியீடு = Etir Veḷiyīṭu, Poḷḷācci, 2022
399p.; 22 cm.
9789390811168
$ 22.50 / pb
500gm.

பாவெல் சக்தி: வழக்கறிஞராகப் பணியாற்றும் இவர் நீதிமன்றம், காவல் துறை தொடர்பான, அதிர்ச்சி அளிக்கும் மனிதர்கள் குறித்த கதைகளை எழுதியுள்ளார். இரண்டு தொகுப்புகள் வெளிவந்துள்ளன. இவரது சமீபத்திய தொகுப்பு 'தொல்பசிக் காலத்துக் குற்ற விசாரணை அறைக்குள் மூடி முத்திரையிடப்பட்ட 8 தடயக் குறிப்புகள்' (எதிர் வெளியீடு).
**http://www.marymartin.com/web?pid=791715**

-----------------------------------------------------------------------------------------------------
புலிக்குத்தி = Pulikkutti / ராம் தங்கம் = Rām Tankam
திருவண்ணாமலை: வம்சி புக்ஸ் = Vamci Puks, Tiruvaṇṇāmalai, 2021
160p.; 22 cm.
9789393725080
$ 7.50 / pb
250gm.

Biography
வாசகனாக அறிமுகமாகிய பொழுதிலிருந்து தொடர்ந்த உரையாடல்களில், அனுபவங்களின் சுரங்கமாகவே ராம் தங்கத்தை உணர்ந்தேன். திருக்கார்த்தியல், ராஜவனம் இரண்டும் அச்சுரங்கம் நமக்களித்த பொக்கிஷங்கள். அடுத்தத் தொகுப்பாக வந்திருக்கும் புலிக்குத்தியும் அனுபவச் சுரங்கத்தின் அரிய பொக்கிஷமே!
**http://www.marymartin.com/web?pid=800077**
-----------------------------------------------------------------------------------------
வலி சூழும் பொழுதுகள் = Vali Cūlum Polutukaḷ / இறை. ச. ராசேந்திரன் = Irai. Ca. Rācēntiraṉ
திருவண்ணாமலை: வம்சி புக்ஸ் = Vamci Puks, Tiruvaṇṇāmalai, 2021
120p.; 22 cm.
9789393725219
$ 6.00 / pb
230gm.

Novel
"தாராவி" வசீகரமான ஓர் தீவு. இரவு இருளை பொதிந்து வைத்திருப்பதைப் போல ஏராளமான இரகசியங்களை தன்னுள்ளே பொதிந்து வைத்துள்ளது. தன்னை நாடி வந்தோரை எளிதில் தன்னுள்ளே இருத்திக் கொள்ளும் ஆற்றல் அதற்கு எப்போதும் உண்டு.
**http://www.marymartin.com/web?pid=800078**
-----------------------------------------------------------------------------------
பாலி = Pāli / கவிப்பித்தன் = Kavippittaṉ
திருவண்ணாமலை: வம்சி புக்ஸ் = Vamci Puks, Tiruvaṇṇāmalai, 2021
168p.; 22 cm.
9789393725073
$ 7.50 / pb
250gm.

Short Stories
நிலத்தை ஆழ உழும்போது உள்ளேயிருக்கும் பூச்சிகளை இரையெடுக்க வயல் முழுவதும் வெள்ளை வெள்ளையாய் வரும் கொக்குகள் தம் நீண்ட அலகுகளால் மண்ணைக் குத்திக் கிளறும்.
**http://www.marymartin.com/web?pid=800079**
-------------------------------------------------------------------------------------------
வெறுங்கால் நடை (சிறுகதைகள்) = Verunkāl Naṭai (Cirukataikaḷ) / சு. வெங்குட்டுவன் = Cu. Venkuṭṭuvaṉ

சேலம் மாவட்டம்: மணல்வீடு = Maṇalvīṭu, Cēlam Māvaṭṭam, 2022
191p.; 22 cm.
$ 10.00 / pb
320gm.
Short Stories
http://www.marymartin.com/web?pid=800080
-----------------------------------------------------------------------------------------
ஒரு நாள் வேலை = Oru Nāḷ Vēlai / ந. சிதம்பரசுப்ரமண்யன் = Na. Citamparacupramaṇyaṇ
சென்னை: எழுத்து பிரசுரம் = (Zero degree/Ezhuthu Pirasuram), Ceṇṇai 2022
137p.; 22 cm.
9789393882035
$ 8.00 / pb
220gm.

Novel
"அப்பா, ஹரி. உன் விஷயத்தை நீ சுலபமாகத் தீர்த்துகொண்டு விட்டாய். ஆனால் பிரச்சினை அவ்வளவு எளிதல்ல. உன் புதுச் செருப்பை எடுத்துக்கொண்டு, பழைய செருப்பை உனக்காக வைத்துவிட்டுப் போனதாக நீ முடிவு கட்டிவிட்டாய். அப்படித்தான் நடந்தது என்பது என்ன நிச்சயம்? செருப்பே கொண்டு வராதவன் உன் செருப்பை மாட்டிக் கொண்டு போயிருந்தால்? விஷயம் விபரீதம். உன் செருப்பை ஒருவன் திருடிக்கொண்டு போய்விட்டான். நீ வேறு ஒருவன் செருப்பைத் திருடி வந்துவிட்டாய். தர்மப்படியும் குற்றச் சட்டப்படியும் குற்றம். உன் செருப்பை ஒருவன் எடுத்துக்கொண்டு போனதற்கு வேறு ஒன்று நீ எடுத்து வந்தது பரிகாரம் ஆகிவிடுமா? ஒரு குற்றத்திற்கு மற்றொரு குற்றப் பரிவர்த்தனை ஆய்விடாது." - புத்தத்திலிருந்து...
http://www.marymartin.com/web?pid=800083
-----------------------------------------------------------------------------------------
அநீதி அந்தாலஜி = Anīti Antālaji / அராத்து = Arāttu
சென்னை: எழுத்து பிரசுரம் = (Zero degree/Ezhuthu Pirasuram), Ceṇṇai 2022
171p.; 22 cm.
$ 10.00 / Pb
260gm.

Short Stories
சிறுகதையில் பலவித சாத்தியங்களை முயன்று பார்க்கும் அராத்து இந்தத் தொகுப்பில் சுவாரசியமான ஒரு விளையாட்டை ஆரம்பித்திருக்கிறார். இதைப்படிக்கும் வாசகர்கள் அனைவரும் இந்த விளையாட்டின் பங்கேற்பாளர்கள். ஒரே கதைக்களனில் மூன்று வெவ்வேறு விதமான மனிதர்கள் நடமாடுகிறார்கள். நீங்கள் யாருடன் உங்களை அடையாளப்படுத்திக்கொள்கிறீர்கள் என்பதிலிருந்து இந்த சுவாரசியமான விளையாட்டு தொடங்கும். முற்றிலும் புதிதான 3 வீஸீ 1 சிறுகதை அனுபவத்திற்கு தயாராகுங்கள்.
http://www.marymartin.com/web?pid=800084
-----------------------------------------------------------------------------------------

மனிதன் நினைப்பது ஒன்று...= Maṉitaṉ Niṉaippatu Oṉṟu... / அசோக் யெசுரன் மாசிலாமணி = Acōk Yecuraṉ Mācilāmaṇi
சென்னை: மாசி பப்ளிகேஷன்ஸ் = Māci Papḷikēśaṉs, Ceṉṉai, 2021
149p.; 22 cm.
9789354574337
$ 7.75 / pb
230gm.

Novel
ஓர் எழுபது அகவையுடைய பட்டறிவாளரின் எழுத்தாக்க முயற்சி இது. அகவை முதிர்ந்த காலத்தில் இந்தக் குமுகத்திற்கு ஏதேனும் பயனுள்ள வகையில் செய்தாக வேண்டும் என்ற எண்ணத்தின்-ஆசையின் விளைவாக எழுதப்பட்ட புதினம் இது. ஆசைப்படு-முயற்சி செய்-பயிற்சி எடு-உழைப்பைக் கொடு, எண்ணியதை அடையலாம் என்பர். இதைத்தான் திருவள்ளுவர், எண்ணியர் எண்ணியாங்கு எய்துவர் எண்ணியர்
திண்ணி யராகப் பெறின் என்று கூறுகிறார்.
http://www.marymartin.com/web?pid=800085
------------------------------------------------------------------------------------------
ஒலியற்ற மொழி = Oliyarra Moli / ஆ. ஆனந்தன் = ā. āṉantaṉ
சென்னை: சந்தியா பதிப்பகம் = Cantiyā Patippakam, Ceṉṉai, 2021
187p.; 22 cm.
$ 9.50 / pb
280gm.

Short Stories
என்னிடம் கைவசம் இருப்பது மிகச் சில மேற்கோள்கள்தான். அவற்றுள் ஹெராக்ளிட்டஸ் தந்தது முக்கியமானது. 'குளிப்பதற்கு முந்திய ஆறும், குளித்த பிறகான ஆறும் ஒன்றல்ல'. இதையே எளிமையாகச் சொன்னால், 'ஒரே ஆற்றில் இரண்டு முறை குளிக்க முடியாது'. அந்த ஆறுபோய், இந்த ஆறு வந்திருக்கிறது.
http://www.marymartin.com/web?pid=800086
--------------------------------------------------------------------------------
கரிச்சான் குஞ்சு சிறுகதைகள் முழுத் தொகுப்பு = Kariccāṉ Kuñcu Cirukataikaḷ Mulut Tokuppu / ராணிதிலக், ஏ. தனசேகர் = Rāṇitilak, ē. Taṉacēkar
நாகர் கோவில்: காலச்சுவடு பதிப்பகம் = Kālaccuvaṭu Patippakam, Nākar Kōvil, 2021
878p.; 22 cm.
9789390802579
$ 44.50 / hb
1150gm.

Short Stories
1943 - 1983 கால அளவில், 'கிராம ஊழியன்' முதல் 'அமுதசுரபி' இதழ் முடிய கரிச்சான் குஞ்சு எழுதிய - தொண்ணூற்றொன்பது சிறுகதைகளின் காலவரிசைத் தொகுப்பாக இந்நூல்

வெளிவருகின்றது. பல்வேறு பழைய இதழ்களிலிருந்து புதிதாகக் கண்டறியப்பட்ட இருபத்தைந்து சிறுகதைகள் முதன்முறையாக நூல்வடிவில் பிரசுரம் பெறுகின்றன. வாழ்வின் தீர்மானிக்க முடியாத கணங்களால் உருவான உணர்ச்சிகளே இக்கதைகள். லௌகீக வாழ்வின் அபத்தங்களைக் காட்டும் மாய வித்தைக்காரனாகவும், சிறுகதைகளின் சூட்சுமங்களை வெளிப்படுத்திய கலைஞனாகவும் கரிச்சான் குஞ்சு அடைந்த வெற்றியின் சான்று இச்சிறுகதைத் தொகுப்பு.
[http://www.marymartin.com/web?pid=780961](http://www.marymartin.com/web?pid=780961)
--------------------------------------------------------------------------------
படிக்கம் = Paṭikkam / ஆரையம்பதி ஆ. தங்கராசா = āraiyampati ā. Tankarācā
சென்னை: பாரதி புத்தகாலயம் = Pārati Puttakālayam, Ceṇṇai, 2021
152p.; 22 cm.
9788190789141
$ 11.00 / pb
230gm.

Short Stories
ஆரையம்பதி ஆ. தங்கராசாவின் கதைகளில் மட்டக்களப்பில் மறைந்துபோகும் மண்வளச் சொற்கள் அதிகம் ஆவணப்படுத்தப்பட்டிருப்பதோடு அடுத்த தலைமுறைக்கும் கையளிக்கப்பட்டிருக்கிறது. மட்டக்களப்பின் தனித்துவமான பண்பியல்புகளைக் கொண்டிருந்த ஆரையம்பதி கிராமம், இன்று கண்டுள்ள சமூக மாற்றம் இந்தக் கதைகளினூடாக உலக தரிசனத்திற்கு வெளிப்பட்டு நிற்கின்றது. அந்த ஊரின் படைப்பின் வீரியம் இந்தத் தொகுப்பில் கிளைவிட்டுப் படர்கிறது.
[http://www.marymartin.com/web?pid=800088](http://www.marymartin.com/web?pid=800088)
--------------------------------------------------------------------------------
அவள் ஒரு பூங்கொத்து (சிறுகதைகள்) = Avaḷ Oru Pūnkottu (Cirukataikaḷ) / தேவகி கருணாகரன் = Tēvaki Karuṇākaraṇ
சென்னை: சிந்தன் புக்ஸ் = Cintaṇ Puks, Ceṇṇai, 2021
145p.; 22 cm.
9788195383023
$ 7.50 / pb
240gm.

Short Stories
இத்தொகுப்பில் உள்ள கதைகள் எல்லாவிதமான சமூக பிரச்சனைகளையும் தொட்டுச் சென்றாலும் பெண்களைப்பற்றியும் அவர்கள் உணர்வுகள் பற்றியும் எழுதும் போது சற்று முக்கியத்துவம் கொடுத்திருப்பதை நம்மால் உணர்ந்து கொள்ள முடிகிறது. இருபத்தைந்து வருடங்கள் பிரிந்த மனையியை திரும்பவும் ஏற்றுக்கொண்டு அதே காதலை செலுத்தி வாழ முற்படுகின்ற ஆணின் அன்பு நிறைந்த மனதை அற்புதமாக பதிவு செய்திருக்கிறார் என்றும் என்னலள்' கதையில் நாம் வியந்து நோக்கும் ஒரு ஆண் பாத்திரம்.

http://www.marymartin.com/web?pid=800090
--------------------------------------------------------------------------------
மழைக்கண் = Malaikkaṇ / செந்தில் ஜெகநாதன் = Centil Jekanātaṇ
திருவண்ணாமலை: வம்சி புக்ஸ் = Vamci Puks, Tiruvaṇṇāmalai, 2021
144p.; 22 cm.
9789393725264
$ 7.50 / pb
240gm.

Short Stories
செந்தில் ஜெகன்நாதனின் சிறுகதைகள் இரண்டு களங்களின் அன்றாடத் தருணங்களால் ஆனவை. கீழத்தஞ்சையின் வேளாண் குடும்பமும் அதன் பின்னணியாகிய சிற்றூரும். இன்னொரு பக்கம் திரையுலகம். இந்த இரண்டு உலகங்களிலும் மாறிமாறி அலையும் செந்தில் ஜெகன்நாதனின் கலை வெறுமே வாழ்க்கைச் சித்திரம் என்பதிலிருந்து அரிய கவித்துவம் வழியாக மேலெழும் தருணங்களே அவரை கலைஞராக்குகின்றன.
http://www.marymartin.com/web?pid=800238
--------------------------------------------------------------------------------
கோ. ஒளிவண்ணன் சிறுகதைகள் = Kō. Oḷivaṇṇaṇ Cirukataikaḷ / கோ. ஒளிவண்ணன் = Kō. Oḷivaṇṇaṇ
சென்னை: எழிலினி பதிப்பகம் = Eliliṇi Patippakam, Ceṇṇai 2021
314p.; 22 cm.
9789387681842
$ 17.50 / pb
450gm.

Short Stories
இந்தக் காட்சிகளை எங்கே பார்த்தார் என்ற வியப்பை, மனங்களை எப்படிப் படித்தார் என்ற திகைப்பை ஒவ்வொரு கதையும் தருகிறது. கதைகளை மனசுக்குள் ஏற்றுகிற உரையாடல்கள் ஓர் உடனிருப்பு உணர்வை ஊட்டுகின்றன. இழையோடும் நகைச்சுவைத் தெறிப்புகள் நெருக்கமாக்கிக்கொள்கின்றன...
http://www.marymartin.com/web?pid=800287
--------------------------------------------------------------------------------
நா. பிச்சமூர்த்தி சிறுகதைகள் = Nā. Piccamūrtti Cirukataikaḷ / நா. பிச்சமூர்த்தி = Nā. Piccamūrtti
சென்னை: எழுத்து பிரசுரம் = (Zero degree/Ezhuthu Pirasuram), Ceṇṇai, 2021
870p.; 22 cm.
9789390053278
$ 50.00 / pb
820gm.

Short Stories
மேல்நாட்டு இலக்கிய வடிவமான சிறுகதைக்கு இந்திய உருவம் கொடுத்தவர் ந. பிச்சமூர்த்தி என்ற க.நா.சு.வின் கூற்று முற்றிலும்

உண்மை என்பது அவரது சிறுகதைகளை மீள்வாசிப்புக்கு உட்படுத்தியபோது உறுதியாகிறது. அதேபோல் தமிழில் புதுக்கவிதையின் தந்தை என்று கருதப்படுபவரும் ந. பிச்சமூர்த்தியே ஆவார். சி.சு. செல்லப்பாவின் எழுத்து பத்திரிகை 1959 ஜனவரியில் தொடங்கி 1970 ஜனவரியில் முடிவுக்கு வந்தது. மொத்தம் 119 இதழ்கள். முதலில் மாதப் பத்திரிகை; பிறகு காலாண்டு. முதல் இதழில் வெளிவந்த பிச்சமூர்த்தியின் பெட்டிக்கடை நாரணன்தான் தமிழில் வெளிவந்த முதல் புதுக் கவிதை. இன்றைய தினம் புதுக்கவிதை எழுதுகின்ற அத்தனை பேரும் நன்றி கூற வேண்டியது ந. பிச்சமூர்த்திக்கு. இவ்வளவுக்கும் அவர் தன்னை ஒரு எழுத்தாளன் என்றே சொல்லிக்கொள்ளத் தயங்குகிறார். பிச்சமூர்த்தியை முழுதாகப் படித்தபோது இன்னொரு முக்கியமான விஷயத்தை அவதானித்தேன். அவருடைய கவிதை, சிறுகதை அனைத்தும் இன்று எழுதியது போல் அவ்வளவு சமகாலத் தன்மை கொண்டதாக இருக்கிறது. சுதந்திர தின ஆர்ப்பாட்டங்களைக் கிண்டலடித்து எழுதிய வெள்ளி விழா என்ற கவிதை ஓர் உதாரணம்.
**http://www.marymartin.com/web?pid=800289**
------------------------------------------------------------------------------------
இலக்கியச் சிந்தனை பரிசு பெற்ற 50 சிறந்த சிறுகதைகள் (1970-2019) = Ilakkiyac Cintaṇai Paricu Perra 50 Ciranta Cirukataikaḷ (1970-2019)
சென்னை: வானதி பதிப்பகம் = Vāṇati Patippakam, Chennai, 2021
608p.; 22 cm.
$ 25.00 / pb
610gm.

Short Stories
**http://www.marymartin.com/web?pid=800291**
------------------------------------------------------------------------------------------------
சூடு (சிறுகதைத் தொகுப்பு) = Cūṭu (Cirukatait Tokuppu) / நர்சிம் = Narcim
சென்னை: டிஸ்கவரி பப்ளிகேஷன்ஸ் = Tiskavari Papḷikēśaṇs, Ceṇṇai, 2021
94p.; 20 cm.
9789391994112
$ 6.00 / pb
150gm.

Short Stories
**http://www.marymartin.com/web?pid=800292**
---------------------------------------------------------------------------------------
சி. எம். முத்துவின் தேர்ந்தெடுத்த சிறுகதைகள் = Ci.Em. Muttuviṇ Tērnteṭutta Cirukataikaḷ / சி. எம். முத்து = Ci.Em. Muttu
சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட் = Niyū Ceñcuri Puk Havus (P) Liṭ, Ceṇṇai, 2021
563p.; 22 cm.
9788123441832
$ 28.25 / pb
580gm.

Short Stories
http://www.marymartin.com/web?pid=800293
-------------------------------------------------------------------------------------------
இரண்டு உலகங்கள் தேர்ந்தெடுத்த சிறுகதைகள் = Iraṇṭu Ulakankaḷ Tērnteṭutta Cirukataikaḷ / வண்ணநிலவன் = Vaṇṇanilavaṇ
நாகர்கோவில்: காலச்சுவடு பதிப்பகம் = Kālaccuvaṭu Patippakam, Nākarkōvil, 2021
271p.; 23 cm.
9789355230379
$ 16.25 / pb
380gm.

Short Stories
வலிமையான சமூகத்தை எதிர்கொள்வதற்கான ஆன்ம பலத்தை வழங்குகின்றன வண்ணநிலவனின் கதைகள். நம்மைச் சோதிக்க முனைகின்ற ஒவ்வொரு தருணத்தையும் அதன் வன்மம்சார்ந்து இக்கதைகள் நமக்குக் காட்ட முனைவதால் இத்தகைய ஆன்ம பலம் நம்மில் உண்டாகிறது. வண்ணநிலவனின் மனிதர்கள் எளிமையானவர்கள். ஆனால் நம் பார்வையின் எல்லைக்குள் அவர்கள் தென்படுவதில்லை. இவர்களின் துயரங்களைக் கணிப்பதற்கான படைப்பாற்றலை வண்ணநிலவன் கொண்டிருப்பது தமிழ் இலக்கியத்தின் பேறு. இத்தகைய அரிய மனிதர்களின் வாழ்வை அதே தொனியில் மாற்றும்போது, படைப்பின் வலிமை குன்றிவிடலாகாது. எனினும் அதற்கான கவன ஈர்ப்பை மனத்தில் கொள்ளாது இயல்பாகத் தன்னை மேலெழுப்பிக்கொள்வதில்தான் வண்ணநிலவனின் படைப்பாற்றல் ஒளிர்வதாக உணர்கிறேன். மேலே கூறப்பட்டவற்றிற்குச் சான்றுபகரும் கதைகளே இவை.
http://www.marymartin.com/web?pid=800294
-------------------------------------------------------------------------------------
பேரீச்சை = Pērīccai / அனோஜன் பாலகிருஷ்ணன் = Aṇōjaṇ Pālakiruśṇaṇ
நாகர்கோவில்: காலச்சுவடு பதிப்பகம் = Kālaccuvaṭu Patippakam, Nākarkōvil, 2021
135p.; 22 cm.
9789391093358
$ 8.00 / pb
230gm.

Short Stories
'ஈழத்துத் தமிழ் இலக்கியம்' என்னும் தனி ஒதுக்கீட்டை உடைத்துத் தமிழ் நவீன இலக்கியத்தின் பொதுப்போக்கிற்குள் இயல்பாக இணைந்தவர்கள் அ. முத்துலிங்கம், ஷோபா சக்தி ஆகியோர்; அனோஜன் அதன் தொடர்ச்சி. நவீன வாழ்வின் போக்குகளையும் இத் தலைமுறையின் இயல்புகளையும் சாதாரணமாக எழுதிச்செல்கிறார். எழுதக்கூடாத, அதிர்ச்சி தரும் 'அறங்களையும் விழுமியங்களையும்' அனோஜன் கதைகளில் காணலாம். காமத்தின் கோணங்களையும்

பட்டவர்த்தனமாக எழுதுகிறார். மரபான கதைசொல்லியின் லாவகமும் மொழியும் கொண்ட அனோஜன் கதைகள் என்னை மிகவும் ஈர்க்கின்றன.
[http://www.marymartin.com/web?pid=780986](http://www.marymartin.com/web?pid=780986)
-----------------------------------------------------------------------------------------
எம்.வி. வெங்கட்ராம் சிறுகதைகள் முழுத் தொகுப்பு = Em. Vi. Venkaṭrām Cirukataikaḷ Mulut Tokuppu / ரவிசுப்பிரமணியன் கல்யாணராமன் = Ravicuppiramaṇiyaṇ Kalyāṇarāmaṇ
நாகர்கோவில்: காலச்சுவடு பதிப்பகம் = Kālaccuvaṭu Patippakam, Nākarkōvil, 2021
1175p.; 23 cm.
9789390802562
$ 62.50 / hb
1700gm.

Short Stories
நவம்பர் 1936 முதல் டிசம்பர் 1984 வரையில், 'மணிக்கொடி' முதல் 'எழுச்சி'வரையில் எம்.வி. வெங்கட்ராம் எழுதிய நூற்று ஆறு சிறுகதைகளின் காலவரிசைத் தொகுப்பாக இந்நூல் வெளிவருகிறது. பல்வேறு பழைய பத்திரிகைகளிலிருந்து புதிதாகக் கண்டறியப்பட்ட எம்.வி.வி. யின் முப்பத்து மூன்று சிறுகதைகள், இப்போதுதான் முதல்முறையாக இத்தொகுப்பில் பிரசுரம்பெறுகின்றன. எண்ண வெள்ளமாய்ப் பொங்கும் இயல்புணர்வுகளின் பெருங்காடே, இம்முழுத் தொகுப்பு. லௌகீகத்தின் இரைச்சலும் தத்துவத்தின் அமைதியும் பளிச்சிடும் உணர்வோடைக் கதைஞராகவும், 'பரிசோதனை எழுத்தாளராகவும்' எம்.வி.வி. அடைந்த கலை வெற்றியின் படைப்பாவணமாகிறது இந்நூல்.
[http://www.marymartin.com/web?pid=780959](http://www.marymartin.com/web?pid=780959)
-----------------------------------------------------------------------------------------
தமிழ் நெடுஞ்சாலை = Tamil Neṭuñcālai / ஆர். பாலகிருஷ்ணன் = ār. Pālakiruśṇaṇ
சென்னை: விகடன் பிரசுரம் = Vikaṭaṇ Piracuram, Ceṇṇai, 2021
336p.; ills. 24 cm.
9788195164714
$ 16.50 / pb
620gm.

ஒவ்வொரு பயணமும் ஒவ்வொரு பாடம் தருபவை. முக்கியமான கடமையைச் செய்ய மேற்கொள்ளும் பயணங்களில் சவால்களையும் எதிர்பாராத திருப்பங்களையும் எதிர்கொள்ளக்கூடும். என்றாலும் பயணங்கள் எப்போதும் இனிமையானவையே. தமிழில் படித்து தமிழைப் பிடித்து உயர்நிலைக்குச் சென்ற ஓர் உயர் அதிகாரி, இந்தத் தமிழ் நெடுஞ்சாலை முழுதும் தன் அனுபவங்களைப் பகிர்ந்தபடி பயணிக்கிறார். ஒவ்வோர் அத்தியாயமும் ஒவ்வொரு மைல் கல்லாக

பல செய்திகளைத் தருகின்றன. தமிழ் வழியில் படித்து ஐ.ஏ.எஸ் அதிகாரியாகி ஒடிசா மாநில அரசின் உயர் பொறுப்புகளிலும் தலைமைத் தேர்தல் ஆணையத்தின் உயர் பொறுப்பிலும் இருந்து தம் கடமையைச் சரிவர செய்து பலரின் பாராட்டுப் பெற்றவரின் அனுபவங்கள் ஒவ்வொன்றும் முன்மாதிரியாக அமைந்திருக்கின்றன. ஆனந்த விகடனில் வெளிவந்த தமிழ் நெடுஞ்சாலைத் தொடர் கட்டுரைகளின் தொகுப்பு நூல் இது. தேர்தலில் ஒவ்வொரு குடிமகனின் வாக்கு எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை, ‘கேரள மாநிலம் காக்கயம் அணைப்பகுதியில் ஒரே ஒருவரின் வாக்கைப் பதிவு செய்வதற்காக, அடர்ந்த காட்டுக்குள் ஆறு ஊழியர்கள் மின்னணு இயந்திரத்தைக் கொண்டு சென்று வாக்கைப் பதிவு செய்து வந்தனர்' என்ற செய்தி நமக்குக் காட்டுகிறது. இதுபோல பல சுவையான சம்பவங்களைத் தன் அனுபவங்களோடு சேர்த்துச் சொல்லியிருக்கிறார் நூலாசிரியர் ஆர். பாலகிருஷ்ணன். தகவல்கள் பல அறிய இனி தமிழ் நெடுஞ்சாலையில் பயணிப்போம் வாருங்கள்!
**http://www.marymartin.com/web?pid=800485**

----------------------------------------------------------------------------------------

**Cinema / Film Studies**

இந்திய கனவுத் தொழிற்சாலைகள்: பாலிவுட் முதல் பஞ்ச்வுட் வரை... கோலிவுட் முதல் ஜாலிவுட் வரை... 33 இந்தியத் திரைப்பட உலகங்களின் அறிமுகம் = Intiya Kaṇavut Tolircālaikaḷ: pālivuṭ Mutal Pañcvuṭ Varai... Kōlivuṭ Mutal Jālivuṭ Varai... 33 Intiyat Tiraippaṭa Ulakankaḷiṇ Arimukam / ப்ரஸன்னா = Prasaṇṇā
சென்னை: டிஸ்கவரி பப்ளிகேஷன்ஸ் = Tiskavari Papḷikēśaṇs, Ceṇṇai, 2021
232p.; ills. 22 cm.
9789391994129
$ 13.50 / pb
350gm.

இந்தியா, பல மொழிகள் பேசப்படும் ஒரு கூட்டுச் சமூகம். இந்திய மொழிகளின் சென்ஸஸ் கணக்குப்படி, இந்தியாவில் பேசப்படும் ‘தாய்மொழி’களின் எண்ணிக்கை சுமார் 10,400. பல மொழிகள் ஒரு குறிப்பிட்ட மொழியின் திரிபு என்பதாலும், ஒரு மொழியே மீசை வைத்துக்கொண்டும், மச்சம் ஒட்டிக்கொண்டும் பல மாறுவேடங்கள் போடுவதாலும், இந்தத் தொகை கணிசமாகச் சுருங்கி கடைசியில், முக்கியமான மொழிகள் 114 என்று கணக்கிடப்பட்டுள்ளது. இந்த மொழிகளின் அடிப்படையில்தான், அவற்றைச் சார்ந்த திரைப்பட உலகங்கள் இயங்குகின்றன. கிட்டத்தட்ட 40க்கும் மேற்பட்ட மொழிகளில் இந்தியாவில் திரைப்படங்கள் தயாரிக்கப்படுகின்றன. ஆகவே, 40க்கும் மேற்பட்ட திரைப்பட உலகங்களும் இங்கே இருக்கின்றன. அதிலும் மிக முக்கியமான இந்தியாவின் 33 திரைப்பட உலகங்களை உங்களுக்கு அறிமுகப்படுத்துகிறது இந்தப் புத்தகம்.
**http://www.marymartin.com/web?pid=800444**

------------------------------------------------------------------------------------------

வைரமுத்து வரை: தமிழ்த் திரைப்பாடல் வரலாறு 1931 முதல் 2020 வரை = Vairamuttu Varai: Tamilt Tiraippāṭal Varalāru 1931 Mutal 2020 Varai / சு. சண்முகசுந்தரம் = Cu. Caṇmukacuntaram
சென்னை: காவ்யா பதிப்பகம் = Kāvyā Patippakam, Ceṉṉai, 2021
lx, 1490p.; 23 cm.
$ 80.00 / hb
2130gm.

வைரமுத்து வரை - என்ற தமிழ்த் திரைப்பாடல் வரலாறு பேசும் இந்நூலில் 1931 இல் தமிழின் முதல் பாடல் எழுதியவர் முதல், சூழல் காரணமாக ஒரே ஒரு ஒற்றைப் பாட்டெழுதிய கவிஞர்கள் வரை அனைவரையும் பாகுபாடில்லாமல் ஆவணப் படுத்தப் பட்டுள்ளது. உண்மையில் இது தமிழ் திரைப்பட வரலாற்றை திரும்பிப் பார்க்கும் ஒவ்வொருவருக்கும் ஒரு அரிய பொக்கிஷம்.
**http://www.marymartin.com/web?pid=800446**
--------------------------------------------------------------------------------
நீட்ஷேவின் குதிரை = Nīṭśēviṉ Kutirai / அய்யனார் விஸ்வநாத் = Ayyaṇār Visvanāt
சென்னை: எழுத்து பிரசுரம் = (Zero degree/Ezhuthu Pirasuram), Ceṉṉai, 2021
215p.; 22 cm.
9789390884766
$ 13.00 / pb
320gm.

இலக்கிய வாசிப்பு உருவாக்கும் மன விரிவுகளையும் திரைப்படங்கள் வழியாகப் பெற்றுக் கொள்ள முடிகிற மாபெரும் கிளர்வுகளையும் கச்சிதமான மொழியால் கடத்தி விட முடிவது அசாதாரணமானதுதான். அந்த வகையில் நீட்ஷேவின் குதிரை தமிழ்ச் சூழலில் அதிகம் விவாதிக்கப்பட்டிராதப் படைப்புகளையும் அபூர்வமான திரையாக்கங்களையும் நமக்கு அறிமுகம் செய்து வைக்கிறது.
**http://www.marymartin.com/web?pid=800340**
--------------------------------------------------------------------------------
கலைஞரின் திரைப்பயணம் = Kalaiñariṇ Tiraippayaṇam / பாலபாரதி = PālaPārati
சென்னை: ராம்பிரசாந்த் பப்ளிகேஷன்ஸ் = Rāmpiracānt Papḷikēśaṇs, Ceṉṉai, 2021
200p.; ills. 22 cm.
9789382814504
$ 7.50 / pb
300gm.

Biography
கலைஞர் மு. கருணாநிதி... இந்தப் பெயரை உச்சரிக்கும்போதே ஒரு அதிர்வு ஏற்படும்! அவரின் தமிழைப் போலவே, அந்தப் பெயரிலும் ஒரு காந்த சக்தி இருப்பதை உணரமுடியும்! உடன்பிறப்புகளே என்று ஒலிக்கும் அந்த கரகரத்த குரல் இப்போது ஓய்ந்துவிட்டாலும், இன்னும்

பல்லாண்டுகள் பல கோடி இதயங்களில் அந்தக் குரல் எதிரொலித்துக் கொண்டேயிருக்கும்.
[http://www.marymartin.com/web?pid=800483](http://www.marymartin.com/web?pid=800483)
------------------------------------------------------------------------------------------

**Ecology**

பறந்து கொண்டிருக்கும் கழுகு (சுப்ரபாரதிமணியன் கட்டுரைகள்) = Parantu Koṇṭirukkum Kaluku (Cuprapāratimaṇiyaṉ Kaṭṭuraikaḷ) /
சுப்ரபாரதிமணியன் = Cuprapāratimaṇiyaṉ
சென்னை: காவ்யா= kāvyā, Ceṉṉai, 2021
vi, 632p.; 22 cm.
$ 32.00 / pb
780gm.

கழுகு என்பது அக்சிபிட்ரிடே என்னும் பறவைக் குடும்பத்தைச் சேர்ந்த, வலுவான பெரிய கொன்றுண்ணிப் பறவை ஆகும். பறவைகளின் அரசன் என்ற சிறப்பு பெறுகிறது கழுகு. அதிகாரம், சுதந்திரம், மேன்மை ஆகியவற்றின் அடையாளமாகவும் கருதப்படுகிறது.
உலகம் முழுவதும் கழுகுகள் பரவலாகக் காணப்படுகின்றன. பெரும்பாலும் பழைய உலகம் என்று சொல்லப்படும் ஆசியா, ஆப்பிரிக்கா, ஐரோப்பாவில் தான் அதிகம் காணப்படுகின்றன. கழுகுகளில் மொத்தம் 74 இனங்கள் உள்ளன. ஆனாலும், அவற்றுள் 60 இனங்கள் யூரேஷியா, ஆப்பிரிக்கப் பகுதிகளில் காணப்படுகின்றன. பொதுவாக கழுகுகள் நான்கு வகையாக பிரிக்க படுகின்றன. அவை, 1. கடல் கழுகுகள் 2. கால் வரை ரோமம் உள்ள கழுகுகள் 3. பாம்பு உண்ணும் கழுகுகள் 4. ராட்சச காட்டு கழுகுகள்.
[http://www.marymartin.com/web?pid=799959](http://www.marymartin.com/web?pid=799959)
------------------------------------------------------------------------------

**Economics**

இந்தியப் பொருளாதாரம்: வரலாறு காட்டும் வழிகள் = Intiyap Poruḷātāram: Varalāru Kāṭṭum Valikaḷ / மால்கம் ஆதிசேசையா = Mālkam āticēcaiyā
சென்னை: சென்னை வளர்ச்சி ஆராய்ச்சி நிறுவனம் = Madras Institute of Development Studies, Chennai 2021
251p.; ills. 22 cm.
9788194753315
$ 12.50 / pb
360gm.

வளர்ச்சியும் சமூகநீதியும் ஒன்றுக்கொன்று பொருந்தாமல் உள்ளன என்றால் அது ஏன் என்பதைப் புரிந்துகொள்வதற்குச் சென்ற முப்பதாண்டுக் காலத்தில் யார் வளர்ச்சி பெற்றார்கள் என்பது மட்டுமின்றி எது வளர்ச்சி பெற்றது என்ற வினாவுக்கும் விடை காண வேண்டும். கல்வி வேறு, கல்விமுறை வேறு. கல்வி என்பது கற்கின்ற செயலை அடிப்படையாகக் கொண்டது. கல்விமுறையானது

ஆசிரியர்கள், மாணவர்கள், பள்ளிக்கூடங்கள், கல்லூரிகள், பல்கலைக் கழகங்கள், நூல் நிலையங்கள், சோதனைக் கூடங்கள், விளையாட்டரங்கங்கள், பாடத்திட்டங்கள், பாடப்புத்தகங்கள், தேர்வுகள், பட்டங்கள் போன்ற அமைப்பு அம்சங்களின் தொகுப்பாகும்.
**http://www.marymartin.com/web?pid=781229**
------------------------------------------------------------------------------

**Education**

சிற்பியைச் செதுக்கும் சிற்பங்கள் = Cirpiyaic Cetukkum Cirpankaḷ / ஜோல்னா ஜவஹர் = Jōlṇā Javahar
சென்னை: பாரதி புத்தகாலயம் = Pārati Puttakālayam, Ceṇṇai, 2021
112p.; 22 cm.
$ 5.00 / pb
240gm.

Education
வகுப்பறையைப் புதுப்பிக்கும் குரல் இது! பள்ளி – வீதி – மேடை – அரங்கு என எல்லாக் களங்களிலும் எதிரொலிக்கு சக்தி வாய்ந்த குரலும் கூட. புத்தகத்தை மூடிய பிறகும் இந்தக் குரல் தான் இடையறாது கேட்கிறது.
**http://www.marymartin.com/web?pid=800428**
------------------------------------------------------------------------------------

**History**

மதுரை போற்றுதும் = Maturai Pōrrutum / ச.  சுப்பாராவ் = Ca. Cuppārāv
சென்னை: சந்தியா பதிப்பகம் = Cantiyā Patippakam, Ceṇṇai, 2021
199p.; 22 cm.
$ 10.00 / pb
240gm.

படிக்காத ரவுடிகள், எப்போது பார்த்தாலும் கூச்சல் போட்டுப் பேசிக் கொண்டு, முதுகுப்பக்கத்திலிருந்து அரிவாளை எடுக்கும் முரடர்கள்தான் மதுரைக்காரர்கள் என்று ஏனோ படங்களில் காட்டுகிறார்கள். என் மகள் கோவையில் ஒரு பெரிய பொறியியல் கல்லூரியில் சேர்ந்தபோது, அவளுடைய பேராசிரியர் வரிசையாக ஒவ்வொருவரிடமும் அவரவரது ஊர், பள்ளி பற்றி விசாரித்திருக்கிறார். என் மகள் மதுரை, கேந்திரிய வித்யாலயா என்றதும், அவர் ‘என்ன, மதுரைல கேந்திரிய வித்யாலயா கூட இருக்கா?’ என்றாராம் கிண்டலாக. என் மகள் கோபமாக, ‘ஒன்றல்ல, இரண்டு இருக்கின்றன. மூன்றாவதும் வரப்போகிறது’ என்றாளாம். மதுரை பற்றி வெளியூர்க்காரர்களின் பார்வை இதுதான். ஆனால், சங்கம் வைத்து முத்தமிழையும் வளர்த்த அந்தப் பழைய மதுரை அப்படியேதான் இருக்கிறது. எழுத்தும், இசையும், நாடகமுமாகத்தான் எங்கள் மதுரை இன்றும் இருக்கிறது என்பதை நான் என் கண்களால் நேரடியாகப்

பார்த்திருக்கிறேன். பார்த்து வருகிறேன். அதைத்தான் இங்கே எழுதி இருக்கிறேன்.
[http://www.marymartin.com/web?pid=800436](http://www.marymartin.com/web?pid=800436)
------------------------------------------------------------------------------------------
ஆயர்கள் (வரலாற்றுப் பார்வை) = āyarkaḷ (Varalārrup Pārvai) / சா. கருணாகரன் = Cā. Karuṇākaraṇ
சென்னை: தடாகம் வெளியீடு = Thadagam Veḷiyīṭu, Ceṇṇai 2021
176p.; ills. 22 cm.
9788195268849
$ 10.00 / Pb
260gm.

'இந்நூளில் களஆய்வு பெறும் இடம் விதந்து குறிப்பிடத்தக்கது. ஓர் இனத்தின் உண்மையான, தெளிவான, விரிவான தகவல்கள் களஆய்வின் மூலம் திரட்டப்பெற்று, வகைதொகை செய்து, ஆராயப்பட வேண்டும். உற்றுநோக்கல், விளக்கம் பெறுதல். உசாவல்முறை எனப் பல்வேறு உத்திகளைப் பயன்படுத்தித் தகவல் திரட்டப்படவும், சரிபார்க்கப்படவும் வேண்டும். கடினமான பேருழைப் பும், பல்லோர் உதவியும், பொருட்செலவும் கொண்ட இவ்வாய்வு மனிதகுலத்தை விளங்கிக்கொள்ளவும் வரலாற்றை முன்னெடுக்கவும் உறுதுணை புரிகிறது. ஆயர் என்னும் ஆய்வுக்களம் பரந்து விரிந்தது; தொன்மையானது. ஆழமான வரையறை செய்திடத் தேவையான எல்லையற்ற ஈடுபாடும். அயராத உழைப்பும் ஆய்வு அர்ப்பணிப்பும் முனைவர் சா. கருணாகரனிடம் இயல்பாசுவே மிகுதியாக உண்டு.'
முனைவர் சா. பாலுசாமி
[http://www.marymartin.com/web?pid=781224](http://www.marymartin.com/web?pid=781224)
------------------------------------------------------------------------
ஜமீன்களின் கதை! = Jamīṇkaḷiṇ Katai! / கே. என். சிவராமன் = Kē. Eṇ. Civarāmaṇ
சென்னை: சூரியன் பதிப்பகம் = Cūriyaṇ Patippakam, Chennai, 2021
720p.; 22 cm.
9788195167913
$ 25.00 / pb
850gm.

History
இது கதையல்ல. போலவே கட்டுரையும். இரண்டும் கலந்த நடையில் எழுதப்பட்ட இத்தொடர், 'தினகரன் நாளிதழுடன் ஞாயிறு தோறும் வெளிவரும் 'வசந்தம்' இணைப்பிதழில் தொடராக வெளிவந்து வாசகர்களிடம் அமோக வரவேற்பைப்பெற்றது. முதல் 13 அத்தியாயங்கள் நிலம் குறித்தே பேசப்பட்டிருக்கிறது. எதுவும் கற்பனையில்லை. மிகைப்படுத்தலும். ஆதாரங்கள் அடிப்படையிலேயே எழுதப்பட்டு இப்பொழுது புத்தக வடிவில் வெளிவருகிறது. தமிழகத்திலுள்ள அனைத்து ஜமீன்களின் வரலாறும் இதில் பதிவாகி இருக்கிறது என்று சொல்லமுடியாது. அதேநேரம்,

முக்கியமான ஜமீன்கள் எதுவும் விடுபட்டு விடவில்லை என உறுதியாகச் சொல்லலாம். எந்தெந்த ஆராய்ச்சியாளர்களின் நூல்கள் இத்தொடரை எழுத பயன்பட்டன என்பது அந்தந்த அத்தியாயங்களிலேயே குறிப்பிடப்பட்டுள்ளது. சரளமான நடையில் தமிழக ஜமீன்களின் வரலாறு பதிவாகி யிருக்கிறது என்பது இப்புத்தகத்தின் பலம்.
http://www.marymartin.com/web?pid=800337
-------------------------------------------------------------------------------------
தமிழ்ச் சங்கம்: மெய்யா? புனைவா? = Tamilc Cankam: Mauyyā? Puṇaivā? / ந. ராம்குமார் = Na. Rāmkumār
சென்னை: பாரதி புத்தகாலயம் = Pārati Puttakālayam, Ceṇṇai, 2021
111p.; 22 cm.
9789391262303
$ 5.00 / pb
200gm.

தாய்மொழி மீது கொண்ட பற்று, ஒருவனை அதன் தொன்மையையும், மூலத்தையும் அறியத் தூண்டுகிறது. எனினும் அது அவ்வளவு எளிதான காரியமல்ல என்பதை ஒரு ஆய்வின் போது அறிந்து கொள்ளலாம்.
http://www.marymartin.com/web?pid=800046
-------------------------------------------------------------------------------------------
தமிழா? சமஸ்கிருதமா? = Tamilā? Camaskirutamā? / கண்ணபிரான் இரவிசங்கர், கரச = Kaṇṇapirāṇ Iravicankar, KRS
சென்னை: தடாகம் வெளியீடு = Taṭākam Veḷiyīṭu, Chennai, 2021
xx, ills. 246p.; 22 cm.
9789388627191
$ 9.00 / pb
260gm.

History
ஒருவர், ஒரே ஒரு கேள்வி கேட்கின்றார்; அந்த ஒரு வரிக் கேள்விக்கு, கிட்டத்தட்ட 12 பக்கம் சிலப்பதிகாரச் சிறப்புகளை எல்லாம் சொல்லிச்சொல்லி ஆத்துப் போகிறார் பேரா. கண்ணபிரான் இரவிசங்கர். இது போல் பல கேள்விகளைக் கண்ணபிரானை நோக்கி எல்லோரும் எழுப்ப வேண்டும். அதற்கு அவர் பதில் சொல்வதாக, இன்னும் பல புத்தகங்கள் எழுத வேண்டும் என்பது என் விருப்பம். ஒரு நூலைப் படித்தால், அது இன்னொரு நூலைப் படிக்க, நூல் பிடித்தாற் போல நம்மை இழுத்துச் செல்ல வேண்டும்! அதுவே சிறந்த நூல்! அப்படி, முனைவர் கண்ணபிரானின் 'தமிழா? சம்ஸ்கிருதமா?' என்கிற இந்த நூல், மீண்டும் சிலப்பதிகாரத்தைப் படிக்க என்னை இழுத்துச் செல்கிறது; உங்களையும், ஒரு நூறு புத்தகங்கள் வாசிக்க, இந்த நூல் தூண்டும்!
http://www.marymartin.com/web?pid=774183
-----------------------------------------------------------------------------------------

வேலூர்ப் புரட்சி 1806 = Vēlūrp Puraṭci 1806 / கா. அ. மணிக்குமார் = Kā. A. Maṇikkumār
நாகர்கோவில்: காலச்சுவடு பதிப்பகம் = Kālaccuvaṭu Patippakam, Nākarkōvil, 2021
271p.; ills. 22 cm.
9789355230232
$ 16.25 / pb
360gm.

1806 ஜூலை 10. அதிகாலை இரண்டு மணி. வேலூர்க் கோட்டை. ஏறத்தாழ 500 இந்தியப் படை வீரர்கள் அதன் ஐரோப்பியர் குடியிருப்புக்குள் நுழைந்து ஏராளமான வெள்ளை இன அதிகாரிகளையும் போர்வீரர்களையும் சுட்டுக் கொன்றனர். கர்னல் ராபர்ட் கில்லெஸ்பி என்ற தளபதியின் தலைமையில் ஆங்கிலேயர் படை வெளியூரிலிருந்து வரும்வரை அவர்களது கிளர்ச்சி எந்த எதிர்ப்புமில்லாமல் நீடித்தது. பின்னர் நடந்த கடும் மோதலில் எண்ணற்ற இந்தியப் படைவீரர்கள் கொல்லப்பட்டனர். தப்பியோடிய நூற்றுக்கணக்கானோரை ஆங்கிலப் படையினர் விரட்டிக் கொன்றனர். கைது செய்யப்பட்டவர்களை இராணுவ நீதிமன்றம் விசாரித்துத் தண்டித்தது.
http://www.marymartin.com/web?pid=800474
------------------------------------------------------------------------------------------
புனிதப் பாவங்களின் இந்தியா: ஆசாரங்களின் பெயரால் பாலியல் தொழிலுக்குத் தள்ளப்பட்ட பெண் வாழ்க்கைகளினூடே ஒரு பயணம் = Puṇitap Pāvankaḷiṉ Intiyā: ācārankaḷiṉ Peyarāl Pāliyal Tolilukkut Peṇ Vālkkaikaḷiṉūṭē Oru Payaṇam / அருண் எழுத்தச்சன் = Aruṇ Eluttaccaṉ
நாகர்கோவில்: காலச்சுவடு பதிப்பகம் = Kālaccuvaṭu Patippakam, Nākarkōvil, 2022
255p.; ills. 22 cm.
9789355231482
$ 16.25 / pb
340gm.

இந்தியாவில் தேவதாசிமுறை சட்டப்பூர்வமாக ஒழிக்கப்பட்டுவிட்டது. ஆனால் மதம், பண்பாடு, மரபு ஆகியவற்றின் பெயரால் அந்த அவலம் இன்றும் தொடர்கிறது. மூடநம்பிக்கைகளும் காலத்துக்குப் பொருந்தாத சடங்குகளும் பெண்களை இப்போதும் வரலாற்றின் புதைகுழிக்குள் தள்ளிக்கொண்டிருக்கின்றன. பத்திரிகையாளரான அருண் எழுத்தச்சன் இந்தியா முழுவதும் எட்டாண்டு காலம் பயணம் செய்து தேவதாசி மரபின் எச்சங்களையும் அந்த மரபுக்கு இரையாக்கப்பட்ட பெண்கள் பாலியல் தொழிலுக்குத் தள்ளப்பட்டிருப்பதையும் காண்கிறார். தரவுகளின் அடிப்படையிலும் நேர்அனுபவத்தின் பின்புலத்திலும் உண்மைகளை இந்த நூலில் முன்வைக்கிறார்.
http://www.marymartin.com/web?pid=800481

-------------------------------------------------------------------------------------------------
ஆரியக் கூத்து = āriyak Kūttu / அ. மார்க்ஸ் = A. Mārks
சென்னை: எழுத்து பிரசுரம் = (Zero degree/Ezhuthu Pirasuram), Ceṇṇai, 2021
168p.; 22 cm.
9789391748500
$ 10.00 / pb
300gm.

கால்டுவெலின் திராவிட மொழிக்குடும்பம் பற்றிய கண்டுபிடிப்பும் சிந்து சமவெளி அகழ்வுகள் வெளிப்படுத்திய உண்மைகளும் சென்ற நூற்றாண்டில் தமிழக அரசியலை பாதித்த இரு முக்கிய நிகழ்ச்சிகள். இதன் மூலம் எழுச்சி கொண்ட பார்ப்பன எதிர்ப்பு அரசியலின் வீச்சில் ஓராண்டு காலம் ஓய்ந்து கிடந்த தமிழகப் பார்ப்பனர்கள் இன்றைய இந்துத்துவ எழுச்சியைப் பின்புலமாகக் கொண்டு வரலாற்றைப் புரட்டுகின்றனர். "தமிழக அந்தனர் வரலாறு" என்கிற பெயரில் பொய் மூட்டைகளை அவிழத்ததுவிடுகின்றனர். ஆரியப் பிரச்சினை, திராவிட மற்றும் இந்தோ – ஆரிய மொழிக்குடும்பங்கள் குறித்த நவீனமான வரலாற்றுச் சிந்தனைகளின் அடிப்படியில் அந்தனப் புரட்டுகளை தோலுரிக்கிறார் அ. மார்க்ஸ் வெறும் விவாத நோக்கிலான நூலாகவன்றி வரலாற்று உண்மைகள் பற்றிய சமகாலக் கருத்துக்களின் தொகுப்பாகவும் இது அமைந்துள்ளது. இந்த நூலின் ஒரு பகுதி "ஏன் பார்ப்பனர்கள் கால்டுவெல்லைக் கரித்துக் கொட்டுகிறார்கள்" எனும் தலைப்பில் இதே தளத்தில் உள்ளது. நண்பர்கள் வாசிக்கலாம். தரவிறக்கம் செய்துகொள்ளலாம்.
**http://www.marymartin.com/web?pid=800360**
---------------------------------------------------------------------------------------------
ஓர் அன்னாடுகாச்சியின் சேலம் = ōr Aṇṇāṭukācciyiṇ Cēlam / விட்டல்ராவ் = Viṭṭalrāv
சென்னை: சந்தியா பதிப்பகம் = Cantiyā Patippakam, Ceṇṇai 2021
145p.; 22 cm.
$ 7.50 / pb
280gm.

கடந்த நூற்றாண்டின் ஐம்பதுகளில் சேலம் நகரத்தில் தன் பால்யகாலத்தைக் கழித்த விட்டல்ராவ் தம் வாழ்வனுபவப்பதிவுகள் வழியாக தீட்டியிருக்கும் கட்டுரைகள் மிகமுக்கியமானவை. புதையுண்டுபோன ஒரு நகரத்தை அகழ்வாராய்ச்சியாளர்கள் பெருமுயற்சியெடுத்து கண்டெடுத்து பார்வைக்கு வைப்பதுபோல அந்தக் காலத்துச் சேலத்தை இன்று காணவைத்திருக்கிறார் விட்டல்ராவ். கனவுபோல மறைந்துவிட்ட அந்தக் காலத்துக்கு தம் சொற்கள் வழியாக உயிர்கொடுத்திருக்கிறார்.
அவர் குறிப்பிடும் ஏரி, சத்திரம், கடைகள் எதுவுமே இப்போது இல்லை. எல்லாமே உருமாறிவிட்டன. ஆனால் அவையெல்லாம் இங்கிருந்தன என்பதற்கு விட்டல்ராவின் குறிப்புகள் ஒரு வரலாற்றுச்சாட்சியாக நிற்கின்றன.

http://www.marymartin.com/web?pid=800372
--------------------------------------------------------------------------------
மதுரை வரலாறு (1736-1801) = Maturai Varalāru / கே. ராஜய்யன் = Kē. Rājayyaṇ
மதுரை: கருத்து பட்டறை = Karuttu Paṭṭarai, Maturai 2021
400p.; 22 cm.
$ 22.50 / pb
490gm.

History
மதுரையின் மரபுசார் அதிகாரம் முடிவுக்கு வந்த 1736-1801 ஆண்டுகளில், ஐரோப்பியர்களின் வல்லாதிக்ககாலம் தொடங்குவதை பேரா.கே. ராஜய்யன் கடும் உழைப்பில் ஆதாரங்களுடன் நிறுவியுள்ளார். பொருள்சார் சிந்தனை பெற்ற ஐரோப்பிய வல்லாதிக்க சூழ்ச்சி பெற்றவர்களின் முன் இந்து மற்றும் இசுலாமிய அதிகாரங்கள் தாக்குப் பிடிக்க முடியாமல், தக்க வைக்க முடியாமல் சோர்ந்துபோன வரலாற்றை துயர் மொழியில் பதிவு செய்துள்ளார்.
http://www.marymartin.com/web?pid=799977
-----------------------------------------------------------------------------------
தமிழரைத் தேடி... இந்தியாவின் மூலப்பண்பாடு தமிழே! = Tamilarait Tēṭi... Intiyāviṇ Mūlappaṇpāṭu Tamilē! / த. தங்கவேல் = ta. tankavēl
தூத்துக்குடி: சமூக இயங்கியல் ஆய்வு மையம் = Camūka Iyankiyal āyvu Maiyam, Tūttukkuṭi, 2022
316p.; ills. 22 cm.
$ 12.50 / pb
450gm.

" மீண்டும் ஆரியரைத் தேடி..." நூல் ஆசிரியர் பொறியாளர் தங்கவேல் எழுதிய "தமிழரைத் தேடி...", முற்றிலும் புதிய கோணத்தில் எழுதப்பட்ட இந்நூல் சிந்துவெளி பண்பாட்டின் அழிவிற்குப் பின் இந்திய வரலாற்றை வழி நடத்தியவர் தமிழரே என மிகத் தெளிவாக, தொல்லியல், மொழியியல், பண்பாட்டு மானிடவியல் சான்றுகளுடன் நிறுவுகிறது. தமிழர் 4000 ஆண்டுகளுக்கு முன்பே தென்பாண்டி பகுதியிலிருந்து நேரடியாக கப்பல் மூலம் ஆஸ்திரேலியாவிற்கு பயணித்துள்ளனர். இதன் மூலம் தமிழரின் மரபணுக்கள் தமிழக நாட்டு நாய், தமிழ்ச் சொற்கள் தமிழரின் வளைதடி ஆகியவை ஆஸ்திரேலியாவை அடைந்ததை இந்நூல் தெளிவாக நிறுவுகிறது. முதல் நூல் ஆரியரின் மூலத்தை தேடியவர், இதில் தமிழரின் ஆதி மூலத்தை தேடுகிறார். மிக முக்கியமாக இந்நூல் தொல்லியல், மொழியியல், மானுடவியல், மரபணுவியல் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளது. பொதுவாக தமிழரின் வரலாறுகள் யூகங்கள் அடிப்படையில் எழுதப்பட்ட சுழலில் உண்மையான அறிவியல் பார்வையில் எழுதப்பட்டிருக்கிறது இந்நூல்.
http://www.marymartin.com/web?pid=799978
-----------------------------------------------------------------------------

வேளிர் வரலாறு: சங்க கால அரசியல் = Vēḷir Varalāru: Canka Kāla Araciyal / ரா. பூங்குன்றன் = Ra. Pūnkuṇraṇ
சென்னை: தடாகம் வெளியீடு = Taṭākam Veḷiyīṭu, Chennai, 2021
208p.; 22 cm.
9789388627177
$ 11.00 / pb
290gm.

"வேளிர் வரளாறு" என்ற நூலைப் பலகாலமாகத் தாங்கள் தேடிக்கொண்டிருந்தீர்கள் என்று தெரியும். அந்த நூல் உங்களுக்குக் கிடைத்ததா என்று தெரியவில்லை. தற்செயலாக மதுரைத் திட்டத்தின் (Project Madurai) பக்கம் போனபோது அந்த நூலைப் பார்த்தேன் "வேளிர் வரளாறு" என்ற நூலைப் பலகாலமாகத் தாங்கள் தேடிக்கொண்டிருந்தீர்கள் என்று தெரியும். அந்த நூல் உங்களுக்குக் கிடைத்ததா என்று தெரியவில்லை. தற்செயலாக மதுரைத் திட்டத்தின் (Project Madurai) பக்கம் போனபோது அந்த நூலைப் பார்த்தேன்
**http://www.marymartin.com/web?pid=774196**
--------------------------------------------------------------------------------
மறுப்பும் உயிர்ப்பும் = Maruppum Uyirppum / ஸர்மிளா ஸெய்யித் = Sarmiḷā Seyyit
பொள்ளாச்சி: எதிர் வெளியீடு = Etir Veḷiyīṭu, Poḷḷācci, 2022
120p.; 22 cm.
9789390811441
$ 7.50 / pb
240gm.

ஸர்மிளா ஸெய்யித்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட கட்டுரைகளின் முதல் தொகுப்பு இது.
புனைவுப் பிரதிகளையும் அ-புனைவுப் பிரதிகளையும் முனைப்புடன் எழுதிக்கொண்டிருக்கும் ஸர்மிளா ஸெய்யித் முப்பதாண்டு கால ஈழப் போருக்குப் பின்னான காலத்தில், இலங்கையின் இனத்துவப் பிரச்சினைகளை மையமாக வைத்து எழுதிய கட்டுரைகளை இந்தத் தொகுப்புக் கொண்டுள்ளது.
வலுவான காற்றடிக்கும் பக்கமாகச் சாயும் எழுத்துச் சந்தர்ப்பவாதியல்லாமல் அரசாலும் உப ஆயுதக்குழுக்களாலும் மதநிறுவனங்களாலும் கடுமையாகக் கண்காணிக்கப்பட்டுக் கொண்டிருந்த காலத்தில் பல்வேறு எதிர்ப்புகளையும் புறக்கணிப்புகளையும் எதிர்கொண்டபடி ஈழ நிலத்தில் இருந்துகொண்டு ஒளிவுமறைவின்றி எழுதிய கட்டுரைகள் இவை.
**http://www.marymartin.com/web?pid=800450**
--------------------------------------------------------------------------------
உலகெங்கும் தமிழர் தடம் = Ulakaunkum Tamilar Taṭam / அமுதன் = Amutaṇ
வந்தவாசி: அகநி வெளியீடு = Akani Veḷiyīṭu, Vantavāci 2021
224p.; ills. 22 cm.
9789382810773

$ 10.00 / pb
260gm.

நாடு பிடிக்கும் நோக்கம் இல்லாமல், வணிகர்களாகவும், கலை, கலாச்சார தூதர்களாகவும் 1500 ஆண்டுகளுக்கு முன்பே கடல் கடந்து உலகின் பல்வேறு நாடுகளுக்குப் பயணித்த தமிழர்கள், அங்கே தங்கள் தடத்தை எவ்வாறு பதிவு செய்தார்கள் என்பதைத் தொகுத்துத் தந்து இருக்கும் இந்த நூலின் ஆசிரியர் அமுதனின் இயற்பெயர் எம். தனசேகரன்.
**http://www.marymartin.com/web?pid=800451**
--------------------------------------------------------------------------------
பாண்டி மண்டலத்தில் வாணாதிராயர்கள் = Pāṇṭi Maṇṭalattil Vāṇātirāyarkaḷ / வெ. வேதாசலம் = Ve. Vētācalam
மதுரை: கருத்து பட்டறை = Karuttu Paṭṭarai, Maturai, 2021
190p.; ills. 22 cm.
9789393633040
$ 12.50 / pb
330gm.

History
தமிழ்நாட்டில் பண்டைக் காலத்திலும் இடைக்காலத்திலும் இருந்த அரசுகளின் (state) தன்மை பற்றிய கோட்பாடுகள் இன்று தீவிரமாகச் சிந்திக்கப்பட்டு வருகின்றன. இச்சிந்தனை வளமுற வாணர் போன்ற குறுநிலமரபுகளின் அரசியல் சமுதாய நடவடிக்கைகள் பற்றித் தெளிவாக அறிந்து கொண்டால்தான் இயலும்.
**http://www.marymartin.com/web?pid=800454**
----------------------------------------------------------------------------
சிந்து நாகரிகமும் பழந்தமிழர் நாகரிகமும்: ஆர். பாலகிருஷ்ணனின் - Journey of a Civilization: Indus to Vaigai நூல் திறனாய்வு = Cintu Nākarikamum Palantamilar Nākarikamum: ār. Pālakiruśṇaṉiṉ - Journey of a Civilization: Indus to Vaigai Nūl Tiraṇāyvu / பழ. நெடுமாறன் = Pala. Neṭumāraṇ
சென்னை: பாரதி புத்தகாலயம் = Pārati Puttakālayam, Ceṉṉai, 2021
167p.; 22 cm.
$ 8.00 / pb
300gm.

சிந்துவெளி நாகரிகம் கண்டறியப்பட்டு ஏறத்தாழ 98ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டன. தற்காலத்திலிருந்து நாலாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட இந்த நாகரிகத்தைப் படைத்தவர்கள் யார்? அம்மக்கள் பேசிய மொழி எது? சிந்துவெளிக் குறியீடுகள் சொல்லும் செய்தி என்ன? என்பது போன்ற பல அடிப்படையான கேள்விகளுக்குரிய விடைகளைத் தேடுவதில் நமது நாட்டு வரலாற்றறிஞர்கள் மட்டுமல்ல, உலகெங்குமுள்ள பல்வேறு ஆய்வாளர்களும் இந்த ஆய்வுப் பணியில் தொடர்ந்து ஈடுபட்டு பல உண்மைகளைக் கண்டறிந்து வெளிப்படுத்தியுள்ளார்கள். ஆனாலும் சிந்துவெளி நாகரிகம் குறித்த

வரலாற்று உண்மைகள் இன்னமும் முழுமையாக வெளியாகவில்லை. அறிஞர்கள் தங்களது முயற்சிகளைத் தொடர்கிறார்கள்.
**http://www.marymartin.com/web?pid=800455**
-------------------------------------------------------------------------------
தலபுராணம் = Talapurāṇam / பேராச்சி கண்ணன் = Pērācci Kaṇṇaṉ
சென்னை: சூரியன் பதிப்பகம் = Cūriyaṉ Patippakam, Chennai, 2021
456p.; ill. 22 cm.
9788195167937
$ 17.50 / pb
600gm.

History of Chennai
**http://www.marymartin.com/web?pid=800459**
----------------------------------------------------------------------------------
அடிமை ஆவணங்கள் = Aṭimai āvaṇankaḷ / அ.கா. பெருமாள் = A. Kā. Perumāḷ
நாகர்கோவில்: காலச்சுவடு பதிப்பகம் = Kālaccuvaṭu Patippakam, Nākarkōvil, 2021
127p.; 22 cm.
9789391093877
$ 8.00 / pb
250gm.

தமிழகத்தில் அடிமைமுறை பற்றிய நூல்கள் மிகக் குறைவு, ஆ. சிவசுப்பிரமணியன் அவர்களின் 'தமிழகத்தில் அடிமைமுறை' நூல் குறிப்பிடத்தகுந்தது. அந்த வரிசையில் வருவது அ.கா. பெருமாளின் இந்த நூல். இதில் இருப்பவை அடிமைமுறை தொடர்பான மூல ஆவணங்கள். நாட்டார் வழக்காறுகளின் வழியும் பண்பாட்டு வரலாற்றை உருவாக்க வேண்டும் என்று தொடர்ந்து பேசிவரும் அ.கா. பெருமாள். இந்த நூலில் அதைப் பெருமளவில் பாவித்திருக்கிறார். இந்நூலின் முன்னுரை அரிய பல செய்திகளைக் கூறுவது. தென்குமரியில் உள்ள சில சாதிகளைப் பற்றிய அரிய செய்திகளைக் கதைப்பாடல்கள் வழி மீட்டெடுத்திருக்கிறார் பெருமாள். கடின உழைப்பு நூலில் தெரிகிறது.
**http://www.marymartin.com/web?pid=800469**
-------------------------------------------------------------------------------------
கொங்கு நாட்டுப் பட்டக்காரர்களும் பாளையக்காரர்களும் = Konku Nāṭṭup Paṭṭakkārarkaḷum Pāḷaiyakkārarkaḷum / செ. இராசு = Ce. Irācu
கோயம்புத்தூர்: விஜயா பதிப்பகம் = Vijayā Patippakam, Kōyamputtūr, 2022
379p.; ills. 25 cm.
9788184469806
$ 30.00 / hb
930gm.

History
கொங்கு மண்டலத்தின் நான்கில் ஒரு பகுதியில் நிர்வாகம் செய்த பாளையக்காரர் பற்றிய சிறு குறிப்புக் கூடக் கொங்கு நாட்டு

வரலாற்றில் இடம் பெறவில்லை. 19 ஆம் நூற்றாண்டில் தொகுக்கப்பட்ட மெக்கன்சியின் குறிப்புகளே முதன்மையானது. இதைத் தொடர்ந்து கள ஆய்வின் மூலம் பெறப்பட்ட தரவுகளை அடிப்படையாகக் கொண்டு இந்நூல் வெளிவருகிறது.
http://www.marymartin.com/web?pid=800471
--------------------------------------------------------------------------------
**Health & Medicine**

இயற்கை மருத்துவக் களஞ்சியம் = Iyarkai Maruttuvak Kaḷañciyam / இயற்கைப் பிரியன் இரத்தின சக்திவேல் = Iyarkaip Piriyaṇ Irattiṇa Caktivēl
சென்னை: காளீஸ்வரி பதிப்பகம் = Kāḷīsvari Patippakam, Ceṇṇai 2021
748p.; 22 cm.
$ 35.00 / hb
1100gm.

இந்நூலாசிரியர் இயற்கைப் பிரியன் இரத்தின சக்திவேல் அவர்கள் இயற்கை மருத்துவம், யோகா மட்டுமின்றி சிரிப்பு யோகா கண் மருத்துவம், அக்குபிரஷர் ஆகிய மாற்று சிகிச்சை முறையிலும் கைசேர்ந்தவர். இயற்கை மருத்துவம் குறித்த 80-க்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். டெல்லியில் உள்ள All India Nature Cure Federation-ல் உறுப்பினராக அங்கம் வகித்து வருகிறார்.
http://www.marymartin.com/web?pid=800000
---------------------------------------------------------------------------
மகப்பேறும் மகளிர் மருத்துவமும்: ஓர் அறிவியல் நூல் = Makappērum Makaḷir Maruttuvamum: ōr Ariviyal Nūl / செ. ஆனைமுகன் = Ce. āṇaimukaṇ
சென்னை: எழுத்து பிரசுரம் = (Zero degree/Ezhuthu Pirasuram), Ceṇṇai, 2021
672p.; 22 cm.
9788194973782
$ 40.00 / pb
810gm.

இந்நூலை வாசித்து உங்கள் நோயை, நீங்களாகவே நிர்ணயித்து மருத்துவம் செய்வது அல்ல இதன் நோக்கம். உங்களுக்கு நோய்கள் பற்றிய வெவ்வேறு விளக்கங்களை அறிவிக்கும் ஓர் அறிவியல் நூல் மட்டுமே இது. இதனை வாசிப்பதன் மூலம் உங்களுக்குத் தேவையான விளக்கங்களைப் பெறுவதுடன், கண்மூடித்தனமாக அவர்கள் கூறுவது எல்லாம் 'தேவ வாக்கு' (Gospal) என்று ஏற்காமல், அவர்கள் கூறுவதை உணர்ந்து செயல்பட வேண்டும் என்பதே இதன் நோக்கம்.
http://www.marymartin.com/web?pid=800001
--------------------------------------------------------------------------
**Linguistics**

தமிழ் நாட்டுப்புறவியல் அகராதி = Tamil Nāṭṭuppuraviyal Akarāti / சு. சண்முகசுந்தரம் = Cu. Caṇmukacuntaram
சென்னை: காவ்யா பதிப்பகம் = Kāvyā Patippakam, Ceṇṇai, 2021

xxviii, 758p.; 23 cm.
9789393358073
$ 40.00 / hb
1100gm.

பின்னர், தமிழகத்திலேயே சில குறிப்பிட்ட வட்டாரங்களுக்கே உரியதான வழக்குச் சொல் அகராதிகளும் வரத் தொடங்கின. இவற்றைத் தொகுப்பது என்பதே பெரும் உழைப்பையும் நேரத்தையும் வேண்டுகிற மிகுந்த அக்கறையுடன் கூடிய பணி.
தமிழ் நாட்டுப்புறவியல் அகராதி என்ற இந்த நூலில் நாஞ்சில் நாடு, நெல்லை, செட்டிநாடு, நடுநாடு, தஞ்சை, கொங்கு, மதுரை, முகவை, பரதவர் பகுதிகள், நீலகிரி, பழங்குடிகள், இலங்கை எனத் தமிழர் வாழுமிடங்களைச் சார்ந்த நாட்டுப்புறவியல் சொற்களைத் தொகுத்துள்ளார்; சு. சண்முகசுந்தரம்.
இந்த அகராதியில் வட்டாரங்களைத் தாண்டிய பல பகுதிகளிலும் புழங்கும் வழக்காற்றுச் சொற்களும் நாட்டுப்புறவியல் கலைச் சொற்களும் சேர்க்கப்பட்டுள்ளன.
http://www.marymartin.com/web?pid=791771
-------------------------------------------------------------------------------------
வளமான சொற்களைத் தேடி = Vaḷamāṇa Corkaḷait Tēṭi / பா.ரா. சுப்பிரமணியன் = Pā. Rā. Cuppiramaṇiyaṇ
சென்னை: பரிசல் புத்தக நிலையம் = Parical Puttaka Nilaiyam, Ceṇṇai, 2021
110p.; 22 cm.
9789391949051
$ 5.50 /pb
200gm.

அக்காலச் சொற்களும் இக்காலச் சொற்களும் வரலாற்றின் கூறுகளையும் பண்பாட்டின் எச்சங்களையும் தாங்கி நிற்பதை உணர்த்தும் பல கட்டுரைகள் இந்தத் தொகுப்பில் உள்ளன. சொல்லும் பொருளும் வரலாறும் உடையவை, அவற்றின் வரலாறும் அறியத் தகுந்தவை.
http://www.marymartin.com/web?pid=800039
-------------------------------------------------------------------------------------
**Literature**

கம்ப நாடர் புதிய வெளிச்சம் = Kampa Nāṭar Putiya Veḷiccam / தெ. ஞானசுந்தரம் = Te. ñāṇacuntaram
சென்னை: சந்தியா பதிப்பகம் = Cantiyā Patippakam, Ceṇṇai, 2021
209p.; 22 cm.
$ 10.50 / pb
350gm.

இந்நூல் கம்பராமாயணத்தில் உள்ள காலக்குறிப்புகளை ஆராய்ந்து எந்த எந்த நிகழ்ச்சி எந்த எந்தக் காலத்தில் நடந்தது என்பதனை

முதன்முதலாகத் தெளிவாக்குகிறது. இதில் வான்மீகத்தின் காலநிரலினும் கம்பநாடரின் காலநிரல் வேறானது என்பது தெளிவாக்கப்பட்டுள்ளது.
விசுவாமித்திரனோடு இராமலக்குவர் வேள்விகாக்கப் புறப்பட்ட நாள்; திருமணத்தின்போது இராமன், சீதை ஆகியோர் வயது; யோசனை, காதம் என்னும் அளவுகளின் வரையறை; இராமன் வனவாசம் புறப்பட்ட காலம்; தசரதன் மறைந்த நாள்; காட்டில் வெவ்வேறு இடங்களில் மூவரும் தங்கியிருந்த காலம்; சீதை சிறையிருந்த மாதங்கள்; இராவணன் சீதையைக் கவர்ந்து சென்ற பின் இராமன் முயற்சியின்றிக் கிடந்த நாள்கள்; இராமலக்குவர் கிட்கிந்தையை அடைந்த காலம்; அனுமன் சீதையைச் சந்தித்த நாள்; போர் நடந்த நாள்கள்; சீதை சிறை மீட்கப்பட்ட நாள் அமாவாசையா, பௌர்ணமியா?
[http://www.marymartin.com/web?pid=800438](http://www.marymartin.com/web?pid=800438)
---------------------------------------------------------------------------
உயிர்த்த ஞாயிறு = Uyirtta ñāyiru / ஸர்மிளா ஸெய்யித் = Sarmiḷā Seyyit
நாகர்கோவில்: காலச்சுவடு பதிப்பகம் = Kālaccuvaṭu Patippakam, Nākarkōvil 2021
240p.; 22 cm.
9789390802555
$ 13.75 / Pb
330gm.

Novel
மிகவும் மதிக்கப்பட வேண்டிய போராளியாகவும் எழுத்தாளராகவும் கலகக்காரியாகவும் இடையறாது இயங்குபவர் ஸர்மிளா ஸெய்யித். இஸ்லாமிய அடிப்படைவாதிகளால் இலங்கையில் நடத்தப்பட்ட கோரமான தற்கொலைத் தாக்குதல்களின் பிற்பாடு இலங்கை இஸ்லாமியச் சமூகம் எதிர்கொண்ட தீவிரமான இனவாத அரச ஒடுக்கு முறையையும் இஸ்லாமிய அடிப்படைவாதிகளாலும் இலங்கை அரசாலும் அவர் எதிர்கொண்ட எண்ணற்ற தாக்குதல்களையும் துணிவோடும், நளினமாகவும் மிகைப்படுத்தல்கள் இல்லாமலும் நினைவெழுதுதலாக இந்த நூலை உயிர்ப்போடு எழுதியிருக்கிறார் ஸர்மிளா. இது முடிந்த கதை அல்ல. தொடரும் துன்பியல் கதை. இலங்கையிலும் இந்தியாவிலும் இனி வரப் போகும் காலத்தைப் பற்றிய கதை இது. இது புனைவல்ல. வாழ்வெழுதல்.
[http://www.marymartin.com/web?pid=777819](http://www.marymartin.com/web?pid=777819)
---------------------------------------------------------------------------------------------
காந்தியின் நிழலில்: கட்டுரைத் தொகுப்பு = Kāntiyiṉ Nilalil: Kaṭṭurait Tokuppu / எஸ். ராமகிருஷ்ணன் = Es. Rāmakiruśṇaṉ
சென்னை: தேசாந்திரி பதிப்பகம் = Tēcāntiri Patippakam, Ceṉṉai 2021
220p.; ills. 23 cm.
9789393099075
தேசாந்திரி பதிப்பக வெளியீடு = Tēcāntiri Patippak Veḷiyīṭu 98
$ 11.00 / pb
310gm.

மகாத்மா காந்தி குறித்து நான் எழுதிய கட்டுரைகள் மற்றும் புனைவுகளைத் தொகுத்து காந்தியின் நிழலில் என்ற நூலை உருவாக்கியுள்ளேன். காந்தி குறித்து நான் எழுதிய சிறுகதைகள் ஆங்கிலம், ஹிந்தி, தெலுங்கு, மலையாளம், கன்னடம் என ஐந்து மொழிகளில் வெளியாகி மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளது.
**http://www.marymartin.com/web?pid=799955**
-----------------------------------------------------------------------------------------
வான்குருவியின் கூடு: தனிப்பாடல் அனுபவங்கள் = Vāṇkuruviyiṇ Kūṭu: Taṇippāṭal Aṇupavankaḷ / பெருமாள் முருகன் = Perumāḷ Murukaṇ
நாகர்கோவில்: காலச்சுவடு பதிப்பகம் = Kālaccuvaṭu Patippakam, Nākarkōvil
2021
112p.; 22 cm.
9788192366876
$ 7.00 / pb
200gm.

Literature
பழந்தமிழ் இலக்கியத்தில் மிகச் செழுமையான பகுதி தனிப்பாடல்கள். வெவ்வேறு சூழல்களில் புலவர்கள் பாடியவை. இப்பாடல்கள் காட்டும் உலகம் பரந்தது. வள்ளல்கள், அரசர்கள், புலவர்கள் ஆகியோர் மட்டுமல்லாமல் குடிமக்களில் பல்வேறு தரப்பினர் இப்பாடல்களில் இடம்பெறுகின்றனர். தமிழ்நாட்டு வாழ்க்கை முறை விரிவாகப் பதிவாகியிருக்கிறது. எல்லாச் சுவைகளும் இருக்கின்றன. எழுத்து மொழியும் பேச்சு மொழியும் விரவி வருகின்றன. பாடல்களின் பின்னணி நிகழ்வுகள் சுவாரசியமானவை. இப்படிப்பட்ட தனிப்பாடல் தொகுப்பிலிருந்து தன் மனதுக்கு உகந்த சில பாடல்களைத் தேர்ந்தெடுத்து அனுபவத்தோடு இயைத்து விளக்கிச் செல்கிறார் பெருமாள்முருகன். பழந்தமிழ் இலக்கியத்திற்குள் நுழைவதற்குத் திறப்பை அமைத்துத் தரும் நூல் இது.
**http://www.marymartin.com/web?pid=659790**
----------------------------------------------------------------------------------------
மோகப் பெருமயக்கு (தி. ஜானகிராமன் படைப்புகள் பற்றிய பதிவுகள்) = Mōkap Perumayakku (Ti. Jāṇakirāmaṇ Paṭaippukaḷ Parriya Pativukaḷ) / சுகுமாரன் = Cukumāraṇ
நாகர்கோவில்: காலச்சுவடு பதிப்பகம் = Kālaccuvaṭu Patippakam, Nākarkōvil
2021
135p.; 22 cm.
9789355230614
$ 8.00 / pb
210gm.

தி. ஜானகிராமனைக் குறித்தும் அவரது படைப்புகள் குறித்தும் சுகுமாரன் எழுதிய கட்டுரைகள், குறிப்புகளின் தொகுப்பு 'மோகப் பெருமயக்கு'. ஓர் எழுத்தாளர் மீதான மாறாப் பற்றையும் அவரது

எழுத்துகளில் உணர்ந்த கலை நுட்பத்தையும் இந்த நூல் கொண்டிருக்கிறது. நவீனத் தமிழின் எழுத்து மேதைகளில் ஒருவரான தி. ஜானகிராமன் நூற்றாண்டில் வெளியாகும் இந்த நூல், இலக்கிய வாசகர் தனது விருப்பத்துக்குரிய எழுத்தாளருக்குச் செலுத்தும் நன்றிக்கடன். பின் தலைமுறை இலக்கியவாதி தனது முன்னோடிக்குப் படைக்கும் கைம்மாறு.
**http://www.marymartin.com/web?pid=799958**
-----------------------------------------------------------------------------------
இலக்கிய வரலாற்றுச் சிந்தனை தொடக்க கால முயற்சிகள் = Ilakkiya Varalārruc Cintaṇai Toṭakka Kāla Muyarcikaḷ / த. குணாநிதி = Ta. Kuṇāniti
சென்னை: பரிசல் புத்தக நிலையம் = Parical Puttaka Nilaiyam, Ceṇṇai 2021
112p.; 22 cm.
9788194545798
$ 6.00 / pb
200gm.

செவ்விலக்கியத் தமிழ் மரபைக் கல்லில் புலத்தின்மூலம் தொடர்ச்சியாகக் கறபித்து வந்ததால் இயற்றியோர், பாடப்பட்டோர், சூழல், அளிக்கப்பட்ட பரிசுகள் தொகுக்கப்பட்ட முறைமை முதலான தகவல்களைக் காணமுடிகிறது. இலக்கண ஆக்கங்களுக்குப் பாயிரங்களும் சமய மரபுகளுக்குப் பதிகப்பயன், தனியன் குரு பரம்பரைகள், புராணங்களும் உள்ளன.
**http://www.marymartin.com/web?pid=799964**
----------------------------------------------------------------------------------------------
ஜானகிராமம்: தி. ஜானகிராமனின் படைப்புகளைப் பற்றிய கட்டுரைகள் = Jāṇakirāmam: Ti. Jāṇakirāmaṇiṇ Paṭaippukaḷaip Parriya Kaṭṭuraikaḷ / கல்யாணராமன் = Kalyāṇarāmaṇ
நாகர்கோவில்: காலச்சுவடு பதிப்பகம் = Kālaccuvaṭu Patippakam, Nākarkōvil, 2021
1031p.; 23 cm.
9789390802777
$ 34.83 / hb
1550gm.

அடிப்படையான மானுட உணர்வுகளின் எல்லையின்மையைத் தம் புனைகதைகளில் திரும்பத் திரும்ப எழுதிய தி. ஜானகிராமன், ஆண் பெண் என்ற வெளிபேதத்தைக் கடந்து உயிர் என்ற உள்விரிவை நோக்கி முன்நகர்ந்தவர்.
நூற்றாண்டு காணும் தி.ஜா. (1921 - 2021) பற்றிய 102 விமர்சனக் கட்டுரைகளின் பெருந்தொகுதியே இந்நூல். அழகியல்வாதிகள், இடதுசாரிகள், திராவிடவியலாளர்கள், பெண்ணியவாதிகள், உளவியல் நோக்கினர், விளிம்பைப் போற்றுவோர், நவீனத்துவர்கள், பின்நவீனர்கள், கல்வியாளர்கள் எனத் தம்முள் முரண்படும் பல தரப்பினரையும் ஒன்றிணைக்கும் ஒரு மகத்தான விசையாகத் தி. ஜானகிராமன் மறுஉயிர்ப்புப் பெறுவதன் சாட்சியமாகிறது இந்நூல்.

http://www.marymartin.com/web?pid=784430
--------------------------------------------------------------------------------
அத்தர் = Attar / கே. நல்லதம்பி = Kē. Nallatampi
பொள்ளாச்சி: எதிர் வெளியீடு = Etir Veḷiyīṭu, Poḷḷācci, 2022
120p.; 19 cm.
9789390811571
$ 7.50 / pb
220gm.

Short Stories
"துரத்திக்கொண்டு ஓடவேண்டாம். அந்தக் கல் மேல் கண் மூடிக்கொண்டு உட்கார். அது உன்னிடம் வரும்" 'தமன் நெஹாரா' கதையில் வரும் மேற்கண்ட ஜென் கதையைப் போலவே நிதானத்தில் தாமாக வருபவை நல்லதம்பியின் கதைகள். 'Yes' என்று சொன்னது மனமா, தேகமா, அறிவா?" இவை மூன்றுமே இந்தக் கதைகளைச் சொல்லுகின்றன. ஆத்ம வஞ்சனை போன்ற வித்தியாசமான சொல்லாடல்கள். நான் காட்டின் அணைப்பில் தொலைந்துபோனேன். படுக்கையில் நாமும் காதலின். காமத்தின், துணையின், வலிகளின், பாசத்தின் அணைப்புக்களில் தொலைந்து போகிறோம். முகம் பார்க்கும் 'கண்ணாடி' பேசுவதும், மைசூரின் காவேரி நதியும் ஒலிம்பியா டாக்கீசும் மைசூரின் லலிதமகால் பேலஸ் ஓட்டலும் கதை சொல்வதும் சுவாரசியம். 'அத்தர்'இன் மணத்தைப் போல, பிச்சயமில்லாதவர்களின், பிரிந்த காதலர்களின், விலாசமற்ற உறவுகளின், பழுத்த தம்பதியரின் அன்பானது பெரும்பாலான கதைகளில் விரவியிருக்கிறது. ஆறு கதைகளுமே மூன்று மொழிகளில் பிரசுரமாகி இருப்பதில் வியப்பில்லை.
http://www.marymartin.com/web?pid=791770
--------------------------------------------------------------------------------
நெஞ்சில் கலந்தாய் = Neñcil Kalantāy / கோ. ஒளிவண்ணன் = Kō. Oḷivaṇṇaṉ
சென்னை: எழிலினி பதிப்பகம் = Elilini Patippakam, Ceṉṉai, 2021
208p.; ills. 22 cm.
9789392224133
$ 12.50 / pb
350gm.

கதை சொல்லும் கலை கைவரப்பெற்றவர் அவர் என்பதை மெய்ப்பிக்கும் வகையில் இரண்டாவது சிறுகதைத்தொகுப்பினை வெளியிட்டுள்ளார். காலம் மாற மாற வாழ்வியல் முறைகளும் மாறுவதை இத்தொகுப்பு சித்தரிக்கிறது. கல்வியால் உயர்ந்த மேல்தட்டு மக்கள், பொருளாதார நிலையில் ஊசலாடும் நடுத்தரவர்க்கம் எனப் பல்வேறு வர்க்கக் கதைகளையும் கொண்ட தொகுப்பாக இத்தொகுப்பு அமைந்துள்ளது.
http://www.marymartin.com/web?pid=800305
--------------------------------------------------------------------------------
போஹோ = Pōhō / வாஸ்தோ = Vāstō

சென்னை: எழுத்து பிரசுரம் = (Zero degree/Ezhuthu Pirasuram), Ceṉṉai, 2021
224p.; 22 cm.
9789391748579
$ 13.50 / pb
270gm.

நிலையான பெயரும், நிரந்தரமான வாழ்விடமும் தேவையற்ற ஒருவனின் வாழ்வில், அவன் தங்குமிடம் என்பது அவனுக்கு இளைப்பாறலுக்கான இடமாகவே இருக்கிறது. அந்த இடத்தில் இசை இருக்கலாம், வண்ணங்களாலான சாலைகள் இருக்கலாம், கொண்டாட்டங்கள் இருக்கலாம், நிசப்தங்களும் இருக்கலாம். எனினும் பொழுது விடிகையில் எல்லையற்ற வானமும் பூமியும் அவனைச் சேருமிடம் அறியா பயணத்திற்கே மீண்டும் அழைத்துச் செல்கிறது.
**http://www.marymartin.com/web?pid=800306**
------------------------------------------------------------------------------------
தண்டபாணி வாத்தியார் வகையறா = Taṇṭapāṇi Vāttiyār Vakaiyarā / பாலபாரதி = PālaPārati
சென்னை: கலக்கல் ட்ரீம்ஸ் பதிப்பகம் = Kalakkal Trīms Patippakam, Ceṉṉai, 2021
214p.; 22 cm.
$ 10.00 / pb
350gm.

Novel
கிராமிய வாழ்வியல் பின்னணியில், கல்வியின் மேன்மையையும், பங்காளி பகையையும் பற்றி பேசும் ‘தண்டபாணி வாத்தியார் வகையறா’என்கிற இந்த நாவல்
**http://www.marymartin.com/web?pid=800309**
------------------------------------------------------------------------------------
உதயபானு பனித்திரை = Utayapāṇu Paṇittirai / கோகுல் சேஷாத்ரி = Kōkul Cēśātri
சென்னை: பழனியப்பா பிரதர்ஸ் = Palaṇiyappā Piratars, Ceṉṉai, 2021
545p.; 22 cm.
$ 20.00 / pb
700gm.

Historical Fiction
காலம் 11ம் நூற்றாண்டு. பலமான யோசனைகளுக்குப் பிறகு திருவிடைமருதூரில் ஆடல் கற்பிக்கும் தலைக்கோலி நக்கன் மதுரவாசகி, தஞ்சையில் மாமன்னர் இராஜராஜர் கட்டிக் கொண்டிருக்கும் பெரிய திருக்கற்றளியில் சென்று பணியில் அமர முடிவு செய்கிறாள். ஆனால் தஞ்சையைப் பற்றிய நினைவுகள் அவளுக்கு பல்வேறு தயக்கங்களைக் கொடுக்கின்றன. அவள் அறிந்திராத... சில சமயங்களில் அறிய விரும்பாத அவளது பூர்வீக வாழ்க்கை பற்றிய இரகசியங்களை அங்கு சென்றால் அறிய நேரிடும்

என்பதே அந்தத் தயக்கத்திற்குக் காரணம். என்றாலும் ஏதோ ஒரு பெரும் ஈர்ப்பு உந்தித்தள்ள தஞ்சைக்குச் செல்கிறாள்.
http://www.marymartin.com/web?pid=800310
------------------------------------------------------------------------------------
உதயபானு தீம்புனல் = Utayapāṇu Tīmpuṇal / கோகுல் சேஷாத்ரி = Kōkul Cēśātri
சென்னை: பழனியப்பா பிரதர்ஸ் = Palaṇiyappā Piratars, Ceṇṇai, 2022
509p.; ills. 22 cm.
9789392324055
$ 18.50 / pb
680gm.

Historical Fiction
தீம்புனல் (இனிப்பு நீர்) என்பது உதயபானு வரலாற்று புனைகதை தொடரின் III புத்தகம். இந்தத் தொடர் ஆசிரியரின் நன்கு அறியப்பட்ட முந்தைய படைப்புகளான ராஜகேசரி மற்றும் சேரர் கோட்டையின் தொடர்ச்சியாகும். 1001 CE. சோழ மன்னன் முதலாம் இராஜராஜன் மீதான கொடூரமான கொலை முயற்சி தலைநகரில் உள்ள அனைவரையும் முகம் சுழிக்க வைத்துள்ளது. இந்த விவகாரத்தின் அடிப்பகுதிக்கு வரத் தீர்மானித்து, சாட இராணுவ லெப்டினன்ட் பரமன் மலபாடியாரும் அவரது நம்பிக்கைக்குரிய நண்பர் அம்பலவாணரும் குற்றவாளிகளின் அடையாளத்தைக் கண்டறிய விரிவான விசாரணையைத் தொடங்கியுள்ளனர். அவர்களின் முதல் முக்கிய முன்னணி உறையூரில் உள்ள மருத்துவமனையில் இருந்து வருகிறது. இந்த மருத்துவமனையில் இருக்கும் மர்ம நோயாளி யார்? அவரை தாக்கியது யார்? மேலும் அவரை இந்த வர்ம முடிச்சில் இருந்து வெளியே எடுப்பது ஏன் இவ்வளவு கஷ்டம்? இதற்கிடையில், சோட மன்னன் ராஜராஜன் ஏன் திடீரென்று பாண்டிய தலைநகர் மதுரைக்கு செல்ல முடிவு செய்தார்? கடந்த காலத்தைப் பற்றி அவர் என்ன ரகசியத்தை வெளிப்படுத்துவார்?
http://www.marymartin.com/web?pid=800311
------------------------------------------------------------------------------------
ஞானியின் மந்திர பூமி = ñāṇiyiṇ Mantira Pūmi / ஞானி = ñāṇi
சென்னை: குகன் பதிப்பகம் = Kukaṇ Patippakam, Ceṇṇai, 2022
418p.; 22 cm.
$ 15.00 / pb
620gm.

Novel
http://www.marymartin.com/web?pid=800312
------------------------------------------------------------------------------------
வசந்தத்தைத் தேடி= Vacantattait Tēṭi / சாலமன் = Cālamaṇ
சென்னை: சிந்தன் புக்ஸ் = Cintaṇ Puks, Ceṇṇai, 2021
219p.; 22 cm.
9788195383054
$ 11.00 / pb

360gm.

Novel
கூவத்தின் பிறப்பிடத்திலிருந்து ஒரு புதினம்... புறநகர் பகுதிகிளில் புதியதாகத் தொன்றிய இளம் தொழிலாளி வர்க்கத்தின் போராட்ட காதை...
[http://www.marymartin.com/web?pid=800315](http://www.marymartin.com/web?pid=800315)
---------------------------------------------------------------------------------------
டைகரிஸ் = Taikaris / ச. பாலமுருகன் = Ca. Pālamurukaṉ
பொள்ளாச்சி: எதிர் வெளியீடு = Etir Veḷiyīṭu, Poḷḷācci, 2021
464p.; 23 cm.
9789390811465
$ 27.50 / hb
840gm.

Novel
இந்த நாவல் 1914 தொடங்கி 1918 வரையிலான காலம் வரை தன் எல்லைகளை வரையறுத்துக் கொண்டுள்ளது. அது முதல் உலகப் போரின் காலம். நாம் நினைத்துப் பார்க்க முடியாத அளவு நமது கிராமங்கள் மற்றும் நகரங்களில் இருந்து போருக்குப் போனவர்கள் ஏராளம். வரலாறுகளில் இந்தியர்களின் பெரும் பங்களிப்பு மறைக்கப்பட்டது. பிரிட்டிஷ் என்ற ஒற்றை அடைமொழி மட்டுமே தரப்பட்டது. அந்த அடையாளம் வெள்ளையர்களுக்கானது. இந்தியர்கள் அதில் அடங்கவில்லை. வரலாற்றிலிருந்து மட்டுமல்ல ஏதோ ஒரு வகையில் நம் நினைவுகளிலிருந்தும் அந்த பங்களிப்பை நீக்க வேண்டும் என அவர்கள் விரும்பினர். ஏறக்குறைய அதில் அவர்கள் வெற்றியும் பெற்றனர். போரிலிருந்து திரும்பியவர்களுக்கு உரிய அங்கீகாரம், உதவிகள் கூட மறுக்கப்பட்டது. போர் முடிந்த பின்பு போர்களத்தில் இறந்தவர்களின் கல்லறைகள். சவக் குழிகள் தோண்டி எடுக்கப்பட்டது. மீண்டும் மரியாதையுடன் மறு புதைப்பு நடத்தப்பட்டது. அந்த மரியாதை கூட இந்திய படை வீரர்களுக்கு கிடைக்கவில்லை. போருக்கு ஒருவனை அனுப்பி வைக்க ஒரு சமூகத்தில் பல தரப்பட்ட நியாயங்கள், கதைகள், பெருமைகள் கட்டமைக்கப்படுகின்றன. அது சாகசத்தின் வெளிப்பாடாகவும் தேசபக்தியின் வடிவமாகவும் நிலை நிறுத்தப்படுகிறது. எல்லாக் காலத்திலும் அவைகள் ஒன்று போலவே உள்ளன. ஆனால் களம் வேறு வகையான காட்சிகளைக் காட்டுகிறது. போருக்குப் போய் வந்தவனிடம் கடைசியாக எஞ்சி நிற்கும் கேள்வி போர் என்பது எதற்காக என்பதுதான். அன்றைய மெசபடோமியா என்ற இன்றைய ஈராக்கில் பாயும் டைகரிஸ் எனும் நதி அந்தப் பெரும் போரின் சாட்சியமாய் வாழ்ந்து பாய்கின்றது. அவள் ஆயிரக்கணக்கான இந்திய போர் வீரர்கள் மற்றும் கணக்கில் வைக்கப்படாத தொழிலாளர்கள் என்று கிராமத்திலிருந்து போரின் போது உடன் இருந்த இந்தியக் கூலிகளின் கதைகளை அறிந்தவள். சலசலக்கும் அந்த டைகரிஸ் நதியின் ஓசையில் அந்த கதைகளை நீங்கள் கேட்கக் கூடும்.

http://www.marymartin.com/web?pid=800317
--------------------------------------------------------------------------------
சட்டைக்காரி = Caṭṭaikkāri / கரன் கார்க்கி = Karaṇ Kārkki
சென்னை: நீலம் வெளியீடு = Nīlam Veḷiyīṭu, Ceṉṉai, 2022
313p.; 22 cm.
$ 18.75 / pb
500gm.

Novel
நாவல் என்னும் கலையினூடே வரலாற்றை தேடுவதுடன் கண்ணெதிரே அழிந்துப்போன புவியியலை அல்லது காலத்தின் அடுக்குகளில் ஒளிந்துக் கொண்டிருக்கிற நிலப்பரப்பை வாசகர்களின் கண் முன்னே நிறுத்துவதில் தேர்ந்த எழுத்தாளர் கரன் கார்க்கி அவர்களின் "சட்டைக்காரி" நீலம் வெளியீடாக.
http://www.marymartin.com/web?pid=800318
-----------------------------------------------------------------------------
மாக்காளை = Mākkāḷai / கலாப்ரியா = Kalāpriyā
சென்னை: சந்தியா பதிப்பகம் = Cantiyā Patippakam, Ceṉṉai 2021
295p.; 22 cm.
$ 15.00 / pb
450gm.

Novel
மாக்காளை ஐம்பது வருடங்களுக்கு முந்தைய கலாச்சாரத்தை அப்படியே பிரதிபலிக்கும் கண்ணாடி என்ற வகையில் வித்தியாசமான நாவல். மாக்காளை அசை போடுதல் போல காலத்தில் பின்னோக்கிப் பயணம் செய்து நினைவுகளை அசைபோடுகிறார் கலாப்ரியா. உரையாடலை விட நனவோடை உத்தியில் அதிகம் நகரும் கதை. வள்ளியிடமிருந்தோ, வடிவிடமிருந்தோ அல்லது வேறு யாரிடமிருந்தேனும் இந்தக் கதையை மீண்டும் ஆரம்பிக்க முடியும். பக்க அளவில் நாவல்கள் முடிந்து விடுகின்றன. கதைகள் எப்போதும் முடிவதில்ல. கலாப்ரியாவிடம் சொல்லாத கதைகளும் ஏராளம் என்றே தோன்றுகிறது. அடுத்த நாவலுக்கு அதிகம் காத்திருக்க வேண்டியதில்லை.
http://www.marymartin.com/web?pid=791915
------------------------------------------------------------------------------------
சுழியம் = Culiyam / பாலஜோதி ராமச்சந்திரன் = Pālajōti Rāmaccantiraṉ
சென்னை: டிஸ்கவரி பப்ளிகேஷன்ஸ் = Tiskavari Papḷikēśaṇs, Ceṉṉai, 2021
207p.; 22 cm.
9789391748630
$ 12.50 / pb
350gm.

Novel
சில பரிசோதனை முயற்சிகளை துணிச்சலாக ஆசிரியர் மேற்கொண்டு இருக்கிறார். அதுவே இப்புனைவின் பலமாகவும்

பலவீனமாகவும் வாசகர்களால் கருதப்படலாம். நாவலின் ஒட்டுமொத்த உணர்வுக்கடத்தல் இதுதான் என்பதை சொல்லிவிடலாம்தான். ஆனால், அதற்குள்தான் நுண்ணிய சூட்சுமமாக வாசிப்பனுபவம் ஒளித்து வைக்கப்பட்டிருக்கிறது. நூல் விமரிசகர்கள் நாவலின் நிழலைக்கூட மேற்கோள் காட்டிவிடக்கூடாதபடிக்கு முன்னெச்சரிக்கையுடன் 'சுழியம்' வடிமைக்கப்பட்டிருக்கிறது.
[http://www.marymartin.com/web?pid=800321](http://www.marymartin.com/web?pid=800321)
-------------------------------------------------------------------------------------

வாதி = Vāti / நாராயணி கண்ணகி = Nārāyaṇi Kaṇṇaki
சென்னை: எழுத்து பிரசுரம் = (Zero degree/Ezhuthu Pirasuram), Ceṇṇai, 2021
266p.; 22 cm.
9789391748470
$ 16.00 / pb
420gm.

Novel
சரித்திரம் என்பது எழுதுவதல்ல, நிகழ்வது. நிகழ்ந்த சரித்திரங்கள் அத்தனையும் எழுதப்படவில்லையென்பதே மண்ணிற்குள் கரைந்தூறியிருக்கும் குருதியின் மௌமான ரௌத்திர தீயொலியாகும். வடார்க்காட்டு மண்ணில் விழும் வெயிலே அடிமை மக்களின் கந்தகக் கோபங்களுக்கு சாட்சி. இந்த மண்ணில் முளைத்த சிப்பாய்ப் புரட்சி மூக்குவரை மறைக்கப்பட்டன. எழுபதுகளில் உருவான ஆயுதப்புரட்சி அடிவயிற்றிலிருந்தே கருக்கலைப்பு செய்யப்பட்டது. மண்ணையும், விளையும் செல்வங்களையும் தானே அனுபவித்து மக்களின் வியர்வையையும், இரத்தத்தையும் காமக்கனிகளையும் சுவைத்து சுகம்போகித்திருந்த ஆண்டைகளை எதிர்த்து அடிமைகளின் குரல் சிவப்பதற்கு நூற்றுக்கணக்கான ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகி விடுகிறது. வீரம் முளைத்து நான்கு அடிமைகள் கைக் கோர்க்கும்போதே நூறு உயிர்கள் வேட்டையாடப்படுகின்றன. ஆயிரம் கைகள் வெட்டப்படுகின்றன. அதற்கு இந்த புதினம் முதல் சாட்சி.
[http://www.marymartin.com/web?pid=800322](http://www.marymartin.com/web?pid=800322)
-----------------------------------------------------------------------------------

முன்பக்கங்கள் = Muṇpakkankaḷ / முத்துச்செல்வன் = Muttuccelvaṇ
சென்னை: எழுத்து பிரசுரம் = (Zero degree/Ezhuthu Pirasuram), Ceṇṇai, 2021
240p.; 22 cm.
9789391748517
$ 14.50 / pb
380gm.

Novel
வெகுஜன எழுத்திலும் தீவிர எழுத்தின் சாயலை புகுத்தலாம். ஆனால் தீவிர எழுத்தின் சாயல் என்றும் தீவிர எழுத்தின் சாயல்தான். இரண்டிலும் நிஜத்தின் தரிசனம் இருந்தால் வாசிப்பவனின் மனதுக்கு நெருக்கமாக இருக்கும். சாதி, அரசியல், வாழ்வாதாரம், பின்னிப்பிணைந்து வரும் காமம் என சாதாரணனின் வாழ்க்கை

உலகமயமாதலின் பின்னணியில் புனைவாக விரிகிறது. இதில் உள்ளோடி வரும் வரிகள் எல்லோருக்குள்ளும் மறைந்திருக்கும் உண்மை. வெளிப்பூச்சுக்கு மறுத்தாலும் யாரும் அதை அவ்வளவு எளிதாக மறைத்து விட முடியாது. காலம் தன் கணக்கை செயல்படுத்திக் கொண்டுதான் இருக்கும். உண்மைகளை பேசும்போது எதிர்ப்புகளையும் எதிர்கொள்ள வேண்டிவரும். அதிகாரத்துக்கு அடிபணிந்து எழுதுபவன் கலைஞனல்ல. புனைவு எப்போது தன்னைத்தான் குறிப்பிடுகிறதோ என தனி மனிதனையும் சமூகத்தையும் நினைக்க வைக்கிறதோ அப்போதே அது காலத்தால் அழியாத நிலையை பெற்றுவிடுகிறது.
http://www.marymartin.com/web?pid=800323
---------------------------------------------------------------------------------------
செல்லக் கருப்பி = Cellak Karuppi / அல்லி பாத்திமா = Alli Pāttimā
சென்னை: எழுத்து பிரசுரம் = (Zero degree/Ezhuthu Pirasuram), Ceṇṇai, 2021
235p.; 22 cm.
9789391748463
$ 14.00 / pb
360gm.

Novel
'செல்லக் கருப்பி' நாவல் வெறும் கதையல்ல. தேயிலைத் தோட்டத்தின் மலைகளின் உலைகளில் கொதிக்கும் மக்களின் பதம் காட்டும் ஓர் உயிர் இவள். இவளது கண்ணீரும் கதறலும் அம்மக்களின் வலிகளின் சிறு துளிதான். அம்மக்களோடு பேசிப்பழகி கண்டு அந்தத் தேயிலைக்காட்டின் வாழ்வின் உதிரத்தையும் கண்ணீரையும் வியர்வையையும் பிழிந்து ஒரு நாவலாக வடித்துள்ளேன். அந்த உலகம் தனி. அவர்களது காயங்கள் ஆறாத இரணங்கள். வலிகள் பழகிப்போன இதயங்களில் இன்னும் பிரிந்து வந்த மண்ணின் வாசமும் இழந்து போன உரிமைகளின் ஏக்கமும் நிறைந்து ததும்புகின்றன.
http://www.marymartin.com/web?pid=800324
-----------------------------------------------------------------------------------------
----------------------------------------------------------------------------------------------
சித்திரக்கதைகள் (1730 ஆம் ஆண்டு கையெழுத்து ஆவணத்தின் அச்சு வடிவம்) = Cittirakkataikaḷ (1730 ām āṇṭu Kaiyeluttu āvaṇattiṉ Accu Vaṭivam) / க. சுபாஷிணி, ஆனந்த் அமலதாஸ் = Ka. Cupāśiṇi, āṉant Amalatās
சென்னை: எழிலினி பதிப்பகம் = Eliliṉi Patippakam, Ceṉṉai 2021
164p.; ills. 22 cm.
9789390677733
$ 15.00 / pb
290gm.

Short Stories
http://www.marymartin.com/web?pid=800055
---------------------------------------------------------------------------------------
பழமொழிக் கதைகள் = Palamolik Kataikaḷ / சு. சண்முகசுந்தரம்= Cu. Caṇmukacuntaram
சென்னை: காவ்யா பதிப்பகம் = Kāvyā Patippakam, Ceṉṉai, 2021
xiv, 154p.; 22 cm.
$ 8.50 / pb
250gm.

Short Stories
பழமொழிகள் என்றால் பழைய மொழிகள் என்றும் பழம் போன்ற அனுபவத்தால் கனிந்த மொழிகள் என்றும் பொருள் கொள்ளலாம்.

இதில் மதுரை வீரன் கதை, கட்டபொம்முதுரை கதை, தேசிங்கு ராஜன் கதை, பழையனூர் நீலிக்கதை ஆகியவை அடங்கியுள்ளன.
[http://www.marymartin.com/web?pid=800056](http://www.marymartin.com/web?pid=800056)
-------------------------------------------------------------------------------------------
ஊர்க்காரி ஒருத்தியின் காதல் = ūrkkāri Oruttiyiṉ Kātal / மௌனன் யாத்ரிகா = Mauṉaṉ Yātrikā
பொள்ளாச்சி: எதிர் வெளியீடு = Etir Veḷiyīṭu, Poḷḷācci, 2022
80p.; 22 cm.
9789390811700
$ 6.00 / pb
170gm.

Poetry
வேட்டையும் கூத்துமே தொல்குடியின், கூட்டுக் குமுகாயத்தின் அடிப்படையாய் அமைந்து, அதிலிருந்தே இசை, இயல், நாடகம் இன்னபிற கலைகள் யாவும் வளர்ந்தெழுந்தன.
இந்நிலையில், தமிழ்க் குடிகளின் தூய பாவியத்தை வரைந்தெடுக்கும் முனைப்பாகவே மௌனன் யாத்ரிகாவின் ஊர்க்காரி ஒருத்தியின் காதல் வெளிவந்திருக்கிறது. ஐந்திணைகளில் வாழும் குடிகளின் களவும் காமமும் பெருக்கெடுத்தோடும் ஒவ்வொரு கவிதையிலும் கொலையும் தற்கொலையும் தலைவி, தலைவன் என்னும் தன்னிலைகளுக்குள் கருவிலிருந்து மரணம் வரை உடன் நிழலாகப் பின் தொடர்கின்றது.
[http://www.marymartin.com/web?pid=800057](http://www.marymartin.com/web?pid=800057)
-------------------------------------------------------------------------------------------
தேவதேவன் கவிதைகள் – 2 தொகுதிகள் = Tēvatēvaṉ Kavitaikaḷ – 2 Tokutikaḷ / தேவதேவன் = Tēvatēvaṉ
திருவண்ணாமலை: வம்சி புக்ஸ் = Vamci Puks, Tiruvaṇṇāmalai, 2021
2 Vols.; 23 cm.
9789384598556
$ 90.00 / hb
2220gm.

Poetry
“ஒரு சீனக்கதை. சீனப்பெருவீரர் ஒருவர் தன் வாளை சாத்தியமான எல்லை வரை கூர்மைப்பபடுத்த விரும்பினார். அந்தக் கூர்மைக்கு முன்னால் உலகின் எந்தச்சக்தியும் எதிர்த்து நிற்கக்கூடாதென எதிர்பார்த்தார். தன் உடலையும் மனதையும் கையையும் கூர்மைப்படுத்திக்கொண்டார். கடைசியில் அம்மூன்றும் அவரது வாளில் வந்து அமைந்தன. ஆகவே வாளைத் தீட்ட ஆரம்பித்தார் தீட்டும்தோறும் வாள் தேய்ந்ததே அல்லாமல் உச்சகட்ட கூர்மை நோக்கிச் செல்லவில்லை. ஒவ்வொரு முறை கூரிய நுனியில் விரலால் வருடும்போதும் அவருக்குள் ஒரு குரல் சொன்னது. இந்தக்கூர்மை போதாது என. ஆகவே அவர் மலையுச்சி நோக்கிச் சென்றார். அங்கே தனிமையில் வாழ்ந்த பெருங்கவிஞர் துஃபு வைக் கண்டு கேட்டார்.

இந்த வாளை இன்னமும் கூர்மையாக்க நான் என்ன செய்யவேண்டும்.
’அந்த நுனிக்கு உன் சொந்தக்குருதியில் ஒரு துளியை உண்ணக்கொடு’ என்றார் துஃபு. ஆகவே அவர் கீழிறங்கிவந்து தன் சொந்த ரத்தத்தை ஒருதுளி சேர்த்துத் தீட்ட ஆரம்பித்தார். வாள் தட்டாரப்பூச்சியின் சிறகு போலவும் தெறிக்கும் நீர்த்துளி போலவும் கூர்மை கொண்டது. தேவதேவனின் இக்கவிதைகள் இதயத்தின் குருதி சேர்த்துத் தீட்டப்பட்டவை. ஆகவே நம் காலகட்டத்தின் வேறெந்தச் சொற்களையும் விடக்கூர்மையானவை.
[http://www.marymartin.com/web?pid=800058](http://www.marymartin.com/web?pid=800058)
--------------------------------------------------------------------------------

அலெக்ஸா… நீ என்னைக் காதலிக்கிறாயா? = Aleksā... Nī Eṉṉaik Kātalikkirāyā? / மனுஷ்ய புத்திரன் = Maṇuśya Puttiraṇ
சென்னை: உயிர்மை வெளியீடு = Uyirmai Veliyedu, Ceṇṇai, 2021
800p.; 23 cm.
9788194541485
$ 48.50/ hb
1100gm.

Poetry
நாம் வாழுகிற காலத்தின் காட்சிகளும் கோலங்களும் இதுவரை மனிதகுலம் கண்டிராதது. இயந்திரங்கள் மனிதர்களைப்போலவும் மனிதர்கள் இயந்திரங்களைப்போலவும் செயல்படும் ஒரு காலத்தின் விசித்திரங்களையும் புதிர்களையும் இக்கவிதைகள் தீண்டுகின்றன. அதீத தொழில்நுட்ப வயப்பட்ட உலகில் புறம் என்பது இயற்கை காட்சிகள் அல்ல, நம்மைக் கட்டுப்படுத்தும் கண்ணுக்குத் தெரியாத அதிகார வலைப்பின்னல். அதுவே அரசியலாகவும் அந்தரங்கமாகவும் இருக்கின்றன. அதன் சாட்சியங்களே இக்கவிதைகள்.
[http://www.marymartin.com/web?pid=780911](http://www.marymartin.com/web?pid=780911)
--------------------------------------------------------------------------------

திருக்குறள் கதைகள்: திருக்குறளின் 133 அதிகாரங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 133 குறள்களுக்கு சிறுகதைகள்-133 படங்களுடன்…! = Tirukkuraḷ Kataikaḷ: Tirukkuraḷiṉ 133 Atikārankaḷiliruntu Tērnteṭukkappaṭṭa 133 Kuraḷkaḷukku Cirukataikaḷ-133 Paṭankaḷuṭaṉ...! / பி. எஸ். ஆச்சார்யா = Pi. Es. āccāryā
சென்னை: நர்மதா பதிப்பகம் = Narmatā Patippakam, Ceṇṇai, 2021
280p.; ills. 23 cm.
9788195329045
$ 12.50 / pb
390gm.

Short Stories
[http://www.marymartin.com/web?pid=800059](http://www.marymartin.com/web?pid=800059)
--------------------------------------------------------------------------------

மிஸ் யூ: இந்த முறையும் இவ்வளவுதான் சொல்ல முடிந்தது = Mis Yū: Inta Muraiyum Ivvaḷavutāṇ Colla Muṭintatu / மனுஷ்ய புத்திரன் = Maṇuśya Puttiraṇ

சென்னை: உயிர்மை வெளியீடு = Uyirmai Veliyedu, Ceṇṇai, 2022
2288p.; 23 cm.
9789393650436
$ 137.50 / hb
2550gm.

Poetry
மனுஷ்ய புத்திரன் 2021 பிப்ரவரி 14 முதல் டிசம்பர் 25, 2021 வரை எழுதிய இக்கவிதைகள் நவீன தமிழ்க் கவிதையின் முகமாகவும், நாம் வாழும் காலத்தின் எண்ணற்ற ரகசியங்களின் நடனமாகவும் திகழ்கின்றன. இக்கவிதைகளில் பல சமூக வலைத்தளங்களில் வெளிவந்து மிகப்பெரிய அளவிற்கு ட்ரெண்டிங்காக மாறின. இளைய தலைமுறையினரின் வாட்ஸப் ஸ்டேஸ்களின் சுரங்கமாக இக்கவிதைகள் திகழ்கின்றன. தமிழில் மட்டுமல்ல, இந்தியாவிலோ ஏன் உலக அளவிலோ ஒரு நவீன கவிஞர் ஓராண்டில் இவ்வளவு கவிதைகளை எழுதியதில்லை.
**http://www.marymartin.com/web?pid=800060**
------------------------------------------------------------------------------------------
எழுதுதல் அவளின் சுதந்திரம்: நவீன இலக்கியங்கள், ஆளுமைகள் குறித்த கட்டுரைகள் = Elututal Avaḷiṇ Cutantiram: Navīṇa Ilakkiyankaḷ, āḷumaikaḷ Kuritta Kaṭṭuraikaḷ / ஜெ. சுடர்விழி = Je. Cuṭarvili
சென்னை: பரிசல் புத்தக நிலையம் = Parical Puttaka Nilaiyam, Ceṇṇai, 2021
114p.; 22 cm.
9789391949198
$ 6.00 / pb
200gm.

Literature
நல்ல வாசகர்களால், விமர்சகர்களால் மட்டுமே இலக்கியத் தரம் வாய்ந்த நூல்களை அடையாளம் காணவும், அடையாளப்படுத்தவும் முடியும். பேரா. சுடர்விழி ஆள் சார்ந்து மட்டுமே தன்னுடைய கூர்மையான விமரசனப் பார்வையை முன் வைத்திருக்கிறார்.
**http://www.marymartin.com/web?pid=800053**
------------------------------------------------------------------------------------------
தொல்காப்பியமும் அல்-கிதாப்பும் = Tolkāppiyamum Al-Kitāppum / த. சுந்தரராஜ் = Ta. Cuntararāj
நாகர்கோவில்: காலச்சுவடு பதிப்பகம் = Kālaccuvaṭu Patippakam, Nākarkōvil, 2021
255p.; 22 cm.
9789355231079
$ 16.25 / pb
340gm.

த. சுந்தரராஜ் உலகச் செம்மொழிகளின் முதல் இலக்கணங்களைத் தமிழின் தொல்காப்பியத்தோடு ஒப்பீடு செய்வதில் ஈடுபாடுடையவர். இந்நூலில் அறபு மொழியின் முதல் இலக்கணமாக விளங்கும் அல் -

கிதாப்பையும் (கி.பி. 800), தமிழின் முதல் இலக்கணமாக விளங்கும் தொல்காப்பியத்தையும் (கி.மு. 300 - 500) ஒலியியல் நோக்கில் ஒப்பிடுகிறார். காலம், இடம், மொழிக்குடும்பம் என அனைத்திலும் இருவேறு துருவங்களாக விளங்கும் இவ்விரு மரபிலக்கணங்களின் தனித்தன்மைக்குக் கொடுக்கும் அதே முக்கியத்துவத்தை, அவற்றிற்குள் உள்ள ஒற்றுமைக்கும் கொடுக்கிறார். அவ்வொற்றுமைக் கூறுகளின் வழி தமிழுக்கும் அறபுக்கும் உள்ள இலக்கண உறவிற்கான அகச்சான்றுகளைத் தேடுகிறார். தமிழுக்கும் அறபுக்கும் இடையில் நாம் கண்டடைந்த வாணிப உறவைத் தொடர்ந்து, இலக்கண உறவிற்கான இந்த மொழியியல் தேடுதல் மிகவும் முக்கியத்துவம் பெறுகிறது.
**http://www.marymartin.com/web?pid=800473**
-------------------------------------------------------------------------------------
தலைப்பில்லாதவை = Talaippillātavai / யுவன் சந்திரசேகர் = Yuvaṉ Cantiracēkar
நாகர்கோவில்: காலச்சுவடு பதிப்பகம் = Kālaccuvaṭu Patippakam, Nākarkōvil, 2021
494p.; 22 cm.
9789355230324
$ 27.50 / pb
540gm.

Novel
யுவன் சந்திரசேகரின் குறுங்கதைத் தொகுப்பான ‘மணற்கேணி' 2008இல் வெளிவந்தது. ஜனரஞ்சக இதழ்களில் பக்க நிரப்பிகளாகப் பயன்படுத்தப்பட்ட குறுங்கதை வடிவத்துக்கு சீரிய இலக்கிய குணத்தை அளித்த நூலாக மணற்கேணியைக் குறிப்பிடலாம். பதின்மூன்று ஆண்டுகளுக்குப் பின்பு வெளிவரும் இரண்டாவது குறுங்கதைத் தொகுப்பான ‘தலைப்பில்லாதவை’ முந்தைய நூலின் தொடர்ச்சியாகவும், விலகி அடைந்த வளர்ச்சியாகவும் காணப்படுகிறது. வரையறுக்கப்பட்ட பக்க அளவுக்குள் கச்சிதமான சொற்களால் உருவாக்கப்பட்ட கதைகள் என்ற அளவில் முன்னதன் தொடர்ச்சி. ஒரே பாத்திரத்தை மையமாகக் கொண்ட கதைகள் என்பதிலிருந்து மாறுபட்டுப் பல முகங்கள், பல குரல்கள் கொண்ட கதைகளாக அமைந்திருப்பது விலகல். முதல் தொகுப்பைவிட அதிகமான எண்ணிக்கையில் கதைகள் என்பது வளர்ச்சி. படிக்க சுவாரசியமானவை, படித்த பின் யோசிக்க வைப்பவை என்பன இரண்டு தொகுப்புகளுக்குமான பொதுமை.
**http://www.marymartin.com/web?pid=800477**
---------------------------------------------------------------------------------
ஐந்து வருட மௌனம் (சிறுகதைத் தொகுப்பு) = Aintu Varuṭa Mauṇam (Cirukatait Tokuppu) / எஸ். ராமகிருஷ்ணன் = Es. Rāmakiruśṇaṉ
சென்னை: தேசாந்திரி பதிப்பகம் = Tēcāntiri Patippakam, Ceṉṉai, 2021
406p.; 22 cm.
9788195393701

$ 20.00 / pb
500gm.

Short Stories
பிரார்த்தனை நடந்து கொண்டிருந்தது. அந்த முசாபரி பங்களாவின் வெளியே அதிகாலையில் இவ்வளவு பேர் கூடிவிடுவார்கள் என்று ராஜன் எதிர்பார்க்கவில்லை. காந்தியைக் காண்பதற்காகக் கிராமவாசிகள் திரண்டிருந்தார்கள். தினசரி காலை நான்கு மணிக்குப் பிரார்த்தனை செய்வது காந்தியின் வாழ்க்கையில் என்றும் மாறாத பழக்கமாக இருந்தது.
இன்னமும் சூரியன் உதயமாகவில்லை. இருளுக்குள்ளாகவே நடந்து கிராமவாசிகள் வந்திருந்தார்கள். இரண்டாயிரம் பேருக்கும் மேலிருக்கும். அதில் பாதிக்கும் மேல் பெண்கள்.
**http://www.marymartin.com/web?pid=800478**
------------------------------------------------------------------------------------------
டார்வினின் வால் = Tārviṉiṉ Vāl / தூயன் = Tūyaṉ
பொள்ளாச்சி: எதிர் வெளியீடு = Etir Veḷiyīṭu, Poḷḷācci, 2022
224p.; 22 cm.
9789390811496
$ 12.50 / pb
310gm.

Short Stories
கண்முன் காணும் இருப்பினைத் தாண்டி பயணிக்க விழைவிருந்தால்... இருப்பை இல்லாமலாக்குவதும், இன்மையை இருப்பாக மாற்றுவதும், மாய மற்றும் யதார்த்த உலகிற்குள் மாறி மாறி நமமை பயணிக்கச் செய்வதும், எது மாயம்? எது யதார்த்தம்? என்று புரியாமல் இரண்டின் எல்லையையும் கலைத்துப்போடும் சுழல் விளையாட்டும், வார்த்தைச்சுழலுக்குள் சுலபமாய் தொலைந்துபோய்விடும் சௌகர்யமும், இருப்பைக்குறித்த ஆய்வுக்குள் உருவாக்கப்படும் புதிர்களும், அவை அவிழ்ந்தும் அவிழாமலும் ஏற்படுத்தும் தவிப்பும் - இவ்வெழுத்தின் நிதர்சனம். ஒரு மாய உலகத்தை சிருஷ்டிக்க கற்பனைக்கு அப்பாற்பட்ட உலகத்திற்கு போகாமல் சாதாரண மக்களின் அன்றாடங்களையும், அவர்களின் உணர்வுகளுக்குள் விழும் முடிச்சுகளையும் அசாதாரண தருணங்களாக மாற்றி, இறுதியில் அவற்றைக் கலைத்தும்விடுகிறார் ஆசிரியர் வழுக்கி ஓடும் வார்த்தைகளைப் பிடித்து அதற்கு அர்த்தம் தேடாமல், அதன்மேல் ஏறி பயணிக்க வேண்டியது மட்டுமே நாம் செய்ய வேண்டியது. – சாந்தினிதேவி
**http://www.marymartin.com/web?pid=793984**
----------------------------------------------------------------------------
பறப்பன திரிவன சிரிப்பன = Parappaṉa Tirivaṉa Cirippaṉa / ஜான் சுந்தர் = Jāṉ Cuntar
நாகர் கோவில்: காலச்சுவடு பதிப்பகம் = kālaccuvaṭu patippakam, Nākar kōvil 2021

119p.; 22 cm.
9789390802715
$ 7.00 / pb
190gm.

Short Stories
ஜான் சுந்தர் கதைகளை வாசிக்கும்போது புலப்படும் முதன்மையான அம்சம் இவற்றில் உள்ளோடும் வெகுளித்தன்மை. தன்னைச் சுற்றி நடப்பவற்றை களங்கமற்ற விழிகளால் காணும் ‘அப்புராணி’ப் பார்வை. இந்த வெகுளித்தனம் கலைகிற நொடியில், அப்பாவிப் பார்வை கூர்ந்தகவனமாக மாறுகிற இடத்தில் நடப்புகள் கதைகளாக உருவம் கொள்கின்றன. இந்த இயல்பு காரணமாகவே கதைகள் புத்துணர்வளிப்பவை ஆகின்றன.
எளிய மனிதர்கள், எளிய உலகம், எளிய சம்பவங்கள் ஆகியவற்றுக்குப் பின்னால் மறைந்திருக்கும் எதிர்பாராத நிகழ்ச்சிகளை, அதிர்ச்சியடைய வைக்கும் நிஜங்களை இந்தக் கதைகள் துலங்கச்செய்கின்றன. மற்றும் பலராக இருப்பவர் வாழ்வில் வெளித்தெரியாத மற்ற பலதையும் பகிரங்கமாக்குகின்றன. சங்கடத் தருணங்களை நகை ஒளிரும் இழையில் கோர்க்கும் திறனை ஜான் சுந்தர் இந்தக் கதைகளில் இயல்பாக, எளிமையாக, புத்துணர்ச்சியுடன் வெளிப்படுத்துகிறார். புன்னகைக்கும் கண்ணீருடன் காலணியைத் திண்பண்டமாகச் சித்திரித்துக் காட்டும் ‘காரியக் கோமாளி’யின் கலைச் சாயல் ஜான் சுந்தரின் கைவரிசையில் மிளிர்கிறது.
[http://www.marymartin.com/web?pid=756516](http://www.marymartin.com/web?pid=756516)
---------------------------------------------------------------------------------------------
ஒளிரும் பச்சைக் கண்கள் = Oḷirum Paccaik Kaṇkaḷ / கார்த்திக் பாலசுப்ரமணியன் = Kārttik Pālacupramaṇiyaṉ
நாகர் கோவில்: காலச்சுவடு பதிப்பகம் = Kālaccuvaṭu Patippakam, Nākar Kōvil
2022
143p.; 22 cm.
9789355230836
$ 8.75 / pb
230gm.

Short Stories
சமகாலத்துப் படைப்பாளிகளில் வாசகனுக்கு நிறைவளிக்கும் மிகச்சில எழுத்தாளர்களுள் கார்த்திக் பாலசுப்ரமணியனும் ஒருவர். இவரின் கதைகளில் ஒரே வகையான களத்தையோ சித்திரிப்பையோ காண இயலாது. இவர் புதிய அழகியல் அம்சங்களுக்காகவோ வெறும் படிமங்களுக்காகவோ அல்லது மிகை புனைவுக்காகவோ முனைந்துபார்க்கும் எல்லைக்கு வெளியே அமர்ந்திருக்கிறார். யதார்த்தச் சித்திரிப்புகளின் மூலம் நித்திய மதிப்புமிக்க கதைகளை எழுதவல்லவராக மிளிர்கிறார். மிக எளிமையானதொரு கதைக்களத்தில் ஊடுருவித் துல்லியமான படைப்பை மொழிக்குக் கையளித்து விடுகிறார். தனது கதையுலகின் அலங்காரமற்ற

நேரடித்தன்மையையும், படைப்பின் மொத்த ஆகிருதியை வாசகனுக்கு ஊட்டிவிடத் துடிக்காத நுட்பத்தையும், பொறுமையையும் மகத்துவமான எழுத்தாளர் அசோகமித்திரனிடம் இருந்தே கார்த்திக் பாலசுப்ரமணியன் பெற்றுக்கொள்கிறார் எனக்கருதுகிறேன். 'ஒளிரும் பச்சைக் கண்கள்' புத்தாற்றலும் உத்வேகமும் கொண்டதொரு தலைமுறையின் அர்த்தபூர்வமானதும் அடர்த்திமிக்கதுமான பிரதி. மொழியும் படைப்பாளனும் பிரகாசிக்கட்டும்!
http://www.marymartin.com/web?pid=791707
--------------------------------------------------------------------------------
உடல் = Uṭal / அரிசங்கர் = Aricankar
பொள்ளாச்சி: எதிர் வெளியீடு = Etir Veḷiyīṭu, Poḷḷācci, 2022
120p.; 22 cm.
9789390811243
$ 7.50 / pb
210gm.

Short Stories
அரிசங்கர் கணினி வரைகலையார். புதுச்சேரியை சேர்ந்தவர். வேலை நிமித்தமாக தற்போது சென்னையில் வசிக்கிறார். பதிலடி மற்றும் ஏமாளி என்ற சிறுகதைத் தொகுப்புகளும், மாயப்படகு (சிறுவர் நாவல்), பாரிஸ் (குறுநாவல்). உண்மைகள் பொய்கள் கற்பனைகள் (நாவல்) வெளிவந்தன. இது இவரது மூன்றாவது சிறுகதைத் தொகுப்பு.
http://www.marymartin.com/web?pid=800061
--------------------------------------------------------------------------------
புவியீர்ப்புக் கட்டணம் = Puviyīrppuk Kaṭṭaṇam / அ. முத்துலிங்கம் = A. Muttulinkam
நாகர் கோவில்: காலச்சுவடு பதிப்பகம் = Kālaccuvaṭu Patippakam, Nākar Kōvil 2022
263P.; 22 cm.
9789355231710
$ 16.25 / pb
360gm.

Short Stories
அ. முத்துலிங்கத்தின் கதைகளில் சுவாரசியம் இருக்கிறது. எளிமை இருக்கிறது. நவீனம் இருக்கிறது. அங்கதம் இருக்கிறது. அவரது கதைப் புலங்கள் இலங்கை, இந்தியா, கனடா, அமெரிக்கா, ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், சூடான், சோமாலியா, சியாரா லியோன் என்று விரிகின்றன. அவரது கதை வெளியில் புலம்பெயர்ந்தோரின் அலைந்துழல்வும் அடையாளச் சிக்கலும் இருக்கிறது. தமிழ் இருக்கிறது. சர்வதேசியம் இருக்கிறது. உயிரிச் சமநிலை குறித்த அக்கறை இருக்கிறது. அவரது எழுத்துகள் வாசகனைக் கண்ணியப்படுத்துகின்றன. இவை எல்லாவற்றையும் விட முக்கியமாக அவரது கதைகளில் உண்மை இருக்கிறது. இந்த நம்பகத்தன்மை,

இந்தத் தொகை நூலில் உள்ள கதைகளை இன்னும் பல ஆண்டுகளுக்கு வாசகர்களின் மனத்திற்கு நெருக்கமாக வைத்திருக்கும்.
**http://www.marymartin.com/web?pid=800064**
-------------------------------------------------------------------------------------------
கருஞ்சிவப்பு ஈசல்கள் = Karuñcivappu īcalkaḷ / தமிழவன் = Tamilavaṉ
பொள்ளாச்சி: எதிர் வெளியீடு = Etir Veḷiyīṭu, Poḷḷācci, 2022
144p.; 22 cm.
9789390811663
$ 10.00 / pb
230gm.

Short Stories
இத்தொகுப்புக்கதைகள், இருபத்தொன்றாம் நூற்றாண்டின் அழகியல் கொண்ட கதைகள் இன்றைய கதைகள் என்பது உலகத் தரத்தில் இருக்க வேண்டும். அப்படி எழுதப்பட்ட கதைகள் இவை. உலகத்தரம் என்றால் ரேமண்ட் கார்வர், போர்ஹெஸ், இட்டாலோ கால்வினோ போன்றோர் எழுதும் கதைகளின் தரம் இருக்கவேண்டும்.
**http://www.marymartin.com/web?pid=800066**
-------------------------------------------------------------------------------------
அபிமானி (சிறுகதைகள்) = Apimāṇi (Cirukataikaḷ) / நீலம் = Nīlam
சென்னை: நீலம் வெளியீடு = Nīlam Veḷiyīṭu, Ceṉṉai, 2022
150p.; 22 cm.
$ 10.00 / pb
250gm.

Short Stories
கவிதை, நாவல், சிறுகதை உள்ளிட்ட புனைவு வடிவங்களில் தனக்கெனத் தனித்துவமான இடத்தை நிறுவிக்கொண்டவர் எழுத்தாளர் அபிமானி, தொண்ணூறுகளில் உருவான தலித் எழுச்சியையொட்டி, தலித் வாழ்வை யதார்த்தவாதப் புனைவு முறையியலாக்கியவர்களில் குறிப்பிடத்தகுந்தவர்.
**http://www.marymartin.com/web?pid=800067**
--------------------------------------------------------------------------------------
நரையன் = Naraiyaṉ / தமிழ்க்கவி = Tamilkkavi
இந்தியா: நடு வெளியீடு = Naṭu Veḷiyīṭu, Intiyā, 2022
128p.; 22 cm.
9786249847132
$ 7.00 / pb
200gm.

Short Stories
"இன்றுவரை எந்தப் பெண்ணும் தன் மனதைத்திறந்ததில்லை. அதை ஒரு ஆண்தான் திறந்துபார்க்கிறான். காதலனாகவோ கணவனாகவோ உள்ள ஒருவரிடம் தன் அந்தரங்கத்தை வெளிவிட்டுவிடும் பெண்ணை அவர்களது வாக்குமூலங்களை வைத்தே தானே அதுவாக எழுதியோ, பேசியோ விடுகிறார்கள்.

http://www.marymartin.com/web?pid=800068
------------------------------------------------------------------------------------
பைசாசத்தின் எஞ்சிய சொற்கள் = Paicācattiṉ Eñciya Corkaḷ / காலபைரவன் = Kālapairavaṉ
பொள்ளாச்சி: எதிர் வெளியீடு = Etir Veḷiyīṭu, Poḷḷācci, 2022
112p.; 22 cm.
9789390811755
$ 7.50 / pb
200gm.

Short Stories
இந்த ஆறு கதைகளும் ஏதோவொரு வகையில் நம் அன்றான வாழ்வின் துககங்களை, போதாமைகளை, வீழ்ச்சிகளை, சடுதியில் திரிந்து விடும் உறவுகளை மீண்டும் விசாரணை செய்ய நம்மைத் தூண்டிக் கொண்டே இருக்கின்றன. கூர்ந்து நோக்கினால் வலியின் சங்கீதத்த சுமந்து திரியும் கதாபாத்திரங்கள் கதை நெடுகிலும் பயணித்தபடி இருப்பதை எளிதில் உணர்ந்து கொள்ள முடியும். - காலபைரவன்
http://www.marymartin.com/web?pid=800069
------------------------------------------------------------------------------------
சோளம் = Cōḷam / சந்திரா தங்கராஜ் = Cantirā Taṅkarāj
பொள்ளாச்சி: எதிர் வெளியீடு = Etir Veḷiyīṭu, Poḷḷācci, 2022
352p.; 22 cm.
9789390811007
$ 20.00 / pb
450gm.

Short Stories
சந்திராவின் சிறுகதைத் தொகுப்பு இது. கதைகள் முழுக்க வெக்கை மிகுந்த வாழ்வின் நசநசப்பையும் குரூரத்தையும் மிக மிக அருகிருந்தும் அனுபவித்தும் எழுதியிருக்கிறார். முல்லைப் பெரியாறு நதியிலிருந்து இரு கை நிறைய தண்ணீரை அள்ளிக்கொண்டு ஒரு சொட்டுகூடச் சிந்தாமல் ஐந்நூறு கிலோ மீட்டர் தொலைவு கடந்து வந்து சென்னையில் சேர்த்ததுபோல் இருக்கின்றன இவரது கதைகள்.
http://www.marymartin.com/web?pid=789976
------------------------------------------------------------------------------------
விலாஸம் = Vilāsam / பா. திருச்செந்தாழை = Pā. Tiruccentālai
பொள்ளாச்சி: எதிர் வெளியீடு = Etir Veḷiyīṭu, Poḷḷācci, 2022
216p.; 22 cm.
9789390811915
$ 13.75 / pb
310gm.

Short Stories
பா. திருச்செந்தாழை: ஆ. மாதவனின் சாலைத்தெருக் கதைகள் போன்றவை திருச்செந்தாழையின் மண்டிக் கதைகள். மண்டி

வாழ்க்கை மட்டுமன்றி, உறவுச் சிக்கல்களை வெகுநுட்பமாக வடிக்கும் இவரது புதிய சிறுகதைத் தொகுப்பு ‘விலாஸம்’
http://www.marymartin.com/web?pid=791706
--------------------------------------------------------------------------------------
உமா மகேஸ்வரி கதைகள்: இதுவரையிலான சிறுகதைகள் = Umā Makēsvari Kataikaḷ: Ituvaraiyilāṇa Cirukataikaḷ / உமாமகேஸ்வரி =Umāmakēsvari
திருவண்ணாமலை: வம்சி புக்ஸ் = Vamci Puks, Tiruvaṇṇāmalai, 2021
680p.; 22 cm.
9789393725158
$ 35.00 / pb
830gm.

Short Stories
உமா மகேஸ்வரி தன் சமகாலத்தில் எழுதிக்கொண்டிருக்கிற பெண் படைப்பாளிகளுள் தனித்துத் தெரிவதில் முக்கிய இடத்தை தனக்கெனத் தக்கவைத்துக் கொண்டிருக்கிறார்.
http://www.marymartin.com/web?pid=800071
--------------------------------------------------------------------------------------------
கொரோனா திருவிளையாடல் (சிறுகதைத் தொகுப்பு) = Korōṇā Tiruviḷaiyāṭal (Cirukatait Tokuppu) / கி. நடராசன் = Ki. Naṭarācaṇ
சென்னை: சிந்தன் புக்ஸ் = Cintaṇ Puks, Ceṇṇai, 2022
174p.; 22 cm.
$ 7.50 / pb
270gm.

Short Stories
கொரோனா தனிமை சிவபெருமானை வாட்டி வதைத்தது. தன் பக்த கோடிகளைக் காண முடியாமல், அவர்களின் புலம்பல்களை, அல்ப கோரிக்கைகளை, மகிழ்ச்சிகளை, பெரும் துயரங்களைக் கேட்க முடியாமல் இருட்டு அறையில் முரட்டுத் தனமாய் அடைக்கப்பட்டு இருப்பது போன்ற அவருக்கு தோன்றியது.
பக்தர்கள் இருந்தாலாவது தனக்கு தட்டில் தட்சணைகளை அதிகமாக விழும் என்று படைக்கும் பட்சணங்களை நீண்ட நேரம் வைத்துக் கொண்டு வழியும் வியர்வை பூணூலை இழுத்து இழுத்து துடைத்துக் கொண்டு இருப்பான்.
http://www.marymartin.com/web?pid=800073
-----------------------------------------------------------------------------------
உயிரச்சம் = Uyiraccam / ரவிச்சந்திரன் அரவிந்தன் = Raviccantiraṇ Aravintaṇ
திருவண்ணாமலை: வம்சி புக்ஸ் = Vamci Puks, Tiruvaṇṇāmalai, 2021
312p.; 22 cm.
9789384598549
$ 15.00 / pb
420gm.

Short Stories

மனிதரின் கருணை முகத்தையும் கள்ள முகத்தையும் ஒருசேர அடையாளம் காட்டியது ஒரு படைப்பாளியாக இந்தக் காலத்தைத் தன் கதைகளில் பதிவு செய்திருக்கிறார் அரவிந்தன்.
**http://www.marymartin.com/web?pid=800075**
--------------------------------------------------------------------------------------

விருந்து = Viruntu / கே. என். செந்தில் = Kē. Eṇ. Centil
நாகர் கோவில்: காலச்சுவடு பதிப்பகம் = Kālaccuvaṭu Patippakam, Nākar Kōvil, 2021
191p.; 22 cm.
9789355230775
$ 12.00 / pb
260gm.

Short Stories
தம் ரத்த உறவுகளின் மீது உயிரனைய நேசம் வைத்திருக்கும் எளிய மனிதர்களின் ஈரச் சித்திரம் இத்தொகுப்பின் பெரும்பான்மையான கதைகளில் தீட்டப்பட்டுள்ளது. குறைவான சொற்களில் பாத்திரங்களின் அகநிலைகள் சாத்தியப்படுத்தப்பட்டுள்ள கலை அமைதி கூடிய இந்தக் கதைகளில் சிறார் உலகின் பரிசுத்தம், பெண்களின் நிகழ் - கடந்த காலத் துயர், குடும்ப அமைப்பில் ஆண்களின் புற - அக நெருக்கடிகள், முதியவர்களின் நோய்மை படிந்த தனிமை, அதிகாரத்தின் முன் சாதாரணமானவர்கள் ஒன்றுமில்லாமல் ஆக்கப்படுதல், பாலியல் விருப்பு, மீறல் ஆகியவை நம் மனத்தின் சமன் குலையும் விதத்தில் பதிவாகியுள்ளன. இத்தொகுப்பில் ‘முடிவு’ கதையைக் கடக்க முடியவில்லை. நழுவும் வேட்டியைக் கட்டிக்கொண்டே ஆஸ்பத்திரிக்கு மகளைத் தூக்கிச் செல்லும் தகப்பனைப் பற்றிய இக்கதை கே. என். செந்திலின் கலைஉச்சம் என்று கூறலாம்.
**http://www.marymartin.com/web?pid=791902**
-------------------------------------------------------------------------------------------

புலி உலவும் தடம் = Puli Ulavum Taṭam / மு. குலசேகரன் = Mu. Kulacēkaraṇ
நாகர் கோவில்: காலச்சுவடு பதிப்பகம் = Kālaccuvaṭu Patippakam, Nākar Kōvil, 2021
143p.; 22 cm.
9789391093570
$ 8.75 / pb
200gm.

Short Stories
குலசேகரனின் கதையாக்க இயல்பு சில இலக்கிய அடிப்படைகளைச் சுட்டிக் காட்டுகிறது. படைப்புத்தான் முதன்மையானது. அதன் வாயிலாகவே படைப்பாளி அறியப்பட வேண்டும் என்பதை உணர்த்துகிறது. படைப்புச் செயல் வடிவம் பெற்றதும் படைப்பாளியிடமிருந்து விலகித் தனித்து நிலைகொள்கிறது என்பதை எடுத்துக்காட்டுகிறது.

http://www.marymartin.com/web?pid=780985
-----------------------------------------------------------------------------------------------
**Politics**

நவீன தமிழகம்: மொழி, மதம், அடையாளம் = Navīṇa Tamilakam: Moli, Matam, Aṭaiyāḷam / ரவி வைத்தீஸ்வரன், ரா. ஸ்தனிஸ்லாஸ் = Ravi Vaittīsvaraṇ, Rā. Staṇislās
சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்= Niyū Ceñcuri Puk Havus (P) Liṭ, Ceṇṇai, 2021
268p.; 22 cm.
9788123441757
$ 13.50 / pb
310gm.

நவீனகால தமிழ் உலகில் தோன்றி வளர்ச்சி பெற்று பல்வேறு இயக்கங்களும் பண்பாட்டு அரசியலும், குறிப்பாக மதம், மொழி, இனம், தேசியம் போன்ற இயக்கங்களைப் புரிந்து கொள்வதற்கு இங்கு ஐரோப்பிய காலனிய காலத்தில் நடைபெற்ற முக்கிய அறிவியல் கலாசார மாற்றங்களை கணக்கில் எடுத்துக் கொள்வது அத்தியாவசியம்.
http://www.marymartin.com/web?pid=799965
-----------------------------------------------------------------------------
எங்கள் விருப்பத்திற்கு எதிராக = Enkaḷ Viruppattirku Etirāka / ஸர்மிளா ஸெய்யித் = Sarmiḷā Seyyit
பொள்ளாச்சி: எதிர் வெளியீடு = Etir Veḷiyīṭu, Poḷḷācci, 2022
117p.; 22 cm.
9789390811595
$ 7.50 / pb
200gm.

கூர்மையான அரசியல் பார்வையுடன் ஸர்மிளா ஸெய்யித் எழுதிய சமகாலக் கட்டுரைகளின் இரண்டாவது தொகுப்பு.
அரசியல் – மதம் – கலாசாரம் – உடல் என அனைத்தின்மீதுமான விமர்சனங்கள், கேள்விகளை பெண்ணியப் பார்வையில் அணுகுவதில் வலுவான தனித்துவத்தை நிறுவமுயலும் மொழி நடையை இந்தக் கட்டுரைகளுக்குத் தேர்வு செய்திருக்கிறார்.
மரபுக்கு வெளியிலான கட்டமைப்பு மாற்றங்களின் பாலின விளைவுகளையும், சமூக அரசியல் போக்குகளை மாற்றியமைத்த பெண்களின் பங்கை மதிப்பீடாகவும் பாராம்பரிய ஒடுக்குதல் குணாதியங் கொண்ட அரசியலில் பெண் உடலில் நிகழ்த்தப்பட்ட வன்முறைகளின் ஆய்வாகவும் இந்தத் தொகுப்பின் கட்டுரைகள் உள்ளன.
http://www.marymartin.com/web?pid=799962
-------------------------------------------------------------------------

இன்குலாப் கட்டுரைகள் (இன்குலாப் கட்டுரைகள் முழுத்திரட்டு)-2 தொகுதிகள் = Iṇkulāp Kaṭṭuraikaḷ Tokutikaḷ (Iṇkulāp Kaṭṭuraikaḷ Muluttiraṭṭu) - 2 Tokutikaḷ / இன்குலாப் = Iṇkulāp
தஞ்சாவூர்: அன்னம் வெளியீடு = Aṇṇam Veḷiyīṭu, Tañcāvūr 2021
1254p.; 23 cm.
$ 60.00 / hb
1800gm.

கவிதை மொழிக்குச் சொந்தக்காரர் இன்குலாப். அவரது உரைநடை மொழியில் கவிதை மொழியின் தாக்கங்களை காணமுடிகிறது. உரைநடை வடிவத்திற்கு உகந்த சிறுசிறு கதைகள், நிகழ்வுகள் ஆகியவற்றை எள்ளல் பாங்கிலும் உருவகப் பாங்கிலும் இந்தக் கட்டுரைகளில் வெளிப்படுத்தியதைக் காண்கிறோம். இன்குலாப் என்ற கவிஞரின் இன்குலாப் என்ற இன்னொரு வளமான கொடையாக அவரது கட்டுரைகள் உள்ளன.
http://www.marymartin.com/web?pid=791705
------------------------------------------------------------------------------------------
மீண்டும் தாலிபன்: மதமே மந்திரம் = Mīṇṭum Tālipaṇ: Matamē Mantiram / பா. ராகவன் = Pā. Rākavaṇ
சென்னை: எழுத்து பிரசுரம் = (Zero degree/Ezhuthu Pirasuram), Ceṇṇai, 2021
564p.; 22 cm.
9789391748197
$ 34.00 / pb
640gm.

பா. ராகவனின் 'மீண்டும் தாலிபன்' Bynge App-இல் தொடராக வெளிவந்து லட்சக் கணக்கான வாசகர்களால் கொண்டாடப்பட்டது. பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் வெளியான தாலிபன் நூலின் தொடர்ச்சியாகவும், தன்னளவில் ஒரு முழுமையான அரசியல் வரலாற்று ஆவணமாகவும்
திகழ்வதே இந்நூலின் சிறப்பம்சம்.
1996 முதல் 2001 வரை தாலிபன்கள் ஆப்கனிஸ்தானை ஆண்டார்கள். அல்லாவே அலறும்படியான முல்லாக்களின் ஆட்சியாக அது இருந்தது. ஆப்கனின் மிக நீண்ட ரத்த சரித்திரத்தில் அது ஒரு அழிக்க முடியாத கறை.
பிறகு 9/11 சம்பவம். அமெரிக்கப் படையெடுப்பு. மீண்டும் ஒரு ஆப்கன் யுத்தம். முல்லா முஹம்மது ஓமர் இறந்தார். ஒசாமா சுட்டுக் கொல்லப்பட்டார். தாலிபன்கள் அழிக்கப்பட்டுவிட்டதாகச் சொன்னார்கள். அனைத்தும் பொய். இன்றைக்கு மீண்டும் தாலிபன்கள் ஆப்கன் அதிகார பீடத்தைக் கைப்பற்றிவிட்டார்கள்.
http://www.marymartin.com/web?pid=800448
----------------------------------------------------------------------------------
இலங்கையின் இனவரைவியலும் மானுடவியலும் = Ilankaiyiṇ Iṇavaraiviyalum Māṇuṭaviyalum / க. சண்முகலிங்கம் = Ka. Caṇmukalinkam
சென்னை: சந்தியா பதிப்பகம் = Cantiyā Patippakam, Ceṇṇai, 2021

216p.; 22 cm.
$ 11.00 / pb
360gm.

இலங்கையின் இனவரையியலும் மானிடவியலும் என்னும் பொதுத் தலைப்பில் பதினைந்து கட்டுரைக்களைத் தாங்கிவரும் இந்நூல் இலங்கையின் சிங்கள தமிழ்ச் சமூகங்களின் சாதிக்கட்டமைப்பு பற்றிச் சமூகவியல், மானிடவியல் அடிப்படையில் விரிவாக எடுத்துரைக்கிறது. இலங்கையின் தென்பகுதிக் கரையோர மாகாணங்களினதும் கண்டி, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, மலையகம் ஆகிய பகுதிகளினதும் சாதியமைப்பை ஒப்பீட்டு முறையில் புரிந்துகொள்ள இந்நூல் துணைசெய்கிறது.
**http://www.marymartin.com/web?pid=800452**
---------------------------------------------------------------------------------

தேசியமும் திராவிடமும் = Tēciyamum Tirāviṭamum / துரை கருணா = Turai Karuṇā
சென்னை: எம். ஜி. ஆர். பாசறை = Em. Ji. ār. Pācarai, Ceṉṉai, 2022
200p.; ills. 22 cm.
$ 15.00 / pb
290gm.

1806-ஆம் ஆண்டு வேலூர் கோட்டையில் நிகழ்ந்த வேலூர் புரட்சிப்படையினரின் புரட்சியில் ஆரம்பித்து இன்று வரை நிகழ்ந்த இருநூறு ஆண்டுகளுக்கும் மேற்பட்ட அரசியல் நிகழ்வுகளை, ஜனநாயகம் கடந்து வந்த பாதையைசில பக்கங்களில் படம்பிடித்துக் காண்பித்திருக்கும் மூத்தப் பத்திரிக்கையாளரும், திராவிட இயக்க ஆய்வாளரும், அன்புச் சகோதரருமான திரு. துரை கருணா அவர்களின் படைப்பு பாராட்டுதலுக்கும், போற்றுதலுக்கும் உரியது".
**http://www.marymartin.com/web?pid=790232**
--------------------------------------------------------------------

நாட்டார் வழக்காற்றியல் அரசியல் = Nāṭṭār Valakkārriyal Araciyal / ஆ. சிவசுப்பிரமணியன் = ā. Civacuppiramaṇiyaṉ
சென்னை: பரிசல் புத்தக நிலையம் = Parical Puttaka Nilaiyam, Ceṉṉai, 2021
84p.; 22 cm.
9789391949686
$ 4.50 / pb
170gm.

வெகு மக்களிடையே வழங்கும் வழக்காறுகளே நாட்டார் வழக்காறுகள். இவ்வழக்காறுகளை மையமாகக் கொண்டு உருவான அறிவுத்துறையே நாட்டார் வழக்காற்றியல். எல்லாவற்றிலும் ஓர் அரசியல் உள்ளது என்ற பொதுவான கூற்றிற்கு ஏற்ப நாட்டார் வழக்காற்றியல் என்ற அறிவுத்துறையிலும் அரசியல் உள்ளது.
**http://www.marymartin.com/web?pid=800052**
-------------------------------------------------------------------------------------------

**Religion - Hinduism**

மனோன்மணியம்மை வழிபாடும் இராவணேஸ்வரன் பூசை கதைப்பாடல் பதிப்பும் = Maṇōṇmaṇiyammai Valipāṭum Irāvaṇēsvaraṇ Pūcai Kataippāṭal Patippum / சு. செல்வகுமாரன் = Cu. Celvakumāraṇ
சென்னை: காவ்யா பதிப்பகம் = Kāvyā Patippakam, Ceṇṇai, 2021
x, 134p.; 22 cm.
9789393358141
$ 7.50 / pb
280gm.

முனைவர் சு. செல்வகுமாரன், குமரி மாவட்டம் தெற்குறிச்சியைச் சேர்ந்தவர். அண்ணாமலைப் பல்கலைக்கழக தமிழியல் துறையில் பணியாற்றி வந்தவர். தற்போது அரசின் குறுகியகால பணியிட மாற்றக் கொள்கையினால் தமிழ் உயராய்வு மையம், அரசு கலைக் கல்லூரி, பரமக்குடியில் இணைப்பேராசிரியராகப் பணியாற்றி வருகின்றார்.
**http://www.marymartin.com/web?pid=800440**
---------------------------------------------------------------------------------------------
ரங்க ராஜ்ஜியம்: யுகங்கள் கடந்த திருவரங்கத்தின் முழுமையான வரலாறு! = Ranka Rājjiyam: Yukankaḷ Kaṭanta Tiruvarankattiṇ Mulumaiyāṇa Varalāru! / இந்திரா சௌந்தர்ராஜன் = Intirā Cauntarrājaṇ
சென்னை: விகடன் பிரசுரம் = Vikaṭaṇ Piracuram, Ceṇṇai, 2021
432p.; ills. 24 cm.
9788195164769
$ 32.50 / hb
920gm.

மண்ணுலகின் வைகுந்தம் என ஆன்மிக அன்பர்களால் போற்றிப் புகழப்படும் திருத்தலமாகவும், எண்ணியதும் புண்ணியம் தரும் அருட்தலமாகவும் திகழ்வது ரங்கம். 108 வைணவத் திருத்தலங்களில் முதன்மைத் தலம் எனும் பெருமை பெற்ற அத்திருத்தலத்தில் சயனக் கோலம் கொண்டு சகல உயிர்களுக்கும் அருள்புரிந்துகொண்டிருக்கிறார் அரங்கநாதர். யுக யுகங்களுக்கு முன்னால் தன்னிலிருந்து பிரம்மனைப் படைத்த பரம்பொருளான திருமால், பிரம்மாவின் தவத்தால் பிரணவாகார விமானத்துடன் சத்ய லோகத்தில் தோன்றி பின்னர் பூவுலக ரங்கத்தில் நிலைகொண்டார். சத்யலோகத்தில் காட்சி தந்த எம்பெருமான் இப்பூவுலகுக்கு எப்படி, யாரால் வந்தார், ரங்கத்தில் நிலைகொள்ளும் முன்னர் வேறு எவ்விடத்தில் அருள்பாலித்துக்கொண்டிருந்தார் என்பதை விவரித்து சக்தி விகடனில் ‘ரங்க ராஜ்ஜியம்' எனும் தலைப்பில் இந்திரா சௌந்தர்ராஜன் எழுதிய முதல் பாகத்தின் தொகுப்பு இந்நூல். பிரணவாகாரப் பெருமான் மண்ணுலகுக்கு வந்தது முதல் சில நூற்றாண்டுகள் வரை அரங்கன் ஆலயம் சந்தித்த சம்பவங்கள் வரை இந்த முதல் பாகம் சொல்கிறது. ஓர் ஊழிப் பெருவெள்ளத்தால் மூழ்கடிக்கப்பட்டு சில காலம் மண்ணுள் மறைந்திருந்த அரங்கன்

ஆலயம் எப்படி வெளிப்பட்டது? அதன்பின் நிகழ்ந்த அரங்கனின் மகிமைகள், ரங்கம் ஆலயம் தொடர்பான நிகழ்வுகள் சரித்திரத்தில் எவ்வாறெல்லாம் பதிந்துள்ளன என்பதை தன் வசீகர எழுத்து நடையால் இந்த ரங்க ராஜ்ஜியத்தில் வடித்துத் தந்திருக்கிறார் இந்திரா சௌந்தர்ராஜன். இனி அரங்கனின் அற்புதங்களை அறிந்து அவன் அருளைப் பெற வாருங்கள்.
**http://www.marymartin.com/web?pid=800441**
-----------------------------------------------------------------------------------------
மாசாணியம்மன் வழிபாடு (கோவை சொக்கம்புதூர் தேவேந்தரர்களின் குலதெய்வம்) = Mācāṇiyammaṇ Valipāṭu (Kōvai Cokkamputūr Tēvēntararkaḷiṇ Kulateyvam) / தே. ஞானசேகரன் = Tē. ñāṇacēkaraṇ
சென்னை: காவ்யா = Kāvyā, Chennai 2021
xiv, 398p.; ills. 22 cm.
$ 21.00 / pb
520gm.

கோவை சொக்கம்புதூரில் வாழும் தேவேந்திரர்களின் குலதெய்வம் என்னும் துணைத் தலைப்புடன் வெளிவந்திருக்கும் நூல் மாசாணியம்மன் வழிபாடு. மாசாணியம்மன் வழிபாடு பற்றி தெரிவிப்பதற்கு முன், பழங்காலம் முதல் இருந்து வரும் சிறுதெய்வ வழிபாட்டையும் தொன்மத்தையும் விளக்குகிறது. பெருந்தெய்வ வழிபாட்டிற்கும், சிறுதெய்வ வழிபாட்டிற்கும் உள்ள வேறுபாடுகளையும், தெய்வ நம்பிக்கையுடன் கூடிய சடங்குகளின் விளக்கங்களையும் வரையறுக்கிறது.
கொங்குநாட்டில் வாழும் தேவேந்திர குல வேளாளர் வரலாற்றைத் தெளிவுபடுத்துகிறது. மாசாணியம்மன் தொடர்பான கதைகளையும், கதைப் பாடல்களையும், போற்றிப் பாடல்களையும் தேவைப்படும் இடங்களில் எல்லாம் பயன்படுத்தியுள்ளது.
**http://www.marymartin.com/web?pid=780422**
-----------------------------------------------------------------
கோரிக்கை நிறைவேற்றும் கோயில்கள் = Kōrikkai Niraivērrum Kōyilkaḷ / ந. பரணிகுமார் = Na. Paraṇikumār
சென்னை: சூரியன் பதிப்பகம் = Cūriyaṇ Patippakam, Chennai 2022
271p.; 22 cm.
9788195167968
$ 10.00 / pb
360gm.

பூமிக்கு அதிபதியான செவ்வாய்க் கிரகத்தின் அதிதேவதை வாராஹி. எனவே இந்த அன்னையைத் தரிசிக்க விவசாயத்தில் விளைச்சல் பெருகும். வாராஹியின் எண்கரங்களுக்குள் ஒன்றில் ஏர்கலப்பையை தாங்கி நிற்பதால் விவசாயிகளுக்கு விளைச்சல் பெருகும்.
**http://www.marymartin.com/web?pid=799988**
-----------------------------------------------------------------------

கேட்டதும் கொடுக்கும் காஞ்சித் தலங்கள்: 558 காஞ்சி மாவட்ட சைவ வைணவத் தலங்கள் (தாம்பரம், செங்கல்பட்டு, உத்திரமேரூர், மதுராந்தகம், செய்யூர், திருப்போரூர், திருக்கழுக்குன்றம் வட்டங்களை உள்ளடக்கியது) = Kēṭṭatum Koṭukkum Kāñcit Talankaḷ: 558 Kāñci Māvaṭṭa Caiva Vaiṇavat Talankaḷ (Tāmparam, Cenkalpaṭṭu, Uttiramērūr, Maturāntakam, Ceyyūr, Tiruppōrūr, Tirukkalukkuṇram Vaṭṭankaḷai Uḷḷaṭakkiyatu) / கே. சாய் குமார் = Kē. Cāy Kumār
சென்னை: கே. சாய் குமார் = Kē. Cāy Kumār, Chennai 2021
528p.; 22 cm.
$ 14.50 / pb
290gm.
http://www.marymartin.com/web?pid=799989
------------------------------------------------------------------------------------
அனந்தனுக்கு ஆயிரம் நாமங்கள் - பாகம் 1 = Aṇantaṇukku āyiram Nāmankaḷ - Pākam 1 / உ. வே. வேங்கடேஷ் = U. Vē. Vēnkaṭēś
சென்னை: சூரியன் பதிப்பகம் = Cūriyaṇ Patippakam, Chennai 2022
327p.; 22 cm.
9788195167975
$ 12.50 / pb
420gm.

வேதங்களைத் தொகுத்தவரும், மகாபாரதம், பிரம்ம சூத்திரம், பதினெட்டுப் புராணங்கள் உள்ளிட்டவற்றை அருளியவருமான வேத வியாசர், பல முனிவர்கள் இறைவனைப் புகழ்வதற்காகப் பயன்படுத்திய இறைவனின் திருப்பெயர்களுள் ஆயிரம் திருப்பெயர்களைத் தொகுத்து, அதை ஒரு துதியாக வழங்கினார்.
http://www.marymartin.com/web?pid=799991
--------------------------------------------------------------
சிவாலயங்களும் சிவகங்கை வாவிகளும் = Civālayankaḷum Civakankai Vāvikaḷum / குடவாயில் பாலசுப்ரமணியன் = Kuṭavāyil Pālacupramaṇiyaṇ
தஞ்சாவூர்: அன்னம் = Aṇṇam, Tañcāvūr, 2021
280p.; ills. 22 cm.
12.50 / pb
370gm.

Biography
இந்நூலின் ஆசிரியரான முதுமுனைவர் குடவாயில் பாலசுப்பிரமணியன் 1948 ஆம் ஆண்டு திருவாரூர் மாவட்டத்து குடவாசலில் பிறந்தவர். விலங்கியல் துறையில் அறிவியல் இளங்கலைப் பட்டம் பெற்று பின்னர் வரலாற்றுத் துறையில் எம்.ஏ., எம்ஃபில் பட்டங்களையும், கோயிற் கட்டடக் கலையில் முனைவர் பட்டமும் பெற்றவர். 2016ஆம் ஆண்டில் சாஸ்திரா பல்கலைக் கழகத்தின் முதுமுனைவர் பட்டமும் பெற்றவர்.
http://www.marymartin.com/web?pid=799992
-------------------------------------------------------------------
தெய்வமே சாட்சி = Teyvamē Cāṭci / ச. தமிழ்ச்செல்வன் = Ca. Tamilccelvaṇ

சென்னை: பாரதி புத்தகாலயம் = Pārati Puttakālayam, Ceṇṇai, 2022
160p.; 22 cm.
$ 7.50 / pb
240gm.

இரண்டு காரணங்களால் இப்புத்தகம் சமகால முக்கியத்துவம் பெறுகிறது. 60க்கும் மேற்பட்ட பெண் தெய்வங்களின் தோற்றக் கதைகளைச் சேகரித்துத் தொகுத்துள்ள ஆசிரியர் ஒவ்வொரு கதையையும் முன்வைத்துச் சமகாலத்துப் பெண்களின் நிலையோடு இணைத்து ஒரு விவாவதத்தைத் தூண்டுகிறார். மதங்களின் பிடியிலிருந்து மக்களை விடுவிக்க வேண்டுமானால் மதங்களின் வரலாற்றை மக்களுக்குப் போதிக்க வேண்டும் என்கிற மார்க்சிய வழியில் நின்று இத்தெய்வக் கதைகளைக் கற்றுக்கொள்வதும் மக்களிடம் பரவலாக்கி உரையாடல்களைத் தூண்டுவதும் நமது கடமை.
http://www.marymartin.com/web?pid=796185
---------------------------------------------------------------------------
சிவகாசித் தெய்வங்கள் = Civakācit Teyvankaḷ / சு. சண்முகசுந்தரம், த. இரத்தினமாலா = Cu. Caṇmukacuntaram, Ta. Irattiṇamālā
சென்னை: காவ்யா பதிப்பகம் = Kāvyā Patippakam, Ceṇṇai, 2021
xii, 272p.; 22 cm.
$ 15.00 / pb
390gm.

அய்யா நாராயணசாமி, கூடமுடைய அய்யனார். ஆதிபுத்திரங்கொண்ட அய்யனார், ஆனந்த உத்தண்ட சாமி, வீரப்பெருமாள், தவமுனீஸ்வரர், பொன் இருளப்பசாமி, தோப்பு கருப்பசாமி, முத்தையா சாமி, ஆறுமுகதம்பிரான், மாரியம்மன், பேச்சியம்மன், பத்ரகாளியம்மன், அங்காள பரமேஸ்வரி, மாலையம்மன், வடக்கத்தியம்மன், கிச்சம்மாள், சக்கம்மாள், பெத்தனாட்சியம்மன், முத்துமாரியம்மன் - என இருபதுக்கும் மேற்பட்ட தெய்வங்களைப் பற்றி முப்பது ஆய்வாளர்களின் கட்டுரைகள் அடங்கிய நூல்.
http://www.marymartin.com/web?pid=799801
---------------------------------------------------------------------------
தேவார மாண்பும் ஓதுவார் மரபும் = Tēvāra Māṇpum ōtuvār Marapum / குடவாயில் பாலசுப்ரமணியன் = Kuṭavāyil Pālacupramaṇiyaṇ
தஞ்சாவூர்: அன்னம் = Aṇṇam, Tañcāvūr, 2021
525p.; ills. 25 cm.
$ 40.00 / hb
1320gm.

பாலசுப்ரமணியன் (முனுசாமி பாலசுப்ரமணியன்) குடவாயிலில் 1948ஆம் ஆண்டு செப்டம்பர் 22ஆம் நாளில் பிறந்தவர். வரலாறு, தொல்லியல் கலையியல் வல்லுநரான இவருக்கு தருமை ஆதினம்

"திருக்கோயிற் கலைச் செல்வர்" என்ற விருதும் தமிழக அரசு "உ.வே. சா"" விருதும், தமிழாயம் "ஆனந்தகுமாரசாமி" விருதும் அளித்து கௌரவித்தன.
http://www.marymartin.com/web?pid=800419
------------------------------------------------------------------------------------------------
**Sociology**

மூன்றாவது விழியின் முதலாவது பார்வை: பெண்ணியச் சிந்தனைகளும் படைப்புகளும் = Mūṇrāvatu Viliyiṇ Mutalāvatu Pārvai: Peṇṇiyac Cintaṇaikaḷum Paṭaippukaḷum / சா. தேவதாஸ்= Cā. Tēvatās
சென்னை: பரிசல் புத்தக நிலையம் = Parical Puttaka Nilaiyam, Ceṇṇai, 2021
200p.; 22 cm.
9789391949457
$ 10.00 / pb
320gm.

சா. தேவதாஸ் தமிழ் எழுத்தாளரும், மொழிபெயர்ப்பாளரும், விமர்சகரும் ஆவார். பபானி பட்டாச்சார்யாவின் "லடாக்கிலிருந்து கவிழும் நிழல்" என்ற நாவலை ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு மொழிபெயர்த்ததற்காக 2014ஆம் ஆண்டின் சிறந்த மொழிபெயர்ப்புக்கான சாகித்திய அகாதமி விருது இவருக்கு வழங்கப்பட்டது. விருதுநகர் மாவட்டம் நடையனேரியைச் சேர்ந்த சா. தேவதாஸ் இராசபாளையத்தில் வசித்து வருகிறார். 1975 - 77 காலகட்டத்தில் மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் தமிழ் இலக்கியத்தில் முதுகலை பயின்ற இவர் கூட்டுறவுத் துறையில் பணிபுரிந்து ஓய்வுபெற்றவர். இதுவரை இருபத்தைந்து நூல்களை மொழிபெயர்த்திருப்பதோடு ஆறு கட்டுரை நூல்களையும் எழுதியுள்ளார்.
http://www.marymartin.com/web?pid=800435
------------------------------------------------------------------------------------
தலித்துகள் பெண்கள் தமிழர்கள் = Talittukaḷ Peṇkaḷ Tamilarkaḷ / க. பஞ்சாங்கம் = Ka. Pañcānkam
சென்னை: பரிசல் புத்தக நிலையம் = Parical Puttaka Nilaiyam, Ceṇṇai, 2021
421p.; 22 cm.
9789391949334
$ 21.25 / pb
550gm.

சமத்துவமின்மையைத் தன் அடிப்படை ஆதாரமாகக் கொண்ட இந்தியச் சாதி முறை ஒரு குழுவிற்கான-ஒரு பகுதிக்கான- நலத்தை மட்டும் மையமிட்டு வடிவமைக்கப்பட்ட சதியாக இருக்கிறது. இதனால் பெரும் பயனடையும் இந்தக் குழு, நீட்ஷே சொன்னதுபோல 'குறிக்கோளை அடைக; அடைந்ததை நிரந்தரமாக்குக' என்ற அணுகுமுறையைக் கையாண்டு நிரந்தரமாக்கிக்கொண்டது.
http://www.marymartin.com/web?pid=800437

-----------------------------------------------------------------------------------------
தாழப்பறக்காத பரத்தையர் கொடி = Tālapparakkāta Parattaiyar Koṭi / பிரபஞ்சன் = Pirapañcaṉ
சென்னை: டிஸ்கவரி பப்ளிகேஷன்ஸ் = Tiskavari Papḷikēśaṉs, Ceṉṉai, 2021
160p.; 22 cm.
9789384302078
$ 9.00 / pb
240gm.

நாம் வாழும் சமூகம், மனிதர்கள் சுயமரியாதையோடும், மனிதத் தனத்தோடும் வாழத் தக்கதாக இருக்கிறதா என்றால் இல்லை. சக மனிதன் பற்றிய புரிதல், பரிவு, அன்பு அனைத்தும் குறைந்து வருவதுகூட இல்லை, முரண்பட்டு வருவதுகூட இல்லை பகைக்கும்-நிலைக்கும் செலுத்தப்பட்டிருக்கிறார்கள் என்பது எனக்கு மிகவும் கவலை தருகிறது. சமூகம் என்கிற திரள் உணர்வு குறைந்து விட்டது. அந்தந்த காலத்தில் என்னைப் பெரிதும் பாதித்த விஷயங்களின் எதிர்வினையே இக்கட்டுரைகள். இப்போது திரும்பிப் படிக்கையில் எனக்கு மிகவும் திருப்தியாகவே இருக்கிறது.
எழுத்துக்களில் மட்டுமல்ல. எல்லாத் தொழிலுக்கும் அடிப்படைப் பண்பாக இருப்பது ‘அறம்’. என் அளவில் இக் கட்டுரைகள் என் அறம்.
**http://www.marymartin.com/web?pid=799960**
-----------------------------------------------------------------------
காலத்தின் சிற்றலை: கட்டுரைத் தொகுப்பு = Kālattiṉ Cirralai: Kaṭṭurait Tokuppu / எஸ். ராமகிருஷ்ணன் = Es. Rāmakiruśṇaṉ
சென்னை: தேசாந்திரி பதிப்பகம் = Tēcāntiri Patippakam, Ceṉṉai 2021
188p.; 23 cm.
9789393099082
$ 9.00 / pb
270gm.

பா ஜின்., பால் வான் ஹெய்ஸே, ஐரின் நெமிரோவ்ஸ்கி, பில்லி காலின்ஸ், ரெட் பைன், லி போ, கென்ஸாபுரோ ஓயி ஜெய் பரினி, ஷெரீப் எஸ். எல்முசா, எமிதால் மஹ்மூத், ஹெலன் ஹான்ஃப். ஜே.டி. சாலிஞ்சர், எடுவர்டோ காலியானோ வில்லியம் சரோயன், போஹுமில் ஹ்ரபால், பீட்டர் செமோலிக் என உலக இலக்கியத்தின் முக்கியப் படைப்பாளிகள் பற்றிய கட்டுரைகளின் தொகுப்பு
**http://www.marymartin.com/web?pid=799961**
-----------------------------------------------------------------------------
இதற்குப் பெயர்தான் பார்ப்பனியம் = Itarkup Peyartāṉ Pārppaṇiyam / ஜெயராணி = Jeyarāṇi
பொள்ளாச்சி: எதிர் வெளியீடு = Etir Veḷiyīṭu, Poḷḷācci, 2022
320p.; 23 cm.
9789390811786
$ 20.00 / pb
470gm.

பார்ப்பனியத்தை விமர்ச்சித்தால் பார்ப்பனர்களுக்கு மட்டுமல்ல; இந்துமத ஆதிக்க அடிமை சித்தாந்தத்தில் ஊறிப் போன பார்ப்பனர் அல்லாதோருக்கும் கோபம் வருவதால் பல முற்போக்காளர்கள் கூட, நாங்கள் அந்த கருத்தியலைத் தான் எதிர்க்கிறோம்; பார்ப்பனர் என்ற இனத்தவரை அல்ல என்று விளக்கமளிக்கின்றனர்.
**http://www.marymartin.com/web?pid=799963**
-------------------------------------------------------------------------------------
கலாச்சாரக் கவனிப்புகள் = Kalāccārak Kavaṇippukaḷ / சச்சிதானந்தன் சுகிர்தராஜா = Caccitāṇantaṇ Cukirtarājā
நாகர்கோவில்: காலச்சுவடு பதிப்பகம் = Kālaccuvaṭu Patippakam, Nākarkōvil, 2021
255p.; 22 cm.
9789391093136
$ 15.00 / pb
300gm.

யாழ்ப்பாணக் கச்சேரியடியில் 'இவ்விடத்தில் துப்பாதீர்கள்' என்று அறிவிப்பு எழுதிவைத்தால் 'எந்த மானமுள்ள யாழ்ப்பாணத்தானும் துப்பத்தான் செய்வான்' என்று எழுதும் எள்ளலும் தள்ளலும் கொண்ட இவருடைய தமிழ் எழுத்துக்காகவே கலைத்துப் பிடித்து நட்பானேன். ஆழமும் விரிவும் மாத்திரமல்ல புன்னகையுடனும் படிக்கக்கூடிய எழுத்துநடை கைவரப் பெற்றவர்.
சச்சிதானந்தன் சுகிர்தராஜா வள்ளுவன் குறிப்பிட்ட நுண் மான் - நுழை புலம். தான் சார்ந்த துறையில் பெரிய ஆளுமை. இவர் துறைசார்ந்த அறிஞர்கள் அறிந்த பெருந்தகை. வாழையடி வாழையாக வரும் இலங்கைப் புலமை மரபில் வரும் இவர் மற்ற புலமையாளர்களைப் போல் தான் சொல்லவாற விடயத்தை முறைத்தபடியோ விறைத்தபடியோ சொல்லாமல் சிரித்துக்கொண்டு உறைக்கச் சொல்லும் எள்ளல் ததும்பும் புதுநடைக்குச் சொந்தக்காரர்.
**http://www.marymartin.com/web?pid=784436**
-----------------------------------------------------------------------------------
அறத்துக்கு அப்பால் நீளும் அத்துமீறல்: சமூக ஊடகங்களும் இடைவெளிகளும் = Arattukku Appāl Nīḷum Attumīral: Camūka ūṭakankaḷum Iṭaiveḷikaḷum / ஆரூர் பாஸ்கர் = ārūr pāskar
சென்னை: எழுத்து பிரசுரம் = (Zero degree/Ezhuthu Pirasuram), Ceṇṇai 2022
216p.; 22 cm.
9789391748784
$ 13.00 / pb
330gm.

இன்றைக்குச் சமூக ஊடகம் இல்லாத கைகள் இல்லை, மனங்கள் இல்லை. காலை எழுந்து படுக்கையிலிருந்து கீழிறங்குவதற்கு முன்பு தொடங்கி மீண்டும் இரவு தூங்கச்செல்லும் கணத்துக்கு முன்புவரை சமூக ஊடகங்கள் நம்முடன் உறவாடுகின்றன. இந்தச் சமூக ஊடகங்களில் புழங்கும் முறை குறித்தும் அதன் வாயிலாக ஏற்படும்

அக, புறச் சிக்கல்கள் குறித்தும் தனி மனித அறம் குறித்துமான கேள்விகளை எழுப்பும் ஆரூர் பாஸ்கரின் இந்நூல் நம்மை ஒழுங்கு செய்துகொள்ளவும், அதன் மூலமாக மெய்நிகர் வெளியில் சுதந்திரமாக உலவுவதற்குமான சாத்தியங்களை உணர்த்துகிறது. இன்றைய காலகட்டத்தில், மெய்யில்லாத மெய்நிகர் உலகில் நாம் கையாள வேண்டிய அறத்தைப் பற்றிய அவசியம் என்ன என்பதற்கான விடையை இந்நூலை வாசிப்பதன் மூலம் நாம் அறியலாம்.
சமூக ஊடகங்கள் பற்றி மேலும் தெரிந்துகொள்ள ஆரூர் பாஸ்கருடைய 'சோஷியல் மீடியா- இது நம்ம பேட்டை' என்கிற இன்னொரு நூலையும் வாசிக்கலாம். சமூக ஊடகங்கள் நம்மை ஆளாமல் நாம் அவற்றை ஆள்வது எப்படி என்று எளிமையாகவும் தெளிவாகவும் விளக்கும் அக்கறையான கையேடு இது!
http://www.marymartin.com/web?pid=800376
-----------------------------------------------------------------------------------------
தமிழகத்தில் சாதிகள் (சாதிக்கலப்பும் புதிய சாதிகள் உருவாக்கமும்) = Tamilakattil Cātikaḷ (Cātikkalappum Putiya Cātikaḷ Uruvākkamum) / தீ. ஹேமமாலினி = Tī. Hēmamāliṇi
சென்னை: தடாகம் வெளியீடு = Taṭākam Veḷiyīṭu, Chennai, 2021
125p.; ills. 22 cm.
9788195268825
$ 7.50 / pb
250gm.

இந்நூலானது தமிழ்ச் சமூக உருவாக்கத்தில் சாதியத்தின் தோற்றம். வளர்ச்சி. வரலாறு. மிக முக்கியமாக சாதிக்கலப்பும் புதிய சாதிகள் உருவாக்கம் பற்றி இந்நூல் பேசுகிறது. சங்ககாலம் தொடங்கி களப்பிரர் காலம், பல்லவர் காலம், சோழர்கள் காலம், பாண்டியர்கள் காலம், விசயநகர பேரரசுக் காலம், ஐரோப்பியர் காலம், அயலவர் வருகையும் இனக்கலப்பும். புலப் பெயர்வும் இனக்கலப்பும், புதிய சாதிகள் உருவாக்கம். சாதிகளின் தோற்றத் தொன்மம் பற்றி நீண்டு பேசுகிறது. சங்ககாலத்தில் ஒவ்வொரு திணையிலும் 4-5 திணைக்குடிகள் நிலைகுடிகளாக வாழ்ந்தனர். ஆசு ஐந்து திணைகளிலும் ஏறக்குறைய 20-25 நிலைகுடிகளே வாழ்ந்து வந்துள்ளனர்.
http://www.marymartin.com/web?pid=800456
-----------------------------------------------------------------------------------
சாதி சமயம் சமுதாயம் = Cāti Camayam Camutāyam / சி. இராஜாராம் = Ci. Irājārām
சென்னை: காவ்யா பதிப்பகம் = Kāvyā Patippakam, Ceṇṇai, 2022
xii, 391p.; 22 cm.
$ 20.00 / pb
560gm.

தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி வட்டம், மோளை யானூர் கிராமத்தைச் சேர்ந்த சின்னசாமி-வெள்ளச்சி தம்பதியினருக்கு

நான்காம் மகனாகப் பிறந்தவர். இவரும் இராஜலட்சுமி என்ற பெண்ணும் இரட்டையர்கள். இவருக்கு லதா என்ற மனைவியும் தமிழழகன், ஜனனி, முத்தமிழ் முதல்வன் ஆகிய பிள்ளைகளும் உள்ளனர். தற்பொழுது இவர் குடும்பத்தினருடன் பாப்பிரெட்டிப்பட்டியில் வசித்து வருகிறார்.
**http://www.marymartin.com/web?pid=800457**

--------------------------------------------------------------------------------

சாதி எனும் பெருந்தொற்று: தொடரும் விவாதங்கள் = Cāti Eṇum Peruntorru: Toṭarum Vivātankaḷ / மு. சங்கையா = Mu. Cankaiyā
சென்னை: சிந்தன் புக்ஸ் = Cintaṇ Puks, Ceṇṇai, 2021
287p.; 22 cm.
9788195383009
$ 15.00 / pb
440gm.

"நீ என்ன சாதி...? இந்தக் கேள்வியை நேரடியாகவோ, மறைமுகமாகவோ, நுட்பமாகவோ, நுணுக்கமாகவோ சந்திக்காத ஒரு இந்துவை நீங்கள் எங்கேயாவது சந்தித்தது உண்டா? தம்பிக்கு எந்த ஊர். என்ன பெயர் என்பது போல என்ன சாதி என்பது இயல்பான எளிதானக் கேள்வி  அல்ல. அது ஒரு துலாக்கோல். ஒரு இந்துவின் ஆதி அந்தமும் சாதி எனும் துலாக்கோல் கொண்டு எடை பார்த்து அவனது சமூகப் படிநிலையைக் கணக்கிட்டு, அவனை நட்பாக்கிக் கொள்வதா அல்லது தூரத்தில் நிறுத்துவதா என்பதை அந்தக் கேள்விக்குக் கிடைக்கும் விடையே தீர்மானிக்கிறது. எதிரே நிற்பவனின் சாதியைப் பொறுத்து அந்தக் கேள்வி அடுத்த வடிவம் எடுக்கிறது. பட்டியல் இனமாக  இருந்தால் அந்தக் கேள்வியே  அவனை சாய்த்து விடுகிறது. ஒரு மந்திரக் கயிறால் கட்டிப் போட்டது போன்ற நிலைக்கு அவன் தள்ளப்படுகிறான்.  நாம் சாதி பற்றி அறியாதவராக, சாதிப் பெருமைப் பற்றி பேசாதவராக, அதைப் புறக்கணிப்பவராக இருந்தாலும், சாதி நமக்குள் திணிக்கப்படுகிறது. நாம்  மனிதனாக வாழ நினைத்தாலும் சாதி நம்மை விடுவதாயில்லை. நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் ஒரு இந்து என்பவன் ஒரு சாதியின் அடையாளத்துடன் தான் இந்த சமூகத்துக்குள் உலவ வேண்டி வருகிறது..."
**http://www.marymartin.com/web?pid=800460**

--------------------------------------------------------------------------------

பெருந்தொற்று = Peruntorru / ஷாராஜ் = śārāj
சென்னை: எழுத்து பிரசுரம் = (Zero degree/Ezhuthu Pirasuram), Ceṇṇai, 2021
360p.; 22 cm.
9789390884247
$ 21.50 / pb
470gm.

உலகைப் புரட்டிய பேரதிர்வுகளைத் தந்த, இன்னும் தீராத கொடுந்துயர் - கொரோனா பெருந்தொற்று. இந் நூற்றாண்டின் மகா பேரழிவுகளில்

ஒன்றான அது, தனி மனித நிலை, குடும்பச் சூழல், சமூகம், அரசியல், அன்றாட வாழ்வு, பண்பாடு உள்ளிட்ட பல்வேறு தளங்களிலும் கடுமையான தாக்கத்தையும், சீர்குலைவுகளையும் ஏற்படுத்திவிட்டது. இந்தப் பெருங்கொள்ளை இந்தியாவில் பெரும் பாதிப்புகளை உண்டாக்கிக்கொண்டிருந்த 2020-ஆம் ஆண்டு முற்பகுதியில், அதை மையப்படுத்தி நிகழ்ந்த, மத ரீதியான கலவரச் சூழலும் மறக்க முடியாதது. கொந்தளிப்பு மிகுந்த அந்த நாட்களில், ஒரு நூற்றாண்டு காலத்திற்கு மேலாக நல்லிணக்கத்திற்கு சிறந்த முன்னுதாரணமாகத் திகழ்ந்துவந்த தமிழக குக்கிராமம் ஒன்றில் ஏற்பட்ட கொடூரமான விளைவுகளைச் சித்தரிக்கிறது இந்த நாவல்.
**http://www.marymartin.com/web?pid=781152**
--------------------------------------------------------------------------------
தொடரும் நிழலாய் = Toṭarum Nilalāy / இல. அம்பலவாணன் = Ila. Ampalavāṇaṇ
சென்னை: காவ்யா பதிப்பகம் = Kāvyā Patippakam, Ceṇṇai, 2022
xiv, 114p.; 22 cm.
$ 6.50 / PB
230gm.

Sociology
அம்பலவாணன் ஒரு சமூக செயல்பாட்டாளர். சமூகவியல் துறையில் முனைவர் பட்டமும், சட்டமும் பயின்ற அவர். சமூகத் தொண்டாற்றும் துறையை தன்னார்வத்துடன் தேர்ந்தெடுத்துக் கொண்டு கடந்த முப்பது ஆண்டுகளாக மக்கள் பணியாற்றிவருகிறார். குறிப்பாக வறுமை, சமூக ஏற்றத்தாழ்வுகள், பெண்கள் மற்றும் விளிம்புநிலையில் உள்ள மக்கள் மேம்பாட்டுக்காக தன் பணியை அர்ப்பணித்து தொடர்ந்து சமூக செயல் பாட்டாளராக இயங்கும் அவர்.
**http://www.marymartin.com/web?pid=800035**
--------------------------------------------------------------------------------
அடங்க மறு = Aṭanka Maru / ஸர்மிளா ஸெய்யித் = Sarmiḷā Seyyit
சென்னை: நீலம் பதிப்பகம் = Nīlam Patippakam, Ceṇṇai, 2022
257p.; 22 cm.
$ 15.00 / pb
420gm.

Feminism
"இயல்பாய் கிடைக்க வேண்டியதை எல்லாம் போராடிப் பெற வேண்டியிருப்பதைத் தன் வாழ்வனுபவங்களிலிருந்து பொதுச் சமூகத்தையும் முற்போக்குச் சமூகத்தையும் சமரசமின்றி கேள்விக்குட்படுத்துகிறார் ஸர்மிளா ஸெய்யித்".
**http://www.marymartin.com/web?pid=796186**
--------------------------------------------------------------------------------
தமிழ்நாட்டில் பிற மதங்கள் = Tamilnāṭṭil Pira Matankaḷ / சிகரம் ச. செந்தில்நாதன் = Cikaram Ca. Centilnātaṇ
சென்னை: சந்தியா பதிப்பகம் = Cantiyā Patippakam, Ceṇṇai, 2021

144p.; 22 cm.
$ 7.50 / pb
250gm.

Essays
உலகில் உள்ள எல்லா மதங்களுக்கும் சில ஒற்றுமைகள் உண்டு. வேற்றுமைகளும் உண்டு. சமணமும் பவுத்தமும் தவிர அனைத்து மதங்களும் கடவுளை ஏற்றுக் கொள்கின்றன. ஆனால் சமணமும் பவுத்தமும் கடவுள் இருப்பதாக ஒப்புக் கொள்ளவில்லை. அதே சமயம் கடவுள் மறுப்புப்
பிரச்சாரத்தையும் மேற்கொள்ளவில்லை. இதை கவனத்தில் கொள்ள வேண்டும். சமணமும் பவுத்தமும் துன்பத்தில் துடிக்கும் மனித குலத்தை எப்படி மீட்பது என்றே சிந்தித்தன. கடவுள் மறுப்புதான் பிரச்சினைகளுக்குத் தீர்வு என்று அவை கருதவில்லை.
**http://www.marymartin.com/web?pid=800418**
------------------------------------------------------------------------------------------
பெண்களின் ஆடை வரலாறும் அரசியலும் = Peṇkaḷiṉ āṭai Varalārum Araciyalum / சிந்துஜா = Cintujā
சென்னை: பாரதி புத்தகாலயம் = Pārati Puttakālayam, Ceṉṉai, 2021
111p.; ills. 22 cm.
$ 5.00 / pb
250gm.

ஆடைகளின் வரலாற்றை மட்டும் தொகுத்துக்கூறும் நூல் அல்ல இது. ஆணும் பெண்ணும் இன்று உடுத்தும் ஆடை வகைகளின் தோற்றத்துக்கும் வடிவமைப்புக்கும் பின்னால் இருக்கிற சமூகப் பொருளாதாரக் காரணங்களையும் ஆணாதிக்கக் கருத்தியலையும் உரிய ஆதாரங்களுடன் உடைத்துப் பேசும் நூலாக இருக்கிறது. முழுமையான உழைப்பைச் செலுத்திப் பொருத்தமான அவ்வக்காலப் படங்களைத் தேடி எடுத்து அந்தந்த இடங்களில் வைத்து விளக்குகிற ஒரு முழுமையான நூலாகவும் விளங்குகிறது.
**http://www.marymartin.com/web?pid=800434**
------------------------------------------------------------------------------------------